
www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் கவணத்துக்கு
# முகவரி மற்றத்தைக் குறித்துக் கொள்ளவும்

**P.RAYAKARAN**
**32 RUE TROUILLET DEREL**
**92600 ASNIERES SUR SEINE**
**FRANCE**

இணையத்தில் (இன்ரநெற்றில்) சர்வதேசிய தோழமையை பலப்படுத்த

✍ வர்க்கம், சாதியம், பெண்ணியம், தேசியம், நிறம், மதம், பண்பாடு, கலாச்சாரம், இசை, சுற்றுச் சூழல் ... என சமுதாயத்தின் அனைத்து விடையங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் பக்கங்கள் இவை. சமுதாய விடுதலையை அடிப்படையாகவும், உண்மைகளை ஆதாரமாகம் கொண்டு சர்வதேச நிகழ்வுகளை பகுத்தாய்வு செய்யும் உங்கள் பக்கங்கள் இவை. இதில் பங்கு கொள்ள உங்களையும் அழைக்கின்றோம்.

இணையத் தொடர்பு ☞ **http://tamil-caste-race-class-nation-feminism-literature-culture.org/**

✷ Eஆணாதிக்கமும் பெண்ணியமும் (இணையத்தில் கட்டுரைகளை பார்வையிட முடியும்)

கார்ல் மார்க்ஸ்சின் மூலதனம் ஐந்து பாகத்தையும் பெற விரும்புபவர்கள் 325 பிராங்கையும், தபால் செலவையும் அனுப்பி பெறமுடியும்.

மக்கள் கலை இலக்கிய கழகத்தின் பாடல் கசெட்டுகளைப் பெற விரும்புபவர்கள், கசெட்டுக்கு 25 பிராங் வீதம் அனுப்பி பெறமுடியும்.

7வது பாடல் கசெட் : ஆண்ட பரம்பரையா அடிமைப் பரம்பரையா
8வது பாடல் கசெட் : காவி இருள்
9வது பாடல் கசெட் : வசந்தத்தின் இடி முழக்கம்
10வது பாடல் கசெட் : பாரதிதாசன் பாடல்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கம்யூனிசத்தை நோக்கி வர்க்கப் போராட்டத்தை தொடர்வதா? இல்லையா? என்பதே, ஸ்டாலின் பற்றி, மார்க்சியம் முன்னிறுத்தும் ஆய்வுரையாகும்.

ஸ்டாலின் பற்றிய இவ் இதழை கொண்டு வரவேண்டிய அளவுக்கு வரலாற்றுச் சூழல் கோருகின்றது. மக்களின் நலன்களை கைவிட்டு ஓட்டம் பிடிக்கும் அரசியல் போக்கில், தொற்றிக் கொள்வோர் ஸ்டாலின் மீதான தாக்குதலை குவிக்கின்றனர். மார்க்சியத்தை பாதுகாத்து, அதன் புரட்சிகரமான பாத்திரத்தை மீள முன்னிறுத்தும் எனது போராட்டத்தில், கோட்பாட்டு ரீதியாக முகம் கொடுக்க முடியாதவர்கள், ஸ்டாலின் ஊடாக தாக்குதலை நடத்துகின்றனர். மறு பக்கத்தில் எனக்கூடாக


ஸ்ராலின் -லெனின்

ஸ்டாலின் மீது அவதூறு பொழிவது அதிகாரித்துள்ளது. ஸ்டாலின் 1930 களின் இறுதியில் இழைத்த தவறுகளை, மார்க்சியவாதிகளாகிய நாங்கள் எப்போதும் விமர்சித்து வந்துள்ளோம். அதேநேரம் ஸ்டாலின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், அதில் வர்க்கப் போராட்டத்தை தொடர்வதில் உறுதியாக இருந்த வரலாற்று பாத்திரத்தை எப்போதும் பாதுகாப்பதில், நாம் உறுதியானவர்கள். அன்று குருசேவ், ஸ்ராலினை "கொலைகாரன்", "குற்றவாளி", "சூதாடி", "கொடுங்கோலன்", சர்வாதிகாரி", எனப் பலவாக இவற்றை விரிவாக்கி இழிவாக அவதூறு செய்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை குழிதோண்டி புதைத்தான். ஆனால் லெனின் தனது தலைமையில் உருவாக்கிய ஸ்டாலின் போன்ற தலைவர்களை பற்றி "வரலாற்றில் எந்த ஒரு வர்க்கமும் தனது அரசியல் தலைவர்களை - ஒரு இயக்கத்தைக் கட்டி அதற்கு தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லக் கூடிய புகழ்பெற்றச் சிறந்த தனது பிரதிநிதிகளை- உருவாக்காமல் அரசியல் அதிகாரத்தை வென்றதில்லை" என்றார் மேலும் அவர் "அனுபவமிக்க பெரும் செல்வாக்கு பெற்ற கட்சித் தலைவர்களை பயிற்றுவிப்பது என்பது நீண்ட காலம் பிடிக்கக்கூடிய கடினமான பணியாகும். ஆனால் இதில்லாமல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற அதன் 'ஒன்றுபட்ட விருப்பம்' என்பது ஒரு வெற்றுச் சொல்லாகவே இருக்கும்" என்றார். பாட்டாளி வர்க்க தலைவரான ஸ்டாலின் மீதான அவதூறுகள் முதல் அவரின் தவறுகளை அரசியல் ரீதியாக இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

ஸ்டாலின் பற்றிய ஆய்வுகளில் வர்க்கப் போராட்டத்தை தொடர்வது தொடர்பானதாகவும், அதை மக்கள் திரள் பாதை ஊடாக சாதிப்பதும் என்ற அரசியல் எல்லையில்தான், ஸ்டாலின் சரியான பக்கங்கள் மற்றும் தவறுகள் இனம் காணப்பட்டு, அவதூறுகள் வேறுபிரித்து அம்பலம் செய்ய வேண்டியுள்ளது. வர்க்கப் போராட்டம் பற்றி மாக்ஸ் கூறினார் "எழுச்சியும் போரும் மற்றக் கலைகளைப் போலவே ஒரு கலையாகும். அது சிற்சில செயல்முறை விதிகளுக்கு உட்பட்டதாகும். அவ்விதிகளைப் புறக்கணித்தால், அப்படிப் புறக்கணிக்கும் கட்சிக்குச் சீரழிவுதான் ஏற்படும்" என்றார். தீர்க்கமான அரசியல் ரீதியான ஆய்வுரையாகும். எழுச்சியும், போரும் மட்டுமல்ல அதை வென்று முன்னெடுக்கும் கட்டுமானத்தில் தொடர்வதும் கூட, இந்த நியதிக்கு பொருத்தமானது. சோசலிச சமூகத்தை கட்டுவது, அதை பாதுகாப்பது, முன்னேற்றுவது, புரட்சியை தொடர்வது என்ற இடைவிடாத புரட்சிகளை, புறக்கணிக்கும் எல்லா





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலையிலும் சீரழிவுதான் அதன் விளைவாகும். புரட்சியை "இடைவிடாது" தொடர்வதை நிராகரிக்கும், எல்லா "நிரந்தரமான" இயங்கியல் மறுப்பு வாய்வீச்சும், இறுதியில் சீரழிவில் முடியும். இடைவிடாத புரட்சிக் கலையை கற்றுக் கொள்ளாத, கற்றுக் கொடுக்காத அரசியல், இயங்கியல் மறுப்பில் முடங்கி சீரழிவை விழைவாக்கும். லெனின் புரட்சியை பற்றி என்ன கூறுகின்றார் எனப் பார்ப்போம். "... முதல் வெற்றியை நீங்கள் போராடி அடையவேண்டும் பிறகு வெற்றியிலிருந்து வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டும், எதிரியின் குழப்பத்தைச் சாதகமாக எடுத்துக் கொண்டு, எதிரியை எதிர்த்தத் தாக்குதலை என்றுமே நிறுத்திவிடக்கூடாது" என்று மார்க்ஸ்சின் அடிப்படையை அடிப்படையாக கொண்டு விளக்கினர்.



லெனின் ஒரு புரட்சியை நடத்த முன்பு கூறினார் "வர்க்கப் போராட்டத்தை மட்டும் ஏற்பவர்கள் மார்க்சியவாதிகள் ஆகிவிடமாட்டார்கள்... வர்க்கப் போராட்டத்தை ஏற்பதை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்பதுவரை விரித்துச் செல்பவனே மார்க்சியவாதியாவன்." என்றார். புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடர்ந்து நடத்த, யார் விரித்து சொல்லுகின்றார்களோ, அவர்கள் தான் மாரக்சியவாதிகள். இல்லாத அனைவரும் மாக்சியத்தின் எதிரிகள் ஆவர். சோவியத் புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில், மார்க்சியவாதி யார் என்பதே, எல்லாவற்றையும் விட அடிப்படையான கேள்வியாகின்றது. வர்க்க புரட்சியை நடத்தியவர்களும், பாட்டாளி வாக்க சர்வாதிகாரத்தை ஏற்பவர்களும் அல்ல, மாறாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ், புரட்சியை தொடர்ந்து நடத்தபவனே மார்க்சியவாதியாகின்றான். இதை மறுப்பவன் மாக்சியவாதியாக இருப்பதில்லை. இது என்? என்பதற்கு கம்யூனிஸ் கட்சி அறிகையில் இருந்து பார்ப்போம். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் "பாட்டாளி வர்க்கத்தை ஆளுவர்க்கத்தின் நிலைக்கு உயர்த்துவது, ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் வெற்றி பெறுவது என்பதுதான் உழைக்கும் மக்களின் போராட்டத்தின் முதல் நடவடிக்கையாகும்." என்று தெளிவுபடவே விளக்ககின்றது. சோசலிச புரட்சியின் கடமைகளை நிறைவு செய்ய, வர்க்கப் போராட்டத்தை ஏற்று பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்பதும், அதை நடைமுறை படுத்துவதும் போதுமானது. ஆனால் கம்யூனிச சமூகத்தை நோக்கி முன்னேறுவதற்கு இவை இரண்டும் போதுமானது அல்ல. மாறாக இதன் கீழ் புரட்சியை தொடர்வதை ஏற்று, அதை நடைமுறை படுத்துபவனே மார்க்சியவாதியாகின்றான். சோசாலிச சமூகத்தில் இவைதான் மார்க்சியவாதிக்கும், திரிபு வாதத்துக்கும் இடையில் உள்ள அடிப்படையான வேறுபட்ட அரசியல் உள்ளடக்கமாகும். இதற்குள் தான் முதலாளித்துவ மீட்சி தன்னை மீள் அமைக்கின்றது. லெனின் "ஒடுகாலி காவுஸ்கி" என்ற நூலில் "எல்லா நாடுகளிலும் புரட்சியை வளர்க்கவும் ஆதரிக்கவும் எழச்செய்யவும் வேண்டி, ஒரு நாட்டில் உயர்ந்தபட்சம் இயன்றது அனைத்தையும் செய்தல்" வேண்டும் என்றார். இதைச் செய்ய மாறுக்கின்ற யாரும் மார்க்சிய வாதியாக இருக்க முடியாது. ஒரு நாட்டின் புரட்சியை தொடர்வது, பாதுகாப்பது தலையாய வர்க்கக் கடமையாகும்.



கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் "பொதுவுடைமையாளர்கள் பாட்டாளி வர்க்கத்தின் உடனடியான குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகப் போராடுகிறார்கள்; அவ்வப்போதைய நலன்களை நடைமுறைப்படுத்துவதற்காகப் போராடுகிறார்கள்; ஆனால் நிகழ்கால இயக்கத்தில் அவர்கள் அவ்வியக்கத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்காலத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்; அதன்மீது கவனம் செலுத்துகிறார்கள்." இதை மறுப்பது பாட்டாளி வர்க்கத்துக்கு துரோகம் செய்வதாகும். புரட்சியை எதற்காக ஒரு கட்சி தனது வர்க்கம் சார்ந்து நடத்தகின்றதோ, அதை தொடர மறுப்பது அக் கட்சியின் அல்லது நபரின் சீரழிவை பிரகடனம் செய்வதாகும்.

லெனின் புரட்சி என்றால் என்ன என்பது பற்றி "உண்மையில், மார்க்சியப் பார்வை நிலையில் புரட்சி என்பது என்ன? காலாவதியாகிவிட்ட அரசியல் மேற்கட்டுமானத்தை வலிமையைக் கொண்டு இடித்துத் தள்ளுவது..." என்றார். ஒரு புரட்சியின் சரியான விளைவை, அதன் தகர்வில் தெளிவுபட லெனின் விளக்கிவிடுகின்றார். இங்கு புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் புரட்சியை தொடர்வதனை எப்படி நாம் புரிந்து கொள்வது. புரட்சிக்கு முந்திய சமுதாயத்தில் அடிக்கட்டுமானத்துக்கும், மேல்கட்டுமானத்துக்கும் இடையில் எற்படும் பகை முரண்பாடு, மேற்கட்டுமானத்தை செல்லரிக்க வைக்கின்றது. இங்கு மேல் கட்டுமானத்தை இடித்து தள்ளுவதன் மூலம், அடிகட்டுமானத்தில் புரட்சி நடக்கின்றது. இங்கு மேல் கட்டமான தகர்வுக்கு பின்பே, அடிக்கட்டுமானம் தகர்கின்றது. புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் மேல், கீழ் கட்டுமானத்தில் தொடர்ச்சியான இடைவிடாத புரட்சி, இயல்பாக தொடர்ச்சியாக பழையவற்றை காலவாதியாக்கும் வகையில் காணப்படும். இதில் எதாவது ஒன்று பின்தள்ளப்படும் போது, முதலாளித்துவ மீட்சி, அதன் ஊடாக புகுந்துவிடுகின்றது.

லெனின் புரட்சியின் வாக்க கடமை பற்றி "ரசியப் புரட்சியின் துவக்கம் எளிதானதாகவும், தொடர்ந்து முன்னேறிச் செல்வது கடினமானதாகவும் இருந்தது என்பதை மறப்பது மிகப் பெரும் அறியாமையாகும், மிகப் பெரும் தவறாகும்." என்று மிக தெளிவபடவே பல உதாரணங்கள் மூலம் முன்வைக்கின்றார். இவற்றில் இருந்தே நாம் புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தை புரிந்து கொள்ள வேண்டும். ஒரு புரட்சி, புரட்சியின் நோக்கம், புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் எப்படி புரட்சியைத் தொடர்வது என்ற அரசியலில் இருந்தே, ஸ்ராலினை நாம் ஆராய வேண்டும் ஆராய முடியும். இல்லாதவரை அவை அவதூறக தூற்றுவதே அரசியல் உள்ளடக்கமாகிவிடும்.

ஸ்டாலின் புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்கவும், தொடருவும் முணைந்த போக்கில், இழைத்த சில கடுமையான தவறுகள் அனைத்தும், ஒரேயோரு அரசியல் தவறால் ஏற்பட்டவை. அதாவது புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் புரட்சியைத் தொடரும் மக்கள்திரள் பாதையை அவர் கண்டறியத் தவறியதுதான், அவரின் அரசியல் தவறுகளின் மூலமாகவும், மையமாகவும் உள்ளது. ஸ்டாலின் கட்சியின் நீண்ட கால உறுப்பினராகவும், கட்சி தலைவராகவும் இருந்த காலத்தில், புரட்சிக்கு முந்திய காலகட்டத்தில் அவர் மக்கள் திரள் பாதையை நடைமுறையில் தொடர்வதில், அவரைவிட வேறு எவரையும் அவருக்கு நிகராக முன்னிறுத்த முடியாது. இதே ஸ்டாலின் புரட்சிக்கு பிந்திய கால கட்டத்தில் இதைத் தொடர, ஒரு மக்கள் திரள் பாதையை கண்டறியத் தவறியதன் விளைவு, 1930 களின் இறுதியில் கடுமையான தவறுகளை இழைக்க நேர்ந்தது. அதுவும் குறிப்பாக 1935க்கு பின் முரண்பாடுகள் சதியாக கூர்மையான போது, தவறு, இயல்பில் கடுமையாக தவறு இழைக்க வைக்கின்றது. இந்த தன்மை ஸ்டாலின் தனிப்பட்ட இயல்போ, சமுதாயத்தின் நிலையோ அல்ல. மாறாக புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் புரட்சியை தொடர்வது எப்படி? என்ற மக்கள்திரள் பாதை கண்டறியப்பட்டு இருப்பின், ஸ்டாலின் மீதான தவறு என்பது விவாத்துக்குரிய





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடையமாகியிராது. அத்துடன் வர்க்கப் போராட்டத்தை தொடர்வதை எதிர்த்து, டிராட்ஸ்கி மற்றும் புகாரின் போன்றோர் தொடர்சியாக எதோ ஒரு வகையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்க விட்டாலும், ஸ்டாலின் பற்றிய விவாதம் அவசியமற்றவைதான். ஸ்டாலின் வர்க்கப் போராட்டத்தை தொடரும் அரசியல் மார்க்கத்தை எதிர்த்து, அதை எதிர்த்தவர்கள் மௌனமாக கைகட்டி உறங்கியிருக்கவில்லை. மாறாக எல்லாவிதமான முயற்சியிலும், வர்க்கப் போராட்டத்தை தொடர்வதை எதிர்த்து சகலவிதமான எதிர் நடவடிக்கையிலும் ஈடுபட்டார்கள். ஆனால் இன்று விமர்சனத்தை ஸ்டாலின் மீதுமட்டும் குற்றம் கூறுபவர்கள், எதிர் தரப்பு பற்றி மௌனம் சாதிப்பது ஏன்? எதிர்தரப்பின் அரசியல் இதனுடாக வாங்கரோத்தாகி விடக் கூடாது என்ற, ஒரே ஒரு நம்பாசைதான் இதில் புதைந்து கிடக்கின்றது. தனிப்பட்ட ரீதியில் ஸ்ராலினை குற்றம் சட்டுபவர்கள், எதிர்தரப்பையும் அதன் அரசியல் நடத்தையும் கூட குற்றம் சாட்டவேண்டும். எதிர்தரப்பின் அரசியல் நடத்தையை எதிர் கொண்டே ஸ்டாலின் செயல்பட்டார். வெறும் வெற்றிடத்தில் அல்ல, அல்லவா!

ஸ்டாலின் காலத்தில் வர்க்கப் போராட்டத்தை தொடர்வதா? இல்லையா? என்பதே அடிப்படையான கேள்வியாகவும், முதலாளித்துவ மீட்சிகான மையப்புள்ளியாகவும் இருந்தது. இங்குதான் திரிபு வாதமும், சந்தர்ப்பவாதமும் புரையோடிக்கிடந்தது. பாட்டாளி வர்க்கப் புரட்சியை தொடர்வதை, எதோ ஒரு காரணத்தைக் கூறி மறுத்தவர்கள் அணைவரையும் முன்நிறுத்தியே, நாம் ஸ்ரானை பாதுகாக்க வேண்டி வரலாற்று கட்டத்தில் நாம் உள்ளளோம். இக்காலத்தில் சரி அதற்கு பின்னால் சரி, யாரும் புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் வர்க்கப் போராட்டத்தை தொடர்வதற்கான, மக்கள் திரள் பாதையை முன்வைத்ததில்லை. இதை மாவோ தான் முதன் முதலாக கண்டறிகின்றார். ஸ்டாலின் பற்றிய விமர்சனத்தையும், சோசலிச சமூகம் பற்றிய விமர்சனத்தை முன்வைத்தவர்கள் அனைவரும், புரட்சிக்கு பின்பு வர்க்கப் போராட்டத்தை தொடர்வதை மறுத்தே, கருத்தை முன்வைத்தனர். இவர்கள் யாரும் மாக்சியவாதியாக இருப்பதில்லை. மார்க்சியத்தை குறுக்கி அதை முடக்கும் வகையில் தம்மை வெளிப்படுத்தினர். கம்யூனிசத்தை நோக்கி முன்னேறுவதா அல்லது சோசலிசத்துடன் முடங்கி முதலாளித்துவ மீட்பை கொண்டு வருவதா, என்ற அடிப்படையான கேள்வியில், வர்க்கப் போராட்டத்தை தொடர்வதை மறுப்பதன் ஊடாக, புரட்சியின் கடமையை மறுப்பதில் இவ் விமர்சனங்கள் அமைந்திருந்தன. இதனால் இந்த மார்க்சிய எதிர்ப்பு சார்ந்த, கம்யூனிசத்தை நோக்கி முன்னேறும் வர்க்கப் போராட்டத்தை தொடர்வதை மறுப்பதை அரசியலாக கொண்ட, அனைவரையும் ஈவிரக்கமற்ற வகையில் எதிர்த்து போராடும் வகையில், இக் கட்டுரை ஸ்டாலின் பற்றிய அனைத்து பக்கத்தையும் சுருக்கமாக ஆய்வு செய்கின்றது.




## ஸ்டாலின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்க போராடிய வர்க்கத்தின் தலைவர்



பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்க ஸ்டாலினின் நடத்திய பேராட்டத்தில் சரியையும் தவறுகளையும் ஆராயும் போது, அவதுாறுகளையும் இக்கட்டுரை தரைமட்டமாக்கின்றது. ஸ்டாலின் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு பாத்திரம், ஸ்டாலினால் இதை விட எதுவும் செய்ய முடியாது என்று கூறி அனுதாபம் அல்லது வரலாற்றை விளக்கும் எல்லா அடிப்படையின் பின்பும், பாட்டாளி வாக்க சர்வாதிகாரத்தை கைவிட்டுச் செல்வதை கோருகின்றது. ஸ்டாலின் காலம் அதிகார வர்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆட்சி, அது கம்யூனிசத்தை நோக்கிச் செல்லும் சோசலிசம் அல்ல, என்ற அனைத்து விளக்கமும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மறுக்கின்றது. இவைகளை முன் வைப்போர் ஏன்?, எப்படி? இவை என்பதை முன்வைப்பதில்லை. இதை முன்வைக்க முடியாத போது அவதூற்றை விரும்பியவாறு வைப்பது நிகழ்கின்றது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், அங்கு தொடரும் வர்க்கப் போராட்டம், அதில் வன்முறை, மரணதண்டனை போன்றவற்றை வர்க்க சமுதாயத்தில் மறுப்பதில் இருந்து, முதலாளித்துவ ஜனநாயகம் பற்றிய பிரமைகளை விதைப்பதில் இருந்தே, இடதுசாரி முகமூடிகளின் பின்பு அவதூறு கட்டமைக்கப்படுகின்றது. இதன் பின்பு தமது வர்க்க நலனை மூடிமறைப்பதில் மிகுந்த சந்தர்ப்பவாத அக்கறை எடுத்துக் கொண்டு, மார்க்சியம் மீது பொறுக்கியெடுத்த தாக்குதலை நடத்துகின்றனர். ஒட்டுமொத்த சமுதாயத்தில் இருந்து பிரச்சனைகளை பகுத்தாய்வதற்கு பதில், குறிப்பானதை முழுமையானதாக காட்டி, தமது வர்க்க நலன்களை தக்க வைப்பதில் ஏகாதிபத்தியத்தின் வளர்ப்பு நாய்களாக இருக்கின்றனர்.

இந்த சந்தர்ப்பவாத இடதுசாரிகளின் நோக்கங்கள் பற்றி லெனின் "உழைக்கும் மக்களுக்கு உடனடியாக வெறுப்பூட்டும், அப்பட்டமான சந்தர்ப்பவாதம் மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதத்தைப் போன்று அபாயகரமானதும் ஊறு விளைவிக்கக் கூடியதும் அல்ல. மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதம் தனது சந்தர்ப்பவாத நடைமுறைக்கு உரிய தருணம் வரவில்லை என்றும் இன்ன பிறவாகும் நிருபிக்க அடுக்கடுக்காக மார்க்சிய சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறது" என்றார். ஸ்டாலின் பற்றிய அவதூறுகள் பற்பல விதமானவை. எல்லாவிதமான வடிவங்கள் ஊடாகவும், ஸ்ராலினை தாக்குவதன் மூலம், மார்க்சியத்தை குழி தோண்டிப் புதைக்க கனவு காண்கின்றனர். ஸ்டாலின் புதைகுழி அரசியலைக் கொண்டு இருந்ததாக, அரசியல் ரீதியாக ஆண்மை இழந்து மலடாகிப் போனவர்கள் அவதூறு பொழிந்தபடி, உண்மையில் ஸ்ராலினையும், மார்க்சியத்தையும் புதைகுழியில் புதைத்து விட தலைகீழாக சபதம் எடுத்து குதித்தெழும்புகின்றனர்.



# யார் இந்த ஸ்டாலின்?




ஸ்டாலின் தனது பாடசாலை வாழ்க்கையிலேயே ஒடுக்கப்பட்ட மக்களின் துயர் கண்டு அதைத் துடைக்க, தனது 16 வது வயதில் அதாவது 1895 இல் கம்யூனிஸ் கட்சியுடனான உறவைத் தொடங்குகின்றார். 1890 களின் இறுதியில் பல போராட்டத்தை நடத்தியதுடன், கட்சி வாழ்வை தொடங்கிவிடுகின்றார். கட்சி வரலாற்றில் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தை கைவிட்டு சென்ற மென்ஷிவிக்குகள், போராட்ட நெருக்கடியில் கட்சிக் கலைப்பு வாதத்தை முன்வைத்து ஓடுகாலிகள், நடுநிலை சந்தர்ப்பவாதிகள், பலர் பலவிதத்தில் நீண்ட விடாமுயற்சியான நெருக்கடியான வர்க்க போராட்டத்தை கைவிட்டுச் சென்ற எல்லா நிலையிலும், ஸ்டாலின் வர்க்கப் போராட்டத்தை முன்நிலைப்படுத்தினார், அதற்காக போராடினார், அதைப் பாதுகாத்துநின்றார். இந்தப் போராட்டத்தை நடத்துவதில் அவர் இரும்பு மனிதனாக இருந்ததால், அவரை லெனின் "இரும்பு" என்ற பெயரால் "ஸ்டாலின்" என்று அழைத்தார். பாட்டாளி வர்க்க, வர்க்கப் போராட்டத்தை உறுதியாக நடத்திய வரலாற்றில், அவர் ஆறு முறை தொடர்ச்சியாக சிறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஸ்ராலின் 1887

செய்யப்பட்டார். சிறையில் இருந்து பலமுறை புரட்சியின் கடமையை முன்னெடுக்க தப்பியே வந்தார்.

1910 இல் மத்திய கமிட்டி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டது மட்டுமின்றி, அதற்கு சில வருடத்தின் முன்பே அவர் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். 1912 ம் ஆண்டு போல்ஷிவிக் கட்சி பிராக்கில் கூடிய போது, மென்ஷிவிக்குகளை கட்சியில் இருந்து முற்றாக வெளியேற்றியதுடன், லெனின் தலைமையிலான கட்சி தனது சுயேட்சையான பாட்டாளி வர்க்க புரட்சிகரத் தன்மையை ஸ்தாபன வடிவில் பகிரங்கமாக அறிவித்தனர். இந்த காங்கிரஸ் ஸ்டாலின் சிறையில் இருந்த போதும், ஸ்ராலினை மத்திய கமிட்டிக்கு தெரிவு செய்ததுடன், லெனின் ஆலோசனைப் படி நாட்டில் நடைமுறை வழிகாட்டும் தலைமை உறுப்பு ஒன்றை உருவாக்கியதுடன், அதன் தலைவராக அதற்கு தகுதியான ஸ்டாலின் நியமிக்கப்பட்டார். நாட்டின் புரட்சிகர அமைப்பாக்கல் மற்றும் அனைத்து வர்க்கப் போராட்டத்தையும், நேரடியாக கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில், 1912 இல் இருந்தே ஸ்டாலின் கட்சிக்கு வழிகாட்ட தொடங்கிவிட்டார். 1917 போல்ஷிவிக் புரட்சியில் லெனின் பங்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதேயளவுக்கு லெனினை முக்கியத்துவப் படுத்திய புரட்சியை முன்னெடுக்கும் நடைமுறைத் தலைமையை ஸ்டாலின் வழங்கினார். லெனின் கோட்பாட்டு தலைமை புரட்சியில் எவ்வளவுக்கு முக்கியமாக நடைமுறை சார்ந்து வழிகாட்டலுக்கு உள்ளாகியதோ, அதேபோல் ஸ்டாலின் நடைமுறைத் தலைமை புரட்சியை முன்னெடுத்த அமைப்பை உருவாக்குவதில் கோட்பாட்டு வழிகாட்டலை ஒருங்கிணைத்தது. இந்த இரு தலைமையும் ஒரு சேர நிகழ்ந்த வரலாற்றில் தான் சோசலிச புரட்சி வெற்றி பெற்றது. இவ் இரண்டும் இன்றி சோவியத் புரட்சி என்பது கற்பனையானது. இரண்டு துறை சார்ந்த முன்னணி பொறுப்பு வாய்ந்த தலைவர்களும், தத்தம் பணியில் வெற்றிகரமாக இணைந்து வழிகாட்டிய வரலாறு தான், சோவியத் புரட்சியை நடத்தியது. இந்தளவுக்கு வேறு எந்த தலைவரும் புரட்சியை முன்னெடுக்கும் தலைமைப் பொறுப்பை, பல்வேறு நெருக்கடிகளில் கொண்டிருக்கவில்லை. நாட்டுக்கு வெளியில் இருந்த லெனின் வழங்கிய கோட்பாட்டு தலைமையும், நாட்டுக்குள் ஸ்டாலின் வழங்கிய நடைமுறை அமைப்பாக்கல் தலைமையும், ஒன்றிணைந்த புரட்சி தான் சோவியத் புரட்சியாகும்.


ஸ்ராலின் 1893

ஸ்டாலின் திடீரென அதிகாரத்தை கைப்பற்றினான் என்பது எல்லாம் இடது வேடம் போட்டவர்களின் வெற்று அவதூறுகளாகும். ஸ்டாலின் நீண்ட அனுபவம் கொண்ட, போராட்ட தலைவனாக, நெருக்கடிகளில் முன் மாதிரி போல்ஷிவிக்காக போராடிய முன்னணி தலைவராக திகழ்ந்தமையால், 1912 லேயே மத்திய குழுவுக்கு தெரிவு செய்ததுடன், நாட்டின் நடைமுறை போராட்டத்துக்கான தலைமைப் பொறுப்பை லெனினின் முன்மொழிவுடன், 1912 லேயே ஏற்றுக் கொண்டு போல்ஷிவிக் தலைவரானார். இந்த தலைமைப் பொறுப்பை சதிகள் மூலமல்ல, பாட்டாளி வர்க்க போராட்டத் தலைவனாக நடைமுறையில் இருந்தமையால், அவர் சிறையில் இருந்த போதும் கட்சி அவரிடம் தனாகவே ஒப்படைத்தது.


ஸ்ராலின் 1903

1917 இல் நடந்த முதல் புரட்சியைத் தொடர்ந்து, யூன் மாதம் மென்சுவிக்குகள் ஆதிக்கம் வகித்த ரஷ்ய சோவியத்தின் முதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


1908 இல் கைதான போது

காங்கிரசின் மத்திய நிர்வாக குழுவுக்கு, ஸ்டாலின் தெரிவு செய்யப்பட்டதன் மூலம், ஒரு தலைவராகவே இருந்தார். 1917 இல் முதல் புரட்சி அரசு போல்சவிக்குகளை கைது செய்து, லெனினை கொன்று விட அவதூறுகளை பொலிந்த போது, டிராட்ஸ்கியும், காமினெவும் சிறைப்பட்டு நியாயம் கோரி வழக்காட வேண்டும் என்றே முன்மொழிந்தனர். ஸ்டாலின் அதை நிராகரித்ததுடன், லெனினின் பாதுகாப்பை தானே பொறுப்பெடுத்தார். ஐரோப்பாவில் புரட்சி நடைபெறாமல் பாட்டாளி வர்க்க புரட்சியா? என்ற கேள்வியுடன் டிராட்ஸ்கி, ருசியாவில் சோஷலிஸத்தை சாதிக்க முடியாது என்று புரட்சியை எதிர்த்த போது, ஸ்டாலின் "சோஷலிஸத்துக்குப் பாதை வகுக்கும் தேசமாக ரஷ்யா இருக்கக் கூடுமென்பதை புறக்கணிக்க முடியாது.... ஐரோப்பா மட்டுமே வழிகாட்ட வேண்டுமென்ற பத்தாம் பசலிக் கருத்தைக் கைவிடவேண்டும். குருட்டுத்தனமான வறட்டு மார்க்சியமும் இருக்கின்றது. படைப்புத் தன்மை கொண்டு வளரும் மார்க்சியமும் இருக்கின்றது. இரண்டாவது வகையை ஆதரிக்கின்றேன்." என்றார்.

ஐரோப்பா புரட்சியின்றி தொடரும் வர்க்கப் போராட்டம் வெற்றி பெறாது என்று கூறி, டிராட்ஸ்கி சோசலிசம் என்ற வர்க்கப் போராட்டத்தை எதிர்த்து முன்வைத்த வாதம் மற்றும் நடைமுறைகள், உண்மையில் முதலாளித்துவத்தில் இருந்து கம்யூனிசத்தை ஒரே தாவில் தாண்டிவிடக் கோரும் இடது தீவிரத்தின் உள்ளடக்கமாகும். அராஜக வாதம் எதை கோட்பாட்டில் முன்வைக்கின்றதோ, அதையே இது பின் பக்கத்தால் வைக்கின்றது. சோசலிச சமூகம் என்பது கம்யூனிசத்தை நோக்கிய, அடுத்த கட்ட வர்க்கப் போராட்ட தயாரிப்பு மற்றும் முன்னெடுப்பு காலம் என்பதை மறுப்பதில் இருந்தே, "தனிநாட்டு சோசலிசம்" என்ற எதிர்ப்பின் பின் உள்ள அரசியல் உள்ளடக்கமாகும். பாட்டாளிகள் வர்க்கப் போராட்டம் மூலம் கைப்பற்றும் ஆட்சி மாற்றம், வர்க்கப் போராட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு வடிவ மாற்றம் மட்டுமே தான். இங்கு கம்யூனிசத்தை நோக்கிய போராட்டத்தை சோசலிச சமூகத்தில் கைவிடக் கோருவது, வர்க்கப் போராட்டத்தை பின்பக்க கதவால் இழுத்து தடுப்பதாகும்.


ஸ்ராலின்

இது பற்றி லெனின் வர்க்கப் போராட்டத்தை பற்றிய தெளிவான நிலைப்பாட்டைப் பார்ப்போம். "சுதந்திரம், சமத்துவம் என்ற முழக்கங்களால் மக்களை ஏமாற்றுவது பற்றிய உரைக்கு முன்னுரை"யில் "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வர்க்கப் போராட்டத்தின் முடிவல்ல; ஆனால் புதிய வடிவங்களில் இதன் தொடர்ச்சியாகும். தோற்கடிக்கப்பட்ட ஆனால் துடைத்தொழிக்கப்படாத ஒரு முதலாளித்துவ வர்க்கத்திற்கெதிராக, மறைத்து போகாத, எதிர்ப்பைத் தருவதை நிறுத்தாத, ஆனால் எதிர்ப்பை மேலும் ஆழப்படுத்தியுள்ள ஒரு முதலாளித்துவ வர்க்கத்திற்கெதிராக வெற்றி பெற்று அரசியல் அதிகாரத்தை கரங்களில் எடுத்துக் கொண்ட பாட்டாளி வர்க்கத்தால் தொடுக்கப்படும் வர்க்கப் போராட்டமே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமாகும்." என்றார் லெனின். ஆனால் இதை எதிர்ப்பதில் தான் இன்றைய எல்லா இடது முகமூடிகளும் சரி, அன்றைய டிராட்ஸ்கி மற்றும் புகாரின் தங்கள் அரசியலை கட்டமைத்தனர், கட்டமைக்கின்றனர். ஆனால் ஸ்டாலின் இதை எதிர்த்து வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்ததில் தான், அவர் மீதான அவதூறுகள் கட்டமைக்கப்பட்டன, கட்டமைக்கப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1917 அக்டோபர் 23ம் தேதி கட்சியின் மத்தியக் கமிட்டி கூடி எடுத்த வரலாற்று புகழ்மிக்க புரட்சியை நடத்துவது பற்றிய முடிவில், ஆயுதம் ஏந்திய எழுச்சிக்கு தலைமை தாங்க அமைக்கப்பட்ட குழுவுக்கு தலைவராக ஸ்டாலின் நியமிக்கப்பட்டார். இங்கு ஸ்டாலின் சதி செய்து புரட்சிக்கு தலைமை தாங்க வந்தவர் அல்ல. கட்சி தனது தலைவரை தெரிவு செய்வது இயல்பானது. இந்த பொறுப்புமிக்க நடைமுறை ஸ்தாபனப் பணியை செய்யும் தகுதி, ஸ்ராலினைத் தவிர வேறு எந்த மத்திய குழு உறுப்பினருக்கும் இருக்கவில்லை. ஆனால் இடதுசாரி பெயரில் எழுதுபவர்கள் இதைப் பற்றி வகை வகையாக, வண்ணம் வண்ணமாக எழுதுவது மட்டுமே, அவர்களின் மலட்டுப் பிழைப்பாக உள்ளது.

ஸ்டாலின் என்ற தலைவருக்கு 1919 நவம்பர் 27ம் திகதி லெனின் முன்மொழிந்த தீர்மானத்தின் படி, ஸ்ராலினுக்கு செங்கொடி பதக்கம் வழங்கப்பட்டது. இதே விருதை டிராட்ஸ்கியும் பெற்றார். டிராட்ஸ்கி செஞ்சேனை சார்ந்து பாதுகாப்பு மந்திரியாக இருந்த போதும், சோவியத் புரட்சியை பாதுகாக்க செஞ்சேனையை தலைமை தாங்கி, எதிரிகளை ஒழித்துக் கட்டிய பங்களிப்பு சார்ந்து வழங்கிய விருது, அதே கராணத்துக்காக ஏன் ஸ்ராலினுக்கு வழங்கப்பட்டது.

சோவியத்துக்கு ஆபத்து ஏற்பட்ட இடங்களில் எல்லாம், கட்சியின் விசேட வேண்டுகோள்களை நிறைவேற்றுவதில், ஸ்டாலின் முன்முயற்சியுடன் செஞ்சேனையை வழி நடத்திய திறமைமிக்க தளபதியாக திகழ்ந்த தனித்துவமான பணிக்காக வழங்கப்பட்டது. கட்சியின் வேண்டுகோளுக்கு ஏற்ப ஸ்டாலின் பல போர்முனைகளில் பல வெற்றிகளை சாதித்ததன் மூலம், சோவியத்தை பாதுகாத்தார். ஸ்டாலின் கிராட்டில் (ஜாரீட்ஸின்) இருந்து தேவையான உணவை பெறவும், இராணுவ ரீதியாக அதை வெற்றி பெறவும் கட்சியின் வேண்டுகோளின் படி, அதை மீட்டு எடுத்தார். இந்த யுத்த பிரதேசத்தில் டிராட்ஸ்கி செஞ்சேனைக்கு தளபதியாக நியமித்த பழைய ஜார் மன்னனின் இராணுவ தளபதிகளை நீக்கி, புரட்சிகரமான செஞ்சேனை, புரட்சிகரமான தளபதிகளின் தலைமையில் அப்பகுதியை மீட்டு எடுத்தார்.



ஸ்ராலின்
1918

அடுத்த மத்திய கமிட்டி வேண்டுகோளுக்கு இணங்க யூக்குரேனுக்கு சென்று அப்பகுதியை மீட்டதுடன், கார்க்கோ, பேலோ ரஷ்யாவையும் மீட்டார். 1918 இல் கிழக்கு முனையில் ஏற்பட்ட ஆபத்தை எதிர் கொள்ள மத்திய கமிட்டி வேண்டுகோளுக்கு இணங்க அங்கு சென்று கிழக்கு போர்முனையை வென்றார். அங்கு இருந்து மீண்ட ஸ்டாலின் புதிய பொறுப்பாக அரசாங்கச் செயலாட்சி அமைச்சராக கட்சியால் நியமிக்கப்பட்டார். இது தொழிலாளர், விவசாயிகள் கண்காணிப்பு வாரியம். ஊழல், நாசவேலை, கையாலாகாத்தனம் போன்ற அனைத்தையும் கட்டுப்படுத்துவதில், ஸ்டாலினின் பங்கு கோரப்பட்டது.



1919 இல் மார்ச்சில் எதிரி பெத்ரோகிராதை கைப்பற்ற முன்னேறிய போது, ஸ்டாலினை கட்சி அங்கு அனுப்பியது. அங்கு அவர் மாபெரும் சாதனையை சாதித்து எதிரியை நொருக்கித் தள்ளினார். பின்பு எதிரி ஓரெல் நகரை பிடித்த பின்பு, மொஸ்கோவை நான்கு மணிநேரத்தில் அடையும் வகையில் எதிரி அருகில் நெருங்கி வந்த நிலையில், மொஸ்கோவில் முதலில் கால் வைப்பவனுக்கு 10 லட்சம் ரூபிள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரிசு அளிக்கப்படும் என்ற நிலையில், லெனின் "தெனீக்கின் - எதிர்ப்புப் போரில் சகல சக்திகளும் திரளட்டும்" என்றார். 1919 இல் மத்திய கமிட்டி இந்த எதிர்ப்பு போருக்கு தலைமை தாங்க ஸ்டாலினை நியமித்தனர். ஸ்டாலின் இந்த பிரதேசத்தை பாதுகாக்க வைத்த திட்டத்தை, கட்சி அங்கிகரித்த நிலையில், இப்போரில் ஸ்டாலின் தலைமையில் வெற்றி பெற்றனர். 1920 இல் முற்றாக இப்பகுதி விடுவிக்கப்பட்டது.

போலிஷ் படை தாக்குதலை தொடுத்த போது, அங்கும் ஸ்டாலின் அனுப்பப்பட்டார். ஏகாதிபத்திய தலைமையில் விரங்கல் புதிய தாக்குதலை யூக்ரேனில் தொடங்கிய போது, மத்திய குழு பின் வரும் திர்மானத்தை எடுத்தது. "விரங்கல் வெற்றியடைந்து வருகின்றான். கூபான் பிரதேசத்தில் கவலைக்கிடமான நிலைமை. எனவே விரங்கல் எதிர்ப்புப் போரை மிகவும் முக்கியமானதாகவும் முற்றிலும் சுயேட்சையானதாகவும் கருத வேண்டும். ஒரு புரட்சி இராணுவக் குழுவை அமைத்துக் கொண்டு, விரங்கல் முனையில் முழு முயற்சியையும் ஈடுபடுத்துமாறு மத்தியக் கமிட்டி தோழர் ஸ்டாலினுக்கு கட்டளையிடுகின்றது" இதை ஸ்டாலின் நிறைவேற்றியதன் மூலம், ஒரு இராணுவ தளபதியாக நிமிர்ந்து நின்றார்.



இந்த புரட்சிகர யுத்தத்தில் ஒரு செஞ்சேனை தளபதியாக, தலைவனாக ஸ்டாலின் தனித்துவமான பணியை, லெனினால் முன்மொழியப்பட்டு மத்திய குழு அங்கீகரித்து வழங்கிய பதக்க அறிக்கையில் "பேராபத்தான நேரத்தில் நானா பக்கங்களிலும் விரோதிகளின் வளையத்தால் சூழப்பட்டிருந்த பொழுது.... போராட்டப் பொறுப்புக்குத் தலைமைக் குழுவால் நியமிக்கப்பட்ட ஜே.வி.ஸ்டாலின், தன் சக்தியாலும் களைப்பறியாத உழைப்பாலும், தடுமாறிய செம்படைகளை திரட்டுவதில் வெற்றி கண்டார். அவரே போர் முனைக்குச் சென்று, எதிரியின் நெருப்புக்கு முன் நின்றார். தன் சொந்த உதாரணத்தால், சோஷலிஸ்ட் புரட்சிக்காகப் போராடியவர்களுக்கு உத்வேகம் ஊட்டினார்." இந்த தீர்மானத்தையே இன்று இடது வேடதாரிகள் திரித்து மறுக்கின்றனர். ஸ்டாலின் இரண்டாம் உலக யுத்தத்தில் ஒரு தளபதியாக இருந்தே இருக்க முடியாது என்கின்றனர். சோவியத் புரட்சியில் ஸ்டாலின் பயந்து ஒளித்துக் கிடந்ததாகவும், வீம்புக்கும், வம்புக்கும் யுத்த முனைக்கு சென்றதாகவும், பல விதமாக அவதூறுகளை கட்டியே பிழைப்பைச் செய்கின்றனர். ஆனால் லெனின் வழங்கிய கருத்தும், பரிசும் மார்க்சிய வரலாற்று ஆவணமாக சர்வதேசிய வழியாக உள்ளது என்பதை மறந்துவிடுகின்றனர்.

1922 மார்ச், ஏப்பிரலில் நடந்த பதினொராவது கட்சி காங்கிரசில், கட்சி பொதுக் காரியதரிசி பதவி ஒன்று உருவாக்கப்பட்டு, லெனின் பிரேரணைக்கு இணங்க ஸ்டாலின் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவியை ஸ்டாலின் உருவாக்கி, அதில் அதிகாரத்தை குவித்து, கட்சி உறுப்பினர்களை தனது சார்பாக நியமித்ததாக, போலி இடதுசாரி பிழைப்புவாதிகள் பசப்புகின்றனர். போல்ஸ்விக் கட்சி வரலாற்றில் லெனினுக்கு பின்பு யாரும் ஸ்ராலினை தாண்டி கட்சித் தலைவராக உயர்ந்ததில்லை. நீண்ட கட்சி வரலாற்றில் லெனினுடன் அக்க பக்கமாக போராடியதுடன், நாட்டின் தலைமைப் பொறுப்பை ஸ்டாலினே மேற் கொண்டார். ஸ்டாலின், லெனின் மரணத்துக்கு முன்பே, அதாவது 1912 லேயே லெனின் முன்மொழிவுடன், கட்சியே





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1919 இல் 8வது காங்கிரஸ் தெரிவான மத்திய குழு

ஸ்ராலினிடம் தலைமைப் பொறுப்பை கொடுத்திருந்தது. இதை எல்லாம் வரலாற்றில் புதைத்துவிட முயலும், இடதுசாரி வேசைத்தனம் வரலாற்றை இருட்டடிப்பு செய்கின்றது. ஸ்ராலின் பற்றிய முக்கிய தகவல்களை பார்க்க விரும்புபவர்கள், பின்வரும் இணைய முகவரியில் பார்க்கவும. **http://tamil-caste-race-class-nation-feminism-literature-culture.org/**

1924 இல் லெனின் எழுதிய சக தலைவர்கள் பற்றி, நாம் பார்ப்பது அவசியமாகும். ஸ்டாலினுக்கும், டிராட்ஸ்கிக்கும் இடையில் இருந்து வரும் முரண்பாட்டை பற்றி லெனின் சரியாக மதிப்பிடுகின்றார். இங்கு முரண்பாட்டில் இருவரின் பங்கையும் காண்பதுடன், இரண்டு தலைவர்களின் சிறப்பு மற்றும் குறைகளையும் காண்கின்றார். கட்சியின் ஒற்றுமையை முதன்மையாக கருதிய லெனின், ஸ்டாலின் பற்றிய குறிப்பில், அவர் கையில் அதிகாரம் குவிந்திருப்பதால் அதை அவர் போதுமான முன் எச்சரிக்கையுடன் கையாள்வதில் தவறு இழைப்பார் என்ற சந்தேகத்தை முன்வைக்கின்றார். இதனால் மட்டும் பொதுச் செயலாளர் பதவிக்கு வேறு ஒருவரை பிரேரிக்க கோருகின்றார். இதை அவர் குறிப்பிடும்போது, தோழர்களை அணுகும் முறைகளில் இவரை விடச் சிறந்தவர் மட்டும், அதாவது மற்றையவற்றில் அல்ல என்பதை தெளிவாக லெனின் குறிப்பிட்டார். ஆனால் இன்று இதை மறுத்து வர்க்க அரசியல் மார்க்கத்தில் பொதுமைப்படுத்தி, வர்க்கப் போராட்டத்தையே உயிருடன் அரித்து தின்கின்றனர். இதைத் தான் அன்று குருசேவ் என்ற ஜனநாயகவாதியும் செய்தான். இந்த குருசேவ் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக இருந்ததும், ஏன் பெர்லின் மதிலை அமெரிக்க ஜனாதிபதிக்கும் ஜனநாயகவாதி குருசேவுக்கும் இடையில் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தத்துக்கு இணங்க, மேற்கு ஜெர்மனி கட்டிடப் பொருளை இலவசமாக வழங்க, கம்யூனிசத்தின் பெயரில் கைக்கூலி குருசேவால் கட்டப்பட்ட மதில் மூலம், கம்யூனிசத்தை இரும்புத் திரை ஜனநாயகமாக காட்டிய செம்மல் ஆவர்.



லெனின் டிராட்ஸ்கி பற்றி, யாவரிலும் வல்லமை வாய்ந்தவர் என்றதுடன், நிர்வாகத் தன்மை வாய்ந்த அணுகுமுறை மற்றும் அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை குறைகளாக லெனின் சுட்டிக் காட்டினார். டிராட்ஸ்கி பற்றிய லெனின் கருத்து நிர்வாகத் தன்மையில் கட்சியை வழி நடத்தும் போது, நிர்வாக வடிவம் அதிகார வர்க்க அணுகு முறையும், தன்னம்பிக்கை வரட்டுத்தனம் சார்ந்து காது கொடுத்து கேட்பதற்கு தயாரின்மையை சுட்டிக் காட்டுகின்றார்.

இங்கு ஸ்டாலின் ஒரு கட்சி செயலாளராக இருக்கும் போது, மற்றைய தோழர்களுடன் அணுகிக் கொள்ளும் போக்கில் ஏற்படும் தவறுகள், கட்சியின் உயிரோட்டமுள்ள இயங்கியலை சிதைக்கும் என்பதை லெனின் தெளிவுபடுத்துகின்றார். இங்கு இந்த விமர்சனங்களை லெனின் கட்சி வரலாற்றில் இருந்தே புரிந்து கொள்கின்றாரே ஒழிய, குறிப்பான நிலைமைகள் மற்றும் சம்பவங்களில் அல்ல. குறிப்பான நிலைமை மற்றும் சம்பவத்தில் புரிந்ததாக காட்டுவது, லெனின் மாக்சியத்தையும், அவரின் சர்வதேசிய வீச்சையும் சிறுமைப்படுத்தி தமக்கு சதகமாக்க கொச்சைப்படுத்துவதாகும். இது போலி இடதுசாரி வேஷத்தின் பின் வர்க்க போராட்டத்தின் உயிராற்றலை கொன்றுவிடுவதாகும். சர்வதேசியம் மற்றும் சோவியத் புரட்சிக்கான தத்துவார்த்த தலைமையை தொடர்ச்சியாக லெனின் வழங்கி வந்ததும், கட்சியின் மற்றைய தோழர்கள் இதில் அதிகம் தேர்ச்சி பெற்ற முன்னணி தலைவர்களாக வளர்ச்சி பெறாமையும், லெனின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்சிக்குள்ளான முரண்பாடுகள் மேல், வெற்றிகரமாக பட்டாளி வர்க்க தலைமையை கோட்பாடு சார்ந்து நிறுவியதுடன், மார்க்சியத்தை வளர்த்து விரிவாக்கியதன் ஊடாக, வென்று எடுத்த போக்கில் இருந்து, தனது மரணத்தின் பின்பு என்ன வகையில் இவை கையாளப்படும் என்றே அஞ்சினார். ஸ்டாலின் நடைமுறையில் (இங்கு கோட்பாட்டு பங்களிப்பை மார்க்சியத்துக்கு தொடர்சியாக செய்துள்ளர்) அதிகமாக கட்சி வரலாற்றை கொண்டிருந்தமையும், டிராட்ஸ்கி போல்ஷ்விக் புரட்சிக்கு முன் பின் என்ற இரு காலத்திலும், இடை நடுபாதை, எதிர்நிலை, சதி போன்றவற்றை தனது முரண்பாட்டின் மீது அடிப்படையாக கொண்டே தனது அரசியலை, பாட்டாளி வாக்க கோட்பாடு அடிப்படை சாராத நிலையில் கையாண்டமையால், இதனால் கட்சியின் முரண்பாடு எதிர் நோக்கும் அபாயத்தை புரிந்து கொண்டார். நடைமுறையில் எதிரியை உடனடியாக அடையாளம் காண்பதும், இடைநிலை போக்கு சார்ந்து நழுவலை வெளிப்படுத்தும் சந்தர்ப்பவாதத்தின் சூழ்ச்சியை வெறுப்பது, நடைமுறை சார்ந்து போராடுபவர்கள் உடனடிக் குணாம்சமாக இருக்கின்றது. இதில் தனிப்பட்ட நபர்களின் குணம்சம் கூட இதை மேலும் ஊக்கிரமாக்கும் என்பதை காண்கின்றார். லெனின் மரணத்தின் பின்பு ஸ்டாலின் சோசலிசத்தை கட்ட முடியுமா?, இல்லையா? என்ற அடிப்படையான விவாதம் மீது (இதுவே அங்கு நிலவிய பிரதான முரண்பாடும், கோட்பாடுமாகும்), லெனின் தத்துவார்த்த பங்களிப்பை போன்று ஸ்டாலின் தனது பங்களிப்பை சோசலிசத்தை கட்ட முடியும் என்று தத்துவார்த்த துறை சார்ந்து அதை நிறுவினார். சோசலிசத்தை கட்ட முடியாது என்ற டிராட்ஸ்கி, புகாரின்; இந்த விவாதத் தளத்தில் தத்துவார்த்த துறை சார்ந்து நிறுவ முடியாது சிறுபான்மையான போது, அவர்கள் கோட்பாட்டு விவாதம் அல்லாத வழிமுறைகளை கையாளத் தொடங்கினர். இது எப்படி வளர்ச்சி பெற்றது என்பதை பின்னால் பார்ப்போம்.



லெனின், ஸ்டாலின் பற்றிய கருத்தை எடுத்துக் கொண்ட லெனின் கட்சி, ஸ்டாலினை தொடர்ந்து கட்சிச் செயலாளராக தேர்ந்து எடுக்கின்றது. ஸ்டாலின் இல்லாத புதிய தலைவரை கட்சி கண்டறியவில்லை. கட்சி தனது போல்ஷ்விக் வரலாற்று போராட்டத்தினூடாக, தனது சொந்த தலைவரை தெரிந்து எடுப்பதில் உறுதியாகவே இருந்தது.

ஸ்டாலின் லெனினுக்கு பின்பாக பாட்டாளி வர்க்க தலைமையை முன்னெடுத்த போது, அவர் அதை பாதுகாப்பதில் என்றும் பின்வாங்கியதில்லை. பாட்டாளி வர்க்க வர்க்கப் போராட்டத்தை நடத்துவதில் அவரின் மரணம் வரை, அனைத்து சர்வதேச உறவுகளில் இருந்து உள்நாட்டு உறவுகள் ஈறாக உறுதியாக விட்டுக் கொடுக்காத பாட்டாளி வர்க்க தலைவராக இருந்தார். கோதா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனத்தில் மார்க்ஸ் "இங்கு நாம் கையாள வேண்டியது அதன் சொந்த அடித்தளத்தின் மீது வளர்ச்சியுற்ற என்கிற முறையிலான கம்யூனிச சமுதாயத்தைப் பற்றி அல்ல; ஆனால் மாறாக, முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து இப்பொழுது தான் உதிக்கும் சமுதாயத்தைப்பற்றி; அது பொருளாதார ரீதியில், அறிவுத்துறை ரீதியில் இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் இன்னமும் அது உதிக்கும் கருப்பையான பழைய சமுதாயத்தின் பிறப்புச் சின்னங்களால் முத்திரைக் குத்தப்பட்டிருக்கிறது." என்று மார்க்ஸ் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதற்காக, ஏன் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று வரையறுத்தாரோ, அதை கையாள்வதில், விளக்குவதில், முன்னெடுப்பதில் உறுதியான வர்க்க நிலையைக் கையாண்டார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஸ்ராலின்-கிரோவ்

1.12.1934ம் ஆண்டு ஸ்டாலின் எதிர்ப்பு முன்னணி தலைவர்களின் இரகசிய சதி மூலம், ஸ்டாலினின் மிக நெருங்கிய நண்பரும், முன்னணித் தலைவருமான கிரோவ் படுகொலை செய்யப்பட்டதைத் தொடாந்து, ஸ்டாலின் சதி மற்றும் நாச வேலையை கட்டுப்படுத்தி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்க வேண்டியிருந்தது. இந்த படு கொலைக்கு முன்பாக நடந்த 17 வது கங்கிரசில் புகாரின், ரைகோவ், டோம்ஸ்கி போன்றோர் சுயவிமர்சம் செய்தனர். டிராக்ஸ்சிய வாதிகளான ஜினோவிவ், காமனோவ் ஆகியோர் கட்சியை புகழ்ந்ததுடன், தமது தவறுகளை கடுமையாக சுயவிமர்சனம் செய்தனர். இவர்கள் இனியும் கருத்து தளத்தில் போராடி ஸ்ராலினை முறியடிக்க முடியாது என்பதால் சுயவிமர்சனத்தை செய்தபடி, இரகசியமான படு கொலைகள் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற சதி செய்தனர். இதை டிராட்ஸ்கிய நான்காம் அகிலம் சர்வதேச ரீதியாக முன்வைக்க, அதைப் பெருமைபட தொழிலாளர் பாதை தமது வீரதீரச் சதிச் செயலை முன்வைக்கின்றது. டிராட்ஸ்கி தனது சுய வரலாற்றில், தனது மகன் 1923 இல் இருந்தே சட்ட விரோதமாக, லெனின் உயிருடன் இருந்த போதே கட்சிக்கு எதிராக இயங்கியதாக பெருமையுடன் குறிப்பிடுகின்றார். இந்த சதிகளில் பங்குபற்றி இன்று உயிருடன் தப்பி வாழும் நபர்கள், இந்த சதியை பெருமைபட முன்வைக்கின்றனர். இந்த படுகொலை இரகசியக் குழுக்களில் இயங்கியோர் கட்சியின் முக்கிய உறுப்பினர்களாக இருந்தனர்.

இச் சதிகளில் ஈடுபட்ட முன்னணி தலைவர்கள் ஜனநாயக மத்தியத்துவத்தை கட்சியில் கடைப்பிடித்தார்களா? 1925 இல் 14வது காங்கிரஸ்சில் டிராட்ஸ்கி ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்ட முடியாது என்றும், புகாரின் அமைதியான முதலாளித்துவ வளர்ச்சியூடாக சோசலிசத்தை அடையாளம் என்றும், காமனோவ், ஜினோவிவ் பொருளாதாரத்தில் சோவியத் பிற்போக்காக இருப்பதால் சோசலிசத்தை கட்ட முடியாது என்றும் முன்வைத்தனர். டிராட்ஸ்கி சோசலிசம் கட்ட முடியாது என்று கூறி அப்படி கட்டப்படின் "தோல்வியடையும் - அது வளராமல் தேங்கி நிற்கும் அல்லது நெப்போலியன் சர்வாதிகாரமாக முடியும்" என்ற கூறி எதிர்த்து நின்றார். ஆனால் ஸ்டாலின், லெனின் தொடரக் கோரிய வர்க்கப் போராட்ட அரசியலை முன்வைத்தார். அரசும் புரட்சியும் என்ற நூலில் லெனின் "முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுதலடைவது நிச்சயம் ஒரு பிரம்மாண்டமான மிதமிஞ்சிய மற்றும் பல்வேறு வகையான அரசியல் வடிவங்களை பெற்றுத் தராமலிருக்க முடியாது; ஆனால் சாராம்சத்தில் தவிர்க்க முடியாமல் ஒன்றாகவே இருக்கும்: பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்" என்றார். இந்த மாற்றம் தொடர்பாக லெனின் "மீண்டும் தொழிற் சங்கங்கங்கள் மீது, தற்போதைய நிலைமையும் ட்ராட்ஸ்கி மற்றும் புகாரினது தவறுகளும்" என்ற கட்டுரையில் "அரசியல் என்பது பொருளாதாரத்தின் மீது அரசியல் முன்னிலை பெறாமல் இருக்க முடியாது. வேறுவிதமாக வாதிடுவதன் பொருள் மார்க்சியத்தின் அரிச்சுவடியை மறப்பதாகும்.....எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு (குடிமக்கள் மீது) ஒரு சரியான அரசியல் அணுகு முறையின்றி வர்க்க ஆட்சியை நிலைநாட்ட முடியாது; அதன் விளைவாக அதன் சொந்த உற்பத்தி பிரச்சினையே தீர்க்க முடியாது" என்று தொடர வேண்டிய சோசலிச புரட்சியின் வர்க்கக் கடமை பற்றி தெளிவுபடுத்துகின்றார். இதை புகாரின், டிராட்ஸ்கி மறுத்து தனிநாட்டில் சோசலிசம் கட்ட முடியாது அல்லது மெதுவாக மாறும் என்ற போது, இதை ஸ்டாலின் கோட்பாட்டு ரீதியில் அம்பலம் செய்து முறியடித்தார். அங்கு இவைகளை விவாதிக்கும் உரிமை ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையில், கட்சியில்

1917 இல் கம்யூனிஸ்டுகள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்சி சுதந்திரம் தெளிவாக இருந்தது. கட்சியில் ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையிலான கருத்துச் சுதந்திரம் இருந்த போதும், 1926 இல் டிராட்ஸ்கி மற்றும் ஜினோவிய, கட்சிக்குள் எதிர்க் குழுவைக் கட்டினர். கட்சியின் ஜனநாயக மத்தியத்துவத்தை அடிப்படையாக கொண்ட மார்க்சியத்தை மறுக்கும் வடிவமாக இது உருவானது. இது பொது விவாதம், பெரும்பன்மை சிறுபான்மை கட்டுப்படும் கட்சி நடைமுறை, கட்சியில் பகிரங்கமாக கருத்தை வைக்கும் சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான நேர்மை, என அனைத்தையும் மறுத்தே, எப்போதும் குழுவடிவம் தோற்றம் பெறுகின்றது. இதன் தொடர்ச்சியாக 1927 இல் கட்சியில் விவாதம் ஒன்றை உருவாக்கி, தொழில் மயமாக்கல் தீவிரமாக்கவில்லை என்றும், விவசாயிகளை தொழிலாளருடன் இனைக்கும் கொள்கையை எதிர்த்தும், தொழிலாளர் விவசாயி முரண்பாடு இயல்பானது என்றும், அதை தீவிரமாக்கும் படி கோரி நடந்த கட்சி விவாதத்தில் அரசியல் ரீதியாக தோற்கடிக்கப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக தமது சிறுபான்மை கருத்தை வைத்து கட்சிக்குள் போராடுவதற்கு பதில், மொஸ்கோ மற்றும் லெனின் கிராட்டில் பகிரங்கமான அரசுக்கு எதிரான ஆர்ப்பட்டத்தை செய்தனர். கட்சியின் எதிரிகளை துணைக்கு அழைத்தனர். இதன் தொடர்ச்சியில் தான் டிராட்ஸ்கி மற்றும் ஜினோவியும் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இங்கு யார் கட்சி ஜனநாயகத்தை கேடாக பயன்படுத்தினர். யார் கட்சியின் உயிர்ரோட்டமான ஜனநாயகத்தை இழிவாக்கினர்? ஜனநாயக மத்தியத்துவத்தை மறுத்து, அதை அர்த்தமற்றதாக்கிய படி கட்சிக்குள் கட்சி கட்டி, கட்சிக்கு எதிராகவே போரட்டத்தை பகிரங்கமாக வெளியில் நடத்துகின்றவர்கள் பற்றி லெனின் என்ன கூறுகின்றார்.



"இடதுசாரி கம்யூனிசம்..." என்ற நூலில் லெனின் "ருசியாவில் நாங்கள் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு அல்லது கம்யூனிசத்தின் முதல் கட்டத்திற்கு மாறுவதில் முதல் படிகளின் வழியாகப் போகிறோம். (முதலாளித்துவ வர்க்கம் தூக்கியெறியப்பட்டதிலிருந்து மூன்றாவது ஆண்டில்) வர்க்கங்கள் நீடிக்கின்றன: பாட்டாளி வர்க்கத்தால் அதிகாரம் வெல்லப்பட்ட பிறகு பல ஆண்டுகளாக எங்கெங்கும் அவை நீடிக்கும். ஒரு வேளை இங்கிலாந்தில் அங்குதான் விவசாயிகள் இல்லை. (ஆனால் அங்கும் சிறு உடமையாளர்கள் இருக்கிறார்கள்) இந்த காலகட்டம் குறுகியதாக இருக்கலாம். வர்க்கங்களை ஒழிப்பதன் பொருள் நிலப்பிரபுகள், முதலாளிகளை விரட்டியடிப்பது மட்டுமல்ல - அதை ஒப்பீட்டு வகையில் எளிதில் சாதித்து விட்டோம். அதன் பொருள் சிறு பண்ட உற்பத்தியாளர்களை ஒழித்து கட்டுவதும் கூட ஆகும். அவர்களை விரட்டியடிக்க முடியாது அல்லது நசுக்க முடியாது; அவர்களோடும் இணக்கமாக நாம் வாழவேண்டும்; மிகவும் நீண்ட, நெடிய, மெதுவான, எச்சரிக்கையான ஸ்தாபன வேலையால் மட்டுமே மறுவார்ப்பும், மறுபோதனையும் செய்யமுடியும்; (செய்ய வேண்டும்) அவர்கள் குட்டி முதலாளித்துவ தன்னியல்போடு ஒவ்வொரு பக்கமும் முற்றுகையிடுகிறார்கள்; அதனால் பட்டாளி வர்க்கத்தக்குள் ஊடுருவி மாசுபடுத்துகிறார்கள்; அவர்களின் குட்டி முதலாளித்துவ முதுகெலும்பற்ற நிலை, ஒற்றமையின்மை, தனிமனிதப் போக்கு, எக்களிப்பு அல்லது சோர்வு என்ற மாறும் மனோநிலை ஆகியவற்றுக்கு பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் பின்னிழுத்துத்தள்ள இடையராது காரணமாக இருக்கின்றார்கள். இதற்கு எதிர்விணையாற்றும் பொருட்டும், பாட்டாளி வர்க்கத்தின் ஸ்தாபனப்படுத்தும் பாத்திரத்தை (மேலும் அது பிரதான பாத்திரம்) சரியாகவும், வெற்றிகரமாகவும், வெல்லத்தக்கவாறும் செலுத்தும் பொருட்டும், பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் கட்சிக்குள் கறாரான






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மையப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு தேவையாயிருக்கிறது. பழைய சமுதாயத்தின் சக்திகள் மற்றும் மரபுகளுக்கெதிரான இரத்தம் சிந்தியும், இரத்தம் சிந்தாமலும், வன்முறையாகவும் அமைதியாகவும், இராணுவ ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், கல்வி துறையிலும், நிர்வாகத் துறையிலும் ஒரு இடையராத போராட்டமே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம். பத்துலட்சம் பல பத்துலட்சங்களின் பழக்க வழக்கங்களின் சக்தி ஒரு மிகப்பெரும் பயங்கரமான சக்தி. போராட்டத்தில் எ.்.குறுதியாக்கப்பட்ட கட்சியின்றி, கொடுக்கப்பட்ட வர்க்கத்தில் நேர்மையான அனைத்திடமும் நம்பிக்கையைப் பூரணமாகப் பெற்ற ஒரு கட்சியின்றி, பரந்துபட்ட மக்களின் மனோநிலையை கூர்ந்து நோக்கி செல்வாக்கு செலுத்தும் வல்லமையுடைய ஒரு கட்சியின்றி, இம்மாதிரியான ஒரு போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துவது சாத்தியமில்லை. லட்சோப இலட்சம் சிறு உற்பத்தியாளர்களை வெல்வதை விட மத்தியத்துவப்படுத்தப்பட்ட பெரு முதலாளிகளை வென்றடக்குவது ஓராயிரம் மடங்கு எளிதானது; இருப்பினும் அவர்கள் தங்களது சாதாரமான, தினசரி புலனறிவுக்கு உட்படாத, நழுவக்கூடிய மனோதைரியத்தை இழக்கச் செய்யும் நடவடிக்கையின் மூலம் முதலாளிகளுக்குத் தேவையான முதலாளித்துவ வர்க்கத்தை திரும்ப நிலை நாட்டுவதற்கு விழையும் அதே விளைவைச் சாதிக்கிறார்கள். பாட்டாளி வர்க்கக் கட்சியின் எ.்.குறுதி வாய்ந்த கட்டுப்பாட்டை எவரொருவர் சிறுமைப்படுத்துகிறாரோ (குறிப்பாக அதன் சர்வாதிகார காலங்களின் போது) அவர் உண்மையில் பாட்டாளி வர்க்கத்திற்கெதிராக முதலாளித்துவ வர்க்கத்திற்கு உதவுகின்றார்'' என்று மார்க்சியத்தை தெளிவபடவே வரையறுக்கின்றார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஆணையில் வைத்து, வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்கும் கட்சிக்கு, எதிராக ஜனநாயக மத்தியத்துவத்துக்கு புறம்பாக நடத்தப்படும் எல்லாவிதமான செயற்படும், முதலாளித்துவ மீட்சிக்கான முயற்சியேயாகும். ஒருநாட்டில் சோசலிசத்தை கட்டமுடியுமா என்ற அடிப்படையான விடையம் தொடர்பாகவும், மாற்றுக் கருத்துக்கு 1920 களில் கருத்துச் சுதந்திரத்தை கட்சி வழங்கிவிடவில்லை என்று யாரும் நிறுவிவிடமுடியாது. அத்துடன் அங்கு ஜனநாயக மத்தியத்துவம் கட்சியின் பிரதான ஜனநாயக வடிவமாகவும் இருந்தது. இதை யாரும் மறுக்க முடியாது. டிராட்ஸ்கி முதல் பலரும் தமது கருத்தை கட்சியில் வைத்து விவாதிக்கவில்லையா? அங்கு தோற்கடிக்கப்பட வில்லையா?



1927 இல் கட்சிக்கு எதிராக டிராட்ஸ்கி, ஜினோவிய தலைமையில் லெனின்கிராட், மஸ்கோவில் நடத்திய ஆர்ப்பாட்டத்தால் எதிரிகள் உசார் அடைந்தனர். குலாக்குகள் தனியத்தை விற்க மறுத்தனர். அதே நேரம் புகாரின் - ரைகோவ் குலாக்குகள் மீது கடுமையான தாக்குதல் அவசியமில்லை என்றனர். புகாரின் விவசாயிகளைப் பார்த்து "நீங்கள் (விவசாயிகள்) உங்களை வளப்படுத்திக் கொள்ளுங்கள்" என்றார். மேலும் அவர் சோசலிசத்தை கட்டுவதைப் பற்றி "நாங்கள் மெல்லமெல்ல அடியெடுத்து வைத்து முன்னேறுவோம். பெருந்தொகையான குடியான்கள் என்ற வண்டியை நாம் எம்மோடு இழுத்துச் செல்ல வேண்டும்" என்றார். கைத்தொழில் மயமாக்கல் மக்களுக்கு பெரும் சுமை என்ற கூறி, அதை கைவிடக் கோரினர்.



ஆனால் ஸ்டாலின் இதை மறுத்து வர்க்கப் போராட்டத்தை தொடுத்த போது, காமனேவை இரகசியமாக சந்தித்த புகாரின் பற்றிய குறிப்பில், காமனேவ் குறிப்பிட்டுவதைப் பார்ப்போம்.. அதில் "அவன் (இங்கு அவன் என்பது ஸ்டாலின்) ஒன்றையும் விட்டுவைக்க மாட்டான்... அவன் நம்மை அழித்து விடுவான்..." என்றதுடன் தமக்கிடையில் உள்ள முரண்பாட்டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட, ஸ்ராலினை எதிர்ப்பது முக்கியமானது என்றார். வர்க்கங்களை சமரசம் செய்து கொண்டு செல்ல தெரியாத சதிகாரனாகவும், அதில் கொள்கையற்றவனாகவும் ஸ்ராலினை வருணித்து, இரகசியமாக சதி செய்யவும் தயங்கவில்லை. "அவன் கொள்கைகள் அற்ற சதிகாரன்: பழிவாங்கவும் முதுகில் குத்தவும் மட்டுமே அவனுக்குத் தெரியும்" என்று புகாரின் கூட்டுப் பண்ணையாக்கலில் சலுகை வழங்கிய போராட்டத்தை கோரிய போது (அதாவது "நமது விசாலமான விவசாய வண்டியை நம் பின்னால் இழுத்துக் கொண்டு சிறுசிறு எட்டுகள் வைத்து நாம் முன்னேறுவோம்" என்று புகாரின் கட்சியிடம் சலுகையாக கேரிய போது), இங்கு வலதுக்கும் இடதுக்கும் இடையில் கட்சி போராடிய போது, சலுகையின் அடிப்படையில் கொடுத்த வலது இடது ஆதாரவை, அடுத்தகட்ட வர்க்க ஒழிப்பில் கட்சி மறுத்த போதே, இப்படி புகாரின் வருணித்தார். வலதுக்கும் இடதுக்கும் இடையில் கட்சி தனது வர்க்கப் போராட்டத்தை தொடர்ந்த போது, இடதை எதிர்க்கும் போது வலதும், வலதை எதிர்க்கும் போது இடதும் பெற்ற சலுகைகளை எதிர் கொண்டே, ஸ்ராலினின் வலதுக்கும் இடதுக்கும் எதிரான இரண்டு பக்க போராட்டத்தையே கொள்கையற்றதாக வருணித்து, சதியாக வருணிக்க முடிகின்றது. இங்கு இடது வலது அல்ல பிரச்சனை, இதை அடிப்படையாக கொண்ட வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பதா? இல்லையா? என்பதே பிரச்சனை. இதற்கு எதிரான போக்கே சதியாகும். வர்க்கப் போராட்டத்தை மறுக்கும் போக்குக்கு எதிரான போராட்டத்தையே, சதியாக வருணிப்பது ஸ்டாலின் எதிர்ப்பின் அடிப்படையான அரசியல் உள்ளடக்கமாகும். புகாரின் இதற்காக இரகசிய சதிகளில் ஈடுபட்டதை தொடர்ந்தே, புகாரினை கட்சியின் மத்திய குழுவில் இருந்து கட்சி வெளியேற்றியது.



கட்சியின் உயிரோட்டமான கருத்துச் சுதந்திரத்தை, சதிப்பாணியிலான வடிவத்துக்கு நகர்த்திச் சென்றதில், ஸ்டாலின் எதிர்பாளர்களின் பங்கு மிக முக்கியமானது. உள்ளடக்கத்தில் சதிகளின் மூலம் கட்சியின் பெருபான்மையை எதிர்க்க கிளம்பிய போது, கட்சியின் ஜனநாயக மத்தியத்துவத்தை முறைகேடாக கையாண்டனர். ஸ்ராலினை ஏன் எதிர்த்தார்கள். அதாவது ஸ்ரானிலிசம் என்று எதை இன்றும், அன்றும் அடையளப்படுத்துகின்றனர். ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்ட முடியுமா? இல்லையா? என்ற அடிப்படையான கேள்வி மீதே, இது மையப்படுகின்றது. ஸ்ராலினிசியமாக இருப்பது ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்டமுடியும் என்ற தொடரும் வர்க்கப் போராட்டப் பாதையே. இதை எதிர்ப்போர் கட்டமுடியாது என்பதன் மூலம், வர்க்க சராணாகதியை கோரினர். ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்டமுடியும் என்பது ஸ்ராலினிசியம் என்றால், அது லெனிசமாக இருக்கின்றது. அதைப் பார்ப்போம்.

1915 இல் முதலாம் உலக யுத்தம் தொடங்கிய பின்பு மென்ஷ்விக்குள் ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்ட முடியாது என்ற போது, டிராட்ஸ்கியும் இது சாத்தியமில்லை என்றார். ஆனால் லெனின் "ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் என்ற முழக்கம் பற்றி" என்ற கட்டுரையில் "ஒரு தனிப்பட்ட முழக்கம் என்கிற வகையில் உலக ஐக்கிய நாடுகள் என்பது சரியானதாக இருக்க முடியாது. எனெனில் இதற்கு, ஒரு தனி நாட்டில் சோசலிசத்தின் வெற்றி சாத்தியமானதல்ல என்று தவறான பொருள் வழங்கப்படக்கூடும்" என்றார். லெனின் புரட்சிக்கு பின்பு "ரசியாவில் பழைய நிலை திரும்பி வருவதற்கு எதிரான ஒரே உத்திரவாதம், மேற்கு நாட்டில் ஏற்படுகிற ஒரு சோசலிசப் புரட்சிதான். ஆனால் இதை நினைத்த மாத்திரத்தில் வரவழைக்கக் கூடிய ஒரு நிலையில் நாம் இல்லை. ஆனால் ஒரு சார்பு நிலையான, நிபந்தனைக்கு உட்பட்ட 'உத்திரவாதம்' ஒன்று உண்டு. ரசியாவில் கூடுமான வரை மிகமிக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விரிவான விளைவுகள் ஏற்படுத்துகின்ற, முரணற்ற, உறுதியான முறையில் புரட்சியை நிறைவேற்றுவதில்தான், பழைய நிலை திரும்பி வரவதற்கு எதிராகக் கூடுமான வரையில் மிகவும் சாத்தியமான தடைகளை எழுப்புவதில் பொதிந்துள்ளது." என்றார். இதுதான் 1925 களில் மீளத் தொடங்கிய அரசியல் விவாதத்தின் அடிப்படையும், உள்ளடக்கமாகும். அதாவது ஸ்ராலினிசமாகவும் அதன் மீதான எதிர்ப்பாகவும் இருப்பதன் அரசியல் உள்ளடக்கமும் இதுதான். ஆனால் ஸ்டாலின், லெனின் ஓரே கட்சியின் நீண்ட காலத் தலைவர் என்ற வகையில், லெனியத்தை முன்னெடுப்பதில் வேறு யாரையும் விட முன்னணியில் இருந்தார். லெனின் ஏழாவது காங்கிரஸ்சில் "ரஷ்யாவில் பாட்டாளி வர்க்க அரசின் கரங்களில் உள்ள பொருளாதாரச் சக்தியானது, கம்யூனிசத்தை நோக்கிய மாறுதலை உறுதி செய்ய போதுமானது." என்றார். கூட்டுறவு பற்றிய கட்டுரையில் "நம்மை இப்போது எதிர்கொண்டிருப்பது இக் கலாச்சார புரட்சிதான். இக்கலாச்சாரப் புரட்சியானது, நம் நாட்டை ஓர் முற்றிலும் சோசலிச நாடாக உருவாக்குவதற்கு போதுமானது" என்றார். இது போல் லெனின் பல தரம் இதை விரிவாக்கியுள்ளார். இதை டிராட்ஸ்கி தொடர்ச்சியாக எதிர்த்ததுடன், இதையே ஸ்ராலினிசமாக, லெனினை முடி மறைத்தபடி மார்க்சியத்துக்கு எதிரானதாக காட்டினர்.

ஒரு நாட்டில் புரட்சிக்கு பின்பு வர்க்கப் போராட்டத்தை தொடர்ந்து சோசலிசத்தை கட்டுவதா இல்லையா என்ற கேள்விக்கு டிராட்ஸ்கி "தோல்வியடையும் -அது வளராமல் தேங்கி நிற்கும் அல்லது நெப்போலிய சர்வாதிகாரமாக முடியும்" என்றதன் மூலம், ஸ்ராலினை எதிர்த்தன் மூலம், மீளவும் பழைய மென்ஷ்விக்குகள் நிலையில் லெனினை மறுத்து நின்றார். இதை பின்னால் இழிவாக்கி ஸ்ராலினிசமாக்கினார். ஸ்ராலினுக்கு பதில் டிராட்ஸ்கி ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும். ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்டமுடியாது. அது தேங்கிவிடும் அல்லது சர்வாதிகார நெப்போலியன் ஆட்சியாகி விடும் என்று கூறிய படி, பழையதுக்கு திரும்பிச் செல்வதையே முன்வைத்திருக்க முடியும். இதைத் தாண்டி அவரால் தனது கோட்பாட்டுக்கு விளக்கம் சொல்ல முடியாது. இதைத்தான் இன்று தூக்கி பிடித்து காவடி எடுப்பதன் மூலம், முன்வைக்கும் ஸ்டாலின் எதிர்ப்பின் வர்க்க நோக்கம் தெட்ட தெளிவானவை. இந்த அரசியல் உள்ளடகத்தில் தான் ஸ்டாலின் முரண்பாடு உருவாகின்றது. கட்சி எதற்காக உருவாக்கி, எதற்காக போராடி புரட்சியை நடத்தியதோ (இந்த போராட்டத்தில் டிராட்ஸ்கி எதிர்த்தே நின்றவர்), அந்த கட்சியின் நோக்கத்தை எதிர்த்த போது, கட்சியில் தொடர்ச்சியாக தோற்றுப் போனர்கள். கட்சி இவைகளை விவாதிகவும், கருத்தை வைக்கவும் வழங்கிய ஜனநாயக மத்தியத்துவத்தையும், அரசியல் அதிகாரத்தையும் முறை கேடாக பயன்படுத்தினர். கட்சியின் ஜனநாயகத்தை குழதோண்டி புதைத்தன் மூலம், சதிகளை திட்டமிட்டனர். இந்த சதிகளை கட்டி அமைத்தவர்கள், அதில் பங்கு கொண்டோர் தமது புரட்சிகர நடவடிக்கையாக கூறிக் கொண்டு, இன்று ஸ்ரானின் விசாரனை அல்லாத ஒரு நிலையில் வெளிக் கொண்டு வரும் வாக்கு மூலங்களில் இருந்து, அதை இன்று பெருமையுடன் முன்வைக்கும் நான்காம் அகிலத்தின் பத்திரிகையில் இருந்து, இந்தச் சதிகளைப் பார்ப்போம்.



அந்த சதியில் பங்கு கொண்ட ஒருவன் தனது புரட்சிகரமான மார்க்சியமாக வெளியிடும் கருத்தில் (இதை புரட்சிகர மார்க்சியமாக நான்காம் அகிலம் பெருமையுடன் கருதி வெளியிடுகின்றது) "இதைக் கவனத்தில் கொண்டு நான் சுருக்கமாக மிக முக்கியமான ஆண்டான 1932 தொடர்பாக கூறவிரும்புகிறேன். இந்த வருடம் ஸ்டாலின் குழுவினரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியலின் விளைவாக (இங்கு விளைவு என்பது கூட்டுப் பண்ணையாக்கல்) பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிய வருடமாகும். நாட்டின் பலபாகங்களிலும் முக்கியமாக உக்கிரேனிலும், வட கல்கசாவிலும் சிறு அளவிலான உள்நாட்டு யுத்தம் ஒன்று நடந்து கொண்டு இருந்தது. இவ்விளைவில் விவசாயிகளுக்கு எதிராக இராணுவத்தை நிலைகொள்ளச் செய்ய வேண்டியதோடு பீரங்கி, டாங்கிப் படைகளை பிரயோகிக்க வேண்டியிருந்தது.... இந்த நிலைமைகளின் கீழ் இதுவரை தலைமறைவாக இயங்கி வந்த சில எதிர்ப்புக் குழுக்களின் நடவடிக்கைகள் மீண்டும் புத்தியிர்ப்படைந்தன. அவர்கள் ஸ்ராலினுக்கு எதிரான போராட்டத்திற்காக ஒன்றுபடுவதற்காக சில திட்டவட்டமான முயற்சிகளை செய்தனர். ......" என 4ம் அகிலப் பத்திரிகை தமது சதியை அழகாக் குறிப்பிடுகின்றனர். 1932 இல் குலாக்குகல் என்ற புதிய நிலப்பிரபுகள் ஒரு உள்நாட்டு யுத்தத்தை, தனது அதிகாரத்துக்காக நடத்திய போது, இதை கட்சியில் இருந்த முக்கிய முன்னணி தலைவர்கள் பயன்படுத்தினர். ஒரு நாட்டின் எதிரி வர்க்கம் சார்ந்து நின்று செய்யும் ஸ்ராலினிய எதிர்ப்பைத் தான், இவர்கள் மார்க்சியம் என்கின்றனர். லெனின் தொடரும் வாக்கப் போராட்டத்தைப் பற்றி "பஞ்சத்தை முறியடிப்பது" என்ற அறிக்கையில் "ஆ! தொழிலாளர் வர்க்கம் பழைய முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து ஒரு இனப்பெருஞ் சுவற்றால் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒரு தனி நபர் இறந்து போகும் விவகாரத்தில், இறந்தவர் சாதாரணமாகத் தூக்கிச் சென்று விடப்படுவதைப் போல் புரட்சியின் போது நடப்பதில்லை. பழைய சமுதாயம் சிதைவுறும் போது அதன் பிணத்தை சவப்பெட்டியில் வைத்து ஆணியடித்து சவக்குழியில் புதைத்து விட முடியாது. நமது மத்தியிலேயே அது உருக்குலைகிறது. பிணம் அழுகுகின்றது. நமக்கு நச்சிடுகிறது." என்றார். எதிரி வர்க்கத்தைச் சார்ந்து கட்சியின் சிறுபான்மை, எதிர் புரட்சிக்கு முயற்சி எடுத்தது. நச்சிட்டது.



ஸ்ராலினை எதிர்த்து சதிப்பாணியிலான வழியில் மார்க்சியத்தை விளக்கி, எப்படி எதிர்ப் புரட்சியைக் கையாண்டனர் என்பதை அவர்களின் கூற்று மூலமே பார்ப்போம். இவர்கள் இதைச் சாதிக்க ".... தனது இடது வலது எதிர்ப்புக் குழுக்களுடனான அரசியல் சித்தாந்த முரன்பாடுகளை திர்த்துக் கொள்வதற்காக...... 1932ம் ஆண்டளவில் இடது வலது எதிர்ப்பாளர்களிடம் இருந்த முரண்பாடுகள் விலக்கப்பட்டிருந்தன அல்லது ஓரளவு சுமுகமாக இருந்தன. முக்கிய புரட்சிகர எழுத்தாளரான VICTOR SERGE நாடுகடத்தப்பட்ட பின், ஐரோப்பாவிற்கு வந்த பின்னர் தான், பல முன்னைநாள் வலது எதிர்ப்பாளர்களை சந்தித்ததாகவும், புக்காரின் ஆதரவாளர்கள் அப்போது அவர்கள் லியோன் டிராட்ஸ்கி தொடர்பாயும் இடது எதிர்ப்பாளர்கள் தொடர்பானதுமான அவர்களது அணுகுமுறை கணிசமான அளவு மாறியுள்ளதாக கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளர்." என்று 4ம் அகிலம் ஏற்றுக் கொள்ளும் போது, முன்னை வலதுடன் கூடி எதைச் செய்ய முணைந்தனர் என்பதை அதன் சொந்த வாக்கு மூலத்தில் தொடர்ந்து ஆராய்வோம்.

4ம் அகிலக் கட்டுரையில் "புரட்சிகர எழுத்தாளர் VICTOR SERGE பல முன்னைநாள் வலது எதிர்ப்பாளர்களை சந்தித்து இடதுடன் ஒன்றினைத்தார்" என்கின்றனர். ஒரு புரட்சிகர எழுத்தாளர் எப்படி முன்னை நாள் வலதுகளைச் சந்தித்து ஒன்று இனைக்கும் அந்தப் புரட்சிகரத் திட்டம் தான் என்ன? எல்லாம் முதலாளித்துவ மீட்சிக்கான திட்டமேயாகும். இங்கு புரட்சிகரம் அல்ல, எதிர்புரட்சிகரமேயாகும்.

இந்த சதியின் தொடர்ச்சியாக "1932ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் புகாரின் ஆதரவாளர்கள் மொஸ்கோவில் ஒரு மாகநாட்டைக் கூட்டி ஸ்ராலினை எவ்வாறு எதிர்ப்பது என்பது தொடர்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆராய்ந்தார்கள். மூன்று வருடங்களுக்கு முன்னர் 1932ம் ஆண்டில் இளமையான மிகப் பிரபல்யம் அற்ற புகாரின் ஆதரவாளரான, இப்போது 95 வயதுடைய VALENTIN ASTROV (தற்போது உயிருடன் உள்ளார்) னைச் சந்திக்கக் கூடியதாக இருந்தது. முதலாவது இளம் வயது எதிர்ப்பாளர்களின் கூட்டம் இவரது வீட்டில் நடந்தது. அத்துடன் அவர்கள் ஸ்ராலினை பலாத்காரமாக துக்கி எறியவேண்டியது தொடர்பாக பகிரங்கமாக கலந்துரையபடியதை மிகவும் ஞபாகத்தில் வைத்திருந்தார். அவர் தனது தோழர்களுக்கு ஸ்ராலினுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொள்ள விரும்பவில்லை எனக் கூறியதால், அடுத்த கூட்டம் வேறு ஒரு இடத்தில் அவர் கலந்து கொள்ளாமலேயே நடந்தது. பின்னர் VALENTIN ASTROV, NKVD (சோவியத் உளவுப் பிரிவால்) இனரால் கைது செய்யப்பட்ட போது, இந்த இடங்களில் அவ்வப்போது நடந்த கூட்டங்களில் என்ன விவாதிக்கப்பட்டது என விசாரணையாளர்கள் கேட்ட போது VALENTIN ASTROV தனக்கு இப்படியான கூட்டங்கள் தொடர்பாக எதுவும் தெரியாது என பதிலளித்தார்... இவர்களில் முக்கியமானவர்கள் Ivan Njkjtovich, smirnov வின் குழுவைச் சேர்ந்தவர்களாகும். நாங்கள் இவர்களில் இருந்து 5 தடவை கைது செய்யப்பட்ட பெண் ஒருவரின் மகளிடம் இருந்து, இவை தொடர்பான தகவல்களை ரஷ்ய வெளியிடான இரு தொகுதிகளைப் பெற்றோம். Tatjana Mjagkova இன் மகள் எவ்வாறு இவ் இடது எதிர்ப்பாளர்களின் அங்கத்தவர்கள் தனது தாயின் வீட்டில் ஒன்று கூடினர் என்பது தொடர்பாகக் கூறினார். இக்கூட்டத்தில் சினோலியேவ், கமனேவ் தாங்கள் ஸ்ராலினை அகற்ற வேண்டியதுடன் உடன் படுவதாகவும், டிராட்ஸ்கியுடன் தொடர்பேற்படுத்த வேண்டியதையும் ஏற்றுக் கொண்டனர். அவ்வேளை அவர்கள் தாம் 1917ல் விட்ட தவறை விட பெரிய தவறு 1927இல் இடது எதிர்ப்பாளருடன் பிரிந்து போனது தான் என குறிப்பிட்டனர். 1932 முழுவதும் இவ் எதிர்ப்பாளர் மத்தியில் எவ்வாறு பொதுவான ஸ்டாலின் எதிர்ப்புக் குழு ஒன்றைக் கட்டுவதென்பது தொடர்பான கலந்துரையாடல்கள் நடந்தன. இதற்கு முன் 1931ம் ஆண்டு Smirnov பெர்லினுக்கு உத்தியோகபூர்வமாக வந்த போது, ட்ரொடஸ்கியின் மகனான லியோன் சடோவை சந்திக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் டிராட்ஸ்கிக்கு சோவியத்யூனியனில் உள்ள எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் சேர்ந்து வேலை செய்வது தொடர்பாகவும், Smirnov விற்கும் ட்ரொட்கிக்கும் இடையில் விடையங்களைப் பரிமாறிக் கொள்வது தொடர்பாக கலந்துரையாடினர். இந்நிலையில் இருந்து டிராட்ஸ்கிக்கும் சடோவிற்கும் (டிராட்ஸ்கியின் மகன்) சோவியத்யூனியனில் இருந்த பல எதிர்ப்புக் குழுக்களுக்கும் இடையில் இறுக்கமான தொடர்பு ஏற்பட்டது. ..... " என்று இவ் வாக்கு மூலத்தை வெளியிடுவதிலும், ஸ்ராலினுக்கு எதிராக போராடியதையும் பெருமையாக முன்வைக்கின்றது. ஆனால் எப்படி மார்க்சியம் மற்றும் கட்சியின் ஜனநாயக மத்தியத்துவ வழியில் போராடினர் என்பதை மட்டும் பேசுவதில்லை.



"அமெரிக்க வரலாற்று ஆசிரியரான J.Archgettve பிரான்ஸ் வரலாற்று ஆசிரியரான Pierre Broue ஆகியோரே 1932 நிகழ்வுகள் தொடர்பாக முதலாவதாக எழுதியவர்களாவர்..... pierre Broue கூறியது போல் அவ்வழக்கு கூறப்பட்ட எதிரானவர்களிடையே கூட்டங்கள் கலந்துரையாடல்கள் உண்மையில் நடந்தது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதைவிட டிரொஸ்ட்கியின் மகனான லியோன் சடோல் ஆல் எழுதப்பட்ட பிரசித்தி பெற்ற செம்புத்தகம் The Red Booky "உண்மையில் என்ன நிகழ்ந்தது" என்ற அத்தியாயத்தின் கீழ் எழுதியுள்ள இக் கூட்டங்கள் தொடர்பான கருத்துக்கள் இதனை உறுதியாக்கின்றது. அவராலும் சகல நிகழ்வுகளை எழுத முடியாது இருந்ததுடன் அப்புத்தகம் எழுதப்பட்ட வேளையில்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படி சகலவற்றையும் எழுதாமல் இருக்க வேண்டியும் இருந்தது. உதாரணமாக லியோல் டிரொஸ்ட்கிக்கும், லியோன் சடோலுக்கும் இடது எதிர்ப்பாளர்களுக்கும் இடையே முக்கிய தொடர்பாளராக இருந்தவரான Yuri Gavan ஒரு பழைய போல்சுவிக் ஆவார். இவரின் பெயர் மொஸ்கோ வழக்கில் பலதடவை குறிப்பிடப்பட்ட போதும், அவ்வழக்குகளில் சட்சியாகவோ அல்லது குற்றவாளியாகவோ தோன்றாததுடன் தண்டனைக்குள்ளானவர்களிலும் அவர் இருக்கவில்லை. ட்ரொட்கியும், சடோவும் GPU ஆல் அவரை அடையாளம் காண முடியவில்லை என்ற முடிவிற்கு வந்தனர்.'' சதி நடந்தது என்பதற்கு இதை விட எந்த ஆதாரமும் தேவையற்றவை. மொஸ்கோ விசாரனை ஸ்டாலின் நாடகம் என்ற ஸ்டாலின் எதிர்பாளர்களின் கூற்றை, ஸ்டாலின் விசாரனை அல்லாத நிலையில் அச் சதியில் பங்கு கொண்டவர்கள், தமது முதலாளித்துவ சுதந்திரத்தில் பீற்றுவதில் இருந்தே, இன்று நாம் இவற்றை இனம் கண்டு கொள்ள முடியும். அத்துடன் டிராட்ஸ்கியின் மகனின் சொந்த நூலில் இருந்தும், ஸ்ராலினுக்கு எதிராக நடந்த இரகசிய கூட்டங்கள் மற்றும் சதியை கண்டு கொள்ளமுடிகின்றது. ஸ்டாலின் மூர்க்கம் மற்றும் விவசாய குணம்சம், பின்தங்கிய நாட்டில் சோசலிசத்தை கட்டியதன் விளைவு போன்றவற்றின் விளைவே விசாரனை என்ற நாடகம், என்பது அப்பட்டமான பொய்யாகிவிட்டது அல்லாவா! ஸ்ராலினை இல்லாது ஒழிக ஜனநாயகமல்லாத மார்க்கத்தை , கருத்தியல் முரண்பாட்டாளர்கள், ஒரு அரசியல் வழியாக கொண்டிருந்தது அம்பலமாகிவிடுகின்றது. இவை மார்க்சியமல்ல. இதில் இருந்தே ஸ்டாலின் தெரிவுகளும், நடத்தைகளும் எதிரியை நோக்கி உருவாகின.



மேலும் நான்காம் அகில வாக்கு மூலத்தைப் பார்ப்போம். ''டிராட்ஸ்கி நோர்வேயில் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருந்த போது, அப்போது தான் முதலாவது மொஸ்கோ வழக்கு நடந்து கொண்டிருந்தது. லியோன் சடோல் அவருக்கு ஒரு கடிதம் அனுப்ப முயன்றார்.... அவர் அக்கடிதத்தில் சதியாளர்களான Smirnov, Gaven போன்றவர்கள் தொடர்பாகக் குறிப்பிடுகின்றார். நாங்கள் இவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும்.... மிகவும் கவனிக்க வேண்டியது என்னவெனில், 1932ல் பல எதிர்ப்புக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருந்த போது, இக் குழுக்களில் இருந்து பலர் 1932-33 இல் கைது செய்யப்பட்டிருந்த போதும், 1932ல் இப்படியான குழுக்கள் இருந்தன என்பதற்கான எந்தவொரு சாட்சியையும் விசாரணையாளர்களால் கண்டுபிடிக்க முடியாதிருந்தது. இதற்கான காரணமாக 1935-36 வரை இக்குழுக்களைச் சேர்ந்த ஒரு தொகையினர் சுதந்திரமாக உலாவ முடிந்தது... 1932ம் ஆண்டு விசாரணையாளர்களுக்கு எதிரானவர்களின் குழுக்களில் ஒரு பிரிவு மட்டுமே இருப்பதாக அறியக் கூடியதாக இருந்தது. அக்குழுவில் ஒரு பிரிவுதான் ரீட்ற்றின் குழுவாகும். ........ 1927ம் ஆண்டு ரீட்ற்றின் ஒரு உறுதியான ஸ்ராலினிஸ்ட் ஆவர். மொஸ்கோவில் நடந்த இடது எதிர்ப்பாளர் கூட்டங்களை கலைப்பதற்கு அவரே தலைமை தாங்கியுள்ளார். 1928ம் ஆண்டு ஸ்ராலினின் அங்கும் இங்கும் செல்லும் அரசியலுக்கு எதிரான வலது எதிர்ப்பாளர்களின் மொஸ்கோ கட்சிக் குழுவின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். 1930ல் ரிட்ற்றின் பழைய போல்சுவிக்குகளுடன் இணைந்து ஸ்ராலினுக்கு எதிராக இயங்கவேண்டும் என்ற நிலையில் இருந்தார். 1932ம் ஆண்டு ஆண்டு மார்க்சிய லெனினிச கூட்டமைப்பின் நிறுவனராகவும் இருந்தார். இவர் இக்குழுவால் எற்றுக் கொள்ளப்பட்ட 100பக்கங்கள் அடங்கிய முன்நோக்கின் பெரும்பகுதியை எழுதியதுடன், இதன் தலைவராகவும் இருந்தார்... அதாவது இன்று கட்சியைப் பிரிவு படுத்தும் புதிய பிரச்சனையின் முன்னே பழைய எதிர்ப்பு வாதிகளிடையே இருந்த முரண்பாடுகள் களையப்பட்டு விட்டன...... ரீட்ற்றனின் முன்நோக்கு ஸ்ராலினுக்கு எச்சரிக்கையாக இருந்ததுடன் மிகுந்த பயத்தினை அளித்தது. இதன் விளைவாக இதனை மத்திய குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கத்தவர்களுக்கு இதனை வினையோகிக்காமலும், ஒரு மத்திய குழுக் கூட்டத் தொடரில் ரீட்றனைக் கண்டித்தார். ஆனால் இவ்வேதிர்ப்பு இயக்கத்தின் முழு அளவிலான நடவடிக்கைகள் தெடர்பாக 4 வருடங்களின் பின்னர் 1936ம் ஆண்டே தெளிவாகத் தெரியவந்தது. ......'' என்றதன் மூலம் ஸ்டாலின் தனிப்பட்ட ரீதியில் கட்சியின் ஜனநாயக மத்தியத்துவத்தை மதித்தத்தைக் காட்டுகின்றது. கருத்தை கருத்தால் எதிர் கொண்டு போராடியதுடன், ஜனநாயக மத்தியத்துவத்தை உறுதியாக பேனினார். ஆனால் சதியாளர்கள் பல குழுக்கலாக ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு இயங்கியது மட்டுமின்றி, இரகசிய நூல்களைக் கூட வெளியிட்டனர். அந்தளவுக்கு ஜனநாயகத்தை தவறாக ஸ்ராலினுக்கு எதிராக பயன்படுத்தினர். சதி கட்சிக்குள் கண்டுபிடிக்கப்பட்டவுடன், வர்க்கப் போராட்டத்தை பாதுகாக்க உறுதியாக விசாரனை செய்வதில் தொடங்க வேண்டியதாகிவிட்டது. இது வர்க்கப் போராட்டத்தின் புற நிலைமையின் விளைவே ஒழிய, ஸ்டாலின் தனிபட்ட அகநிலையோ, நாட்டின் பொதுவான நிலைமையோ அல்ல. மாறாக வர்க்கப் போராட்டத்தின் வேறுபட்ட வர்க்கத்தினை பிரதி செய்தவர்களின், ஜனநாயக விரோத வன்முறை அரசியல் தான் மஸ்கோ விசாரனையாகும்.



வர்க்கப் போராட்டத்தை சிதைக்க முயல்பவர்களை எதிர்த்து எப்படி போராட வேண்டம் என்பதை லெனின் "சோவியத் அரசாங்கத்தின் உடனடிக் கடமைகள்" என்ற பிரசுரத்தில் "முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கான ஒவ்வொரு மாறுதலின் போதும் இரண்டு முக்கிய காரணங்களுக்காக அல்லது இரண்டு முக்கிய வழிகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியம். முதலாவதாக சுரண்டலாளர்களின் எதிர்ப்புகளை இரக்கமற்ற முறையில் நசுக்குவது இன்றி முதலாளித்துவம் வீழ்த்தப்படவும் ஒழித்துக்கட்டப்படவும் முடியாது. சுரண்டலாளர்களிடமிருந்து அவர்களது செல்வத்தை அறிவிலும் அமைப்புத் துறையிலும் அவர்களுக்கு உள்ள சாதகத்தை உடனடியாகப் பறித்துவிட முடியாது. அதன் பயனாய் அவர்கள் வறியவர்களின் வெறுக்கத்தக்க ஆட்சியை (ஒரு நீண்ட காலத்திற்கு) தூக்கியெறிவதற்குத் தவிர்க்க முடியாமல் முயன்ற கொண்டிருப்பார்கள். இரண்டாவதாக ஒவ்வொரு மாபெரும் புரட்சியும் குறிப்பாக ஒரு சோசலிசப் புரட்சியும் உள் நாட்டு யுத்தம் இல்லாமல் நினைத்துப் பார்க்கமுடியாது.... ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ஊசலாட்டங்களையும் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு ஓடுகின்ற உதாரணங்களையும் உள்ளடக்கியதாகும்.... முந்தைய புரட்சிகளின் துரதிஷ்டம் என்னவென்றால் உருக்குலைக்கும் கூறுகளை ஈவு இரக்கமின்றி நசுக்க மக்களுக்கு பலத்தைத் தொடுக்கவும், அவர்களை ஒரு இறுக்கமான நிலையில் வைத்திருக்கவுமான புரட்சிகர உற்சாகம் நீண்ட காலத்திற்கு நீடிக்காதுதான் பரந்துபட்ட மக்களின் இந்த புரட்சிகர உற்சாகத்தின் நிலையின்மைக்கான சமுதாய வர்க்கக் காரணம் பாட்டாளி வாக்கத்தின் பலவீனம்தான்...." என்று தெளிவுபடவே விளக்ககின்றார். இதைத் தான் ஸ்டாலின் ஒருநாட்டில் வர்க்கப் போராட்டத்தை தொடர்வதற்கு எதிரான, சதிக் குழுக்களை ஈவிரக்கமின்றி ஒடுக்க போராடினர். இதில் தோற்றுப் போய்யிருந்தால் 1956 இல் குருசேவ் உருவாகியிருக்க வேண்டிய வரலாறு தோன்றிருக்காது. அது 1930 களிலேயே ஏற்பட்டு இருப்பதுடன், பாசிசம் உலகை ஆண்டிருக்கும்.

இந்த நான்காம் அகில டிராட்ஸ்கிய வாக்கு மூலத்தில் "1937இல் ஸ்ராலினுக்கு எதிராக ஒரு இராணுவ சதி நடந்ததா இல்லையா என்பது தொடர்பாக விவாதிக்க விரும்புகிறேன். (இதை தனது புத்தகத்தில் பார்க்கக் கோருகின்றார்)'' என நான்காம் அகில நீண்ட மேற்கோள்களை, வாசகர் சுயமாகப் புரிந்து கொள்ள நாம் எடுத்துக்காட்ட வேண்டியதாயிற்று.

இக்கட்டுரையில் உள்ளபடி சதியில் முதலில் பங்கு கொள்ள சம்மதித்து பின் விலகிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டவர்கள் தண்டிக்கப்படாதையும், மாற்றுக் கருத்து முன்வைக்கக் கூடிய நிலை (முன்வைக்கப்பட்ட ரீட்றறன் திட்டம்) அங்கு இருந்ததையும், அதை ஸ்ராலினுக்கு நேரடியாகக் கொடுக்கும் நிலை இருந்ததையும், 1936 வரை சதி பற்றி பெரிதாகக் கண்டு பிடிக்கப்படாததையும் இக்கட்டுரை தெளிவாக்கின்றது.

ஸ்டாலின் வர்க்க முரண்பாடு தொடர்ந்து இருப்பதாக, மார்க்சியத்துக்கு புறம்பாக இட்டுக் கட்டியே இந்த சதி பற்றி கற்பித்ததாக இடதுசாரி வேடதாரிகள் கூறிய படி மார்க்சியத்தை திரிக்கின்றனர். வர்க்கப் போராட்டம் என்பது புரட்சிக்கு பின்பு மிக தீவிரமாக மாறுவதுடன், எல்லாவிதமான முறையிலும் எதிரி வர்க்கம் போரட்டத்தை முன்னெக்கின்றது. இது ஸ்டாலின் கற்பனையல்ல. இது மார்க்சியத்தின் அரசியல் உள்ளடக்கம். இதையே ஸ்டாலின் முன்னெடுத்தார்.



இவை பற்றி மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் அதிக அனுபவத்தை நடைமுறையில் சந்திக்க விட்டாலும், முதலாளித்துவ வர்க்கத்தின் தோற்றுவாய்கள் பற்றி பலமுறை குறிப்பிட்டே எழுதியுள்ளனர். அவைகளை நாம் பார்ப்போம்.

மார்க்ஸ் "பிரான்சில் வர்க்கப் போராட்டம்" என்ற தலைப்பில் "பொதுவாக வர்க்க வேறுபாடுகளை ஒழித்துக் கட்டுவதற்கு, அவை தங்கியிருக்கும் எல்லா உற்பத்தி உறவுகளையும் ஒழித்துக் கட்டுவதற்கு, இந்த உற்பத்தி உறவுகளுக்குப் பொருத்தமான எல்லா சமூக உறவுகளையும் ஒளித்துக் கட்டுவதற்கு, இந்த சமூக உறவுகளில் இருந்து விளையும் எல்லாக் கருத்துகளையும் புரட்சிமயமாக்குவதற்கு அவசியமான மாறுதலுக்கான முறை என்கிற வகையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, புரட்சியின் நித்தியத்துவத்தைப் பிரகடனப்படுத்தவது சோசலிசம்" என்றார்.

இதையே லெனின் "வர்க்கங்களை ஒழிப்பது ஒரு நீண்ட, இடர்பாடுகள் மிக்க மற்றும் உறுதியான வர்க்கப்போராட்டத்தைக் கோருகிறது. மூலதனத்தின் அதிகாரம் தூக்கியெறியப்பட்ட பிறகு முதலாளித்துவ அரசு நொருக்கப்பட்ட பிறகு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்ட பிறகு (பழைய சோசலிசம், மற்றும் பழைய சமூக ஜனநாயகம் ஆகியவற்றின் ஆபாசமான பிரதிநிதிகள் கற்பனை செய்வது போல்) வர்க்கப் போராட்டம் மறைந்து விடுவதில்லை; மாறாக வெறுமனே அதன் வடிவங்களில் மாறுதலடைகிறது; மேலும் பல விவகாரங்களில் மிகவும் கடுமையானதாக மாறுகின்றது" என்றார் லெனின்.

இதை மேலும் அவர் "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் அரசியலும் பொருளாதாரமும்" என்ற பிரசுரத்தில் "பாட்டாளி வர்க்கத்தின் கீழ் சுரண்டும் வர்க்கத்தினர், அதாவது முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் மறைந்து விடவில்லை; எல்லோரும் ஒரே சமயத்தில் மறைந்து விடவும் முடியாது, சுரண்டலாளர்கள் வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஒழிக்கப்பட்டுவில்லை..... இன்னமும் விசாலமான சமூகத் தொடர்புகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதாலேயே அவர்களது எதிர்ப்பின் சக்தி ஒரு நூறு மடங்கு, ஆயிரம் மடங்கு அதிகாரிக்கின்றது. மக்கள் தொகையில் இருக்க வேண்டியதில் அவர்களது எண்ணிக்கையை விட ஒப்பிட முடியாத அளவு மிகப் பெரும் முக்கியத்துவமுடையதான வகையில் அரசு, இராணுவம் மற்றும் பொருளாதார நிர்வாகத்தின் 'கலை' அவர்களுக்கு மேலாண்மையைக், ஒரு மிகப்பெரிய அளவிலான மேலாண்மையைக் கொடுக்கின்றது. வென்ற சுரண்டப்படுபவர்களின் முன்னணிக்கு அதாவது பாட்டாளி வர்க்கத்தக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிராக தூக்கியெறியப்பட்ட சுரண்டலாளர்கள் தொடுக்கும் வர்க்கப் போராட்டம் ஒப்பிட முடியாதவாறு கசப்பானது. மேலும் புரட்சியைப் பற்றி பேசுகையில், இந்தக் கருத்தோட்டம் சீர்திருத்த மாயைகளால் இடமாற்றம் செய்யவில்லையானால், இது வேறானதாக இருக்கமுடியாது." என்றார் லெனின். இதைத் தான் ஸ்டாலின் பின்பற்றினார். லெனின் வர்க்க போதனைகளை உறுதிபட முன்னெடுப்பதில் அவர் இரும்பாக அதாவது ஸ்ராலினாக இருந்தார். இந்த வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்கும் போராட்டத்தை முன்னெடுத்த போது, அதில் சில கடுமையான தவறுகளைச் செய்தார். அவை என்ன? எப்படி இத்தவறுகள் நேர்ந்தன. இதற்கு பதிலாக எதை முன்னிறுத்தியிருக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

**பாட்டளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்கும் போராட்டத்தில், ஸ்டாலின் இழைத்த தவறுகள் என்ன?,**

ஸ்டாலின் பற்றிய மார்க்சிய ஆய்வுகள் எப்போதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்க நடத்திய வர்க்கப் போராட்ட திசையில் பகுத்தாய்வு செய்கின்றது. ஆனால் இடது சாரி பெயரிலும், புத்தக புத்திஜீவிகள பெயரிலும் மார்க்ஸ்சை மறுத்து, மார்க்சியமல்லாத நடைமுறையில் வாழ்ந்தபடி, மார்க்ஸ்சியத்தின் பெயரில் வெளிவரும் கருத்துகள், மார்க்சியத்துக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் இடைநடுவழிப் பாதை வழியாக ஸ்ராலினை கொச்சைப்படுத்த பின் நிற்கவில்லை. சர்வதேச மனிதஉரிமை அமைப்பு நிலையில் ஜனநாயகத்தையும், வன்முறையையும், சர்வாதிகாரத்தையும் கோட்பாட்டளவில் வகுத்துக் கொள்ளும் இவர்கள், ஸ்டாலின் இடத்தில் யார் இருந்தாலும் இதுதான் நடக்கும் என்கின்றனர். பின்தங்கிய நாட்டின் குறிப்பான நிலை, விவசாய குணம்சம், ஸ்ராலினின் முரட்டுக் குணம், ஜனநாயகத்தை ஏற்காதன் விளைவு, மேற்கு நாட்டு ஜனநாயகத் தன்மையை புரிந்து கொள்ளாத சமூகத்தின் குறைபாடான குணாம்சம், சோசலிசத்தை வன்முறையூடாக கட்டும் கோட்பாடு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை கொண்டு தனி ஒரு கட்சியாக உருவான ஜனநாயகமற்ற போக்கு, ஆரம்பம் முதலே லெனின் தலைமையில் வன்முறையை அடிப்படையாக கொண்டமையும், சோவியத்தின் புரட்சிக்கு மேற்கு நாடுகளின் புரட்சி உதவாமை என பல காரணத்தைச் சொல்லி, ஸ்ராலினை மறுப்பதில் காலத்தை ஒட்டி, அவதூறுகளை பரப்புகின்றனர். ஸ்டாலின் எதிர்ப்பை முன்னெடுப்பவர்கள் ஸ்டாலின் தனிமனிதனை வைத்தும், சம்பவங்களை மட்டும் அடிப்படையாக கொண்டு, கற்பனையாக விரும்பிய புள்ளி விபரங்கள் உடன் இதைச் செய்கின்றனர். இந்த இடது சாரி வேடதாரிகள் எங்கிருந்து புள்ளி விபரத்தைப் பெறுகின்றனர். ஏகாதிபத்தியம் மொத்தமாக வைத்ததில், கூட்டிக் கழித்து ஒரு பருமட்டான கணக்கை வைக்கின்றனர். இதற்கு ஆதாரம் எதுவும் கிடையாது. இடதுசாரிகளின் புள்ளிவிபரங்கள் எப்போதும் ஏகாதிபத்தியத்தின் தனித் தனியான (அரசியல் காரணத்துக்காக கொல்லப்பட்டதாக ஏகாதிபத்தியம் வைக்கும் இப் புள்ளி விபரங்களை, கட்டுரையின் தொடர்ச்சியில் பார்ப்போம்.) உட்கூறு புள்ளிவிர எண்ணிக்கையை, சில மடங்கால் தாண்டிவிடுவதன் உடன், அவதூறுக்கு ஆமதாரமாக கொல்லப்பட்டு இருக்க வேண்டும் என்ற விருப்பத்தை, ஸ்டாலின் அவதூறுகளை விரிவாக்க விரும்புவதன் ஊடாக விரும்புகின்றனர். உள் நாட்டில் நடத்தப்பட்ட வர்க்கப்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டம் எப்படி, ஏன் வளர்ச்சி பெற்றது. ஸ்டாலின் எதிர்பாளர்கள் எப்படி இதை கையாண்டனர் என்பதை எல்லாம், எந்த இடதுசாரி மனிதாபிமானியும் முன்வைப்பதில்லை. ஸ்டாலின் எதிர்தரப்பினர் என்ன அரசியலை முன்வைத்தனர், ஸ்டாலின் என்ன அரசியலை முன்வைத்தார். இதை சாதிக்க எப்படியான போராட்டத்தை முன்வைத்தனர், எப்படி அனுகினர் என்பதை எல்லாம் இவர்கள் மூடிமறைத்தபடிதான், அவதூறுகள் கட்டமைக்கப்பட்டன, படுகின்றன. இதை தெளிவாக புரிந்து கொள்ளாத வரை, வர்க்கப் போராட்டத்தை புரிந்து கொள்ளமுடியாது. இந்த வர்க்கப் போராட்டத்தில் ஸ்டாலின் இழைத்த சில கடுமையான தவறுகள் என்ன?

1.பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை புரட்சிக்கு பின்பாக உள்நாட்டில் முன்னெடுத்த வரலாற்றில், அதை மக்களை சார்ந்து நின்று அவர்களைக் கொண்டே முன்னெடுக்கும் பாதையை அவர் மேற்கொள்ளவில்லை. அதாவது புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் புரட்சிகரமான மக்கள்திரள் பாதையை அவர் கண்டறியவில்லை. எப்படி மக்களை அணிதிரட்டி வர்க்கப் போராட்டத்தை சொந்த நாட்டில் விரிவாக்குவது என்ற, மக்கள் திரள் வர்க்கப் பார்வையை, மார்க்சிய வளர்ச்சியாக முன்வைக்கவுமில்லை. இதை அக்காலத்தில் இருந்த யாருமே கண்டறியவும் இல்லை, முன்வைக்கவுமில்லை. புரட்சிக்கு பிந்திய வர்க்க சமுதாயத்தில் மக்களை அணிதிரட்டி அவர்களைக் கொண்டு புரட்சி செய்யும் பாதையை மாவோ கண்டறிந்தார். கலாச்சார புரட்சி வர்க்கப் போராட்டத்தை எப்படி தொடர்வது என்பதையும், மார்க்சியத்தில் உள்ளடகத்தை மேலும் புதிய நிலைமையூடாக வளத்தெடுத்தது.



2.மக்கள் திரள் பாதையை கண்டறியாத ஸ்டாலின் நிர்வாக முறையுடாக, அதாவது மேல் இருந்து கீழாக மட்டும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்கவும், முன்னெடுப்பதில் கவனத்தைக் குவித்தார். இதானல் விவசாயத்தை கூட்டுப் பண்ணையாக, அதாவது கம்யூன்களை உருவாக்கிய பாதையில் கடுமையான தவறை இழைத்தார். விவசாயிகளிடையே உள்ள ஏற்றத் தாழ்வான வர்க்க அடிப்படையை கொண்டு, புதிதாக உருவாகியிருந்த நிலப்பிரபுத்துவ வர்க்கமான குலாக்களை தனிமைப்படுத்த, மற்றைய வர்க்கங்களை சார்ந்து நின்று அவர்களை அணிதிரட்டி கம்யூனை உருவாக்கத் தவறி, பொதுவான நிலக் கூட்டுப் பண்ணையாக்கலை முன்வைத்தன் மூலம், பாட்டாளி வர்க்க நண்பர்களை எதிரி தனது பக்கம் அணிதிரட்ட முடிந்தது. பல அருமையான சினிமாக்கள் முதல் கலை இலக்கியம் வரை இந்த வர்க்க வேறுபாட்டை அடிப்படையாக கொண்டு, நிலக் கூட்டுப் பண்ணையாக்கலை விளக்கிய போதும், அதே நேரம் ஸ்டாலின் 1930 மாார்ச் 2ம் திகதி "வெற்றி தலைக்கேறியதின் வினை" என்ற இடதுசாரித் தவறை சுட்டிக் காட்டிய நூல் வெளியான போதும், நடைமுறையில் அவை முழுமையாக வர்க்கப் பகுப்பாய்வை கையாளப்படவில்லை. எதிரியை தனிமைப்படுத்துவதில், தண்டனை வழங்குவதில் வர்க்கப் பகுப்பாய்வு செய்த போதும், நிலத்தை கம்யூனுக்கள் கொண்டு வந்த பாதையில் இவை வர்க்க பகுப்பாயய்வை கையாள்வது அலட்சியப் படுத்தப்பட்டது. குறிப்பாக மூன்று முதல் ஆறு வருடத்தில் அண்ணளவாக முழு நிலமும் கூட்டுப் பண்ணைக்குள் வந்துவிட்டது. 1934 இல் 75 சதவீதமான குடும்பங்களும், 90 சத வீதமான விளைச்சல் நிலமும் கூட்டுபண்ணைக்குள் வந்தது விட்டது. 1928 இல் 14 லட்சமும், 1929 இல் 42 லட்சமும், 1930 இல் 1.5 கோடி பெறக்டேர் நிலமும் கூட்டுப் பண்ணைக்குள் வந்தது. 1934 இல் 90 சதவீத நிலமும் கூட்டுப் பண்ணைக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டது. இது அசாதித்தியமான நிலமையாகும். இது வர்க்க வேறுபாட்டை கவனத்தில் கொண்டிருக்கவில்லை என்பதை தெளிவாக்கின்றது. சோவியத்தில் நிகழ்ந்த புரட்சிக்கு பிந்திய முக்கிய புரட்சி என்ற வகையலும், 1917 புரட்சியில் பகிர்ந்து அளிக்கப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

40 கோடி ஏக்கர் நிலத்தை கூட்டுப்பண்ணைவடிவில் கொண்டு வரும் போது, மக்கள் நலனை அடிப்படையாக கொண்டிருந்த போதும், இதில் மக்களை சார்ந்து, அவர்களை புரட்சியில் நேரடியாக ஈடுபடுத்தும் மக்கள்திரள் மார்க்கத்தை கண்டு அறிய தவறிய போக்கு, புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் புரட்சியின் வடிவங்களை கண்டறிய முடியாத நிலைக்குள் இட்டுச் சென்றது. இந்த வடிவத்தை யாரும் அன்று கண்டறிந்ததில்லை. இது மேலும் மேலும் நிர்வாகம் வடிவம் சார்ந்து, மேல் இருந்து கீழ் என்ற ஒருபோக்கை மட்டும் சார்ந்து நின்று, கையாளும் வடிவமே புரட்சிவடிவமாகியது. இதில் இருந்து மாறுபட்ட வடிவத்தில் சீனப் புரட்சி மக்களை அடிப்படையாக கொண்டு நிலத்தை கூட்டுபண்ணையாக்கத்துக்குள் கொண்டு



வந்தது மட்டமின்றி, கலாச்சாரப் புரட்சி போன்ற புரட்சிகரவடிவங்களும் கண்டுயறியப்பட்டன. சோவியத் கூட்டுப் பண்ணையாக்கல் மிகத் தீவிரமாக வேகமாக கட்டமைக்கப்பட்டதனால் இயல்பாக அது விவசாயிகளிடையே வர்க்க வேறுபாட்டை குறைத்து மதிப்பீட்டு, பொதுமைப்படுத்தி அனுகியதனால் ஏற்பட்ட தவறுக்கு, புறநிலையாக குறிப்பான காரணங்கலும், அச் சமூகத்தில் இருந்துள்ளது.

1923 இல் அமுலுக்கு வந்த இடைக் கால பொருளாதாரம் சார்ந்து உருவான புதிய சுரண்டும் வர்க்கம், கட்சியில் அதன் பிரதிநிதித்துவத்தை உருவாக்கிய அதேநேரம், கட்சியிடமே வர்க்கப் போராட்டத்தை கைவிடக் கோரியதும், மேற்கு நாடுகளில் புரட்ச்சியின்றி சோவியத்தில் வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பது தவறு என்ற வரட்டு வாதங்கள் ஊடாக கொச்சைப்படுத்தி, வர்க்கப் போராட்டத்தை தடுத்த போக்கும், விவசாய குட்டிபூர்சவா வர்க்கத்தை சார்ந்து கட்சியில் வர்க்கப் போராட்டத்தை தடுத்த போக்கில், வர்க்கப் போராட்டத்தை தீவிரமாக்க புறநிலையாக நிர்பந்தித்தது. இதை பிரதிநிதித்துவப் படுத்தியவர்கள் தமது வர்க்கப் போராட்ட எதிர்ப்பை வன்முறை வன்முறை சாராத, இரகசிய இரகசியமல்லாத அனைத்து வழிமுறைகளையும் கையாண்டனர். இந்த வர்க்க நெருக்கடியில் இருந்து மீண்டு வர்க்கப் போராட்டத்தை தொடர, கூட்டுப் பண்ணையாக்கல் ஒரு நிபந்தனையாகவும், அதே நேரம் வேகமாகவும் உருவாக்க புறநிலை கோரியது.

3.இந்த புறநிலை நிர்ப்பந்தம் அடுத்த தவறை வழிகாட்டியது. சோசலிச புரட்சியை பின்தங்கிய நாட்டில் அல்ல, ஒரு முன்னேறிய நாட்டில் மட்டுமே சாத்தியம் என்ற வரட்டு மார்க்சியவாதிகளின் வன்முறை கொண்ட எதிர் தாக்குதலில் இருந்து மீள, புரட்சியை வேகப்படுத்தி துரிதமாக்குவது அவசியமாகின்றது. முதலாளித்துவ நாடுகளின் கைதொழில் வளர்ச்சியை ஒரே எட்டில் சோவியத் எட்டுவதன் மூலம், முன்னேறிய நாட்டின் பொருளாதார நிலையைக் கடப்பதன் மூலம், சோசலிச புரட்சி நடக்க முடியும் என்ற மேற்கு நிலைக்கு, சோவியத்தை இட்டுச் செல்வதை துரிதப்படுத்தியது. இது கைத் தொழிலை முதன்மைப் படுத்தியதன் மூலம், விவசாயிகளை ஒட்ட உறுஞ்சியது. கைத்தொழில் வளர்ச்சிக்கு விவசாயிகள் தமது முழு உழைப்பையும் நல்க வேண்டியிருந்தது. இதன் மூலம் பெரும்பான்மை உழைப்பாளிகளான விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டனர். இங்கு ஒன்றை முன்தள்ளி மற்றதை பின்தள்ளி நாட்டை முன்னேற்றிய முறைக்கு பதில், இரண்டையும் ஒருசேர முன்தள்ளி செல்லவேண்டிய பாதை கைவிடப்பட்டது. இது விவசாயத்துக்கும், தொழிலாளிக்குமான முரண்பாட்டை களைவதற்கு பதில், முரண்பாட்டை அகலப்படுத்தியது. உண்மையில் இந்த மார்க்கத்தை ஸ்டாலின் எங்கிருந்த பெற்றார் எனின், புறநிலையாக நிர்ப்பந்தம் கொடுத்த தவறான டிரோட்ஸ்கிய அரசியல் வழியில் இருந்து பெறுவதே, இங்கு நிகழ்ந்தது. டிரோட்ஸ்கி பின்தங்கிய நாட்டில் புரட்சி நடத்த முடியாது என்று போட்ட ஆரவாரத்தை கடக்கவும், அவர் வைத்திருந்த விவசாயிகளை அன்னியப்படுத்தி பார்க்கும் பார்வையினுடாக (டிராட்ஸ்கி உழைப்பை இராணுவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மயப்படுத்தவும், விவசாயிகளின் நிலத்தை உடன் கூட்டுப்பண்ணையாக்க வேண்டும் என்று லெனிடமே கோரியவர்), விவசாயிகளை ஒட்ட உறுஞ்சும் தத்துவத்தையே ஸ்டாலின் எடுத்துக் கொண்டே இத்தவறைச் செய்கின்றார். இதை செய்யும் போது நிர்வாக ரீதியான வடிவத்தில் கையாண்ட போக்கு கூட, டிரோட்ஸ்கியின் அரசியல் வடிவத்தில் இருந்தே ஸ்டாலின் பெறுகின்றார். லெனின் இந்த விமர்சனத்தை ("நிர்வாகத் தன்மை வாய்ந்த அனுகுமுறை" என) டிராட்ஸ்கி மீது செய்திருந்த போதும், இதை ஸ்டாலின் அங்கு இருந்தே பெற்றதன் முலம், அடுத்த தவறை விடுகின்றார்.

4.நிர்வாக ரீதியான அரசியல் அணுகுமுறை டிராட்ஸ்கியின் பண்பாக இருந்தது. இதைத்தான் லெனின் டிராட்ஸ்கி பற்றிய விமர்சனத்தில் சுட்டிக் காட்டுகின்றார். டிராக்ஸ்கி மக்களுக்குள் இயங்கிய ஒரு உழியாராக பயிற்சி பெற்றவர் அல்ல. ஆரம்ப காலத்தில் பல்வேறு வகைப்பட்ட கோட்பாட்டளர்களுடன் தொடர்பு கொண்ட பின்பு, பேச்சு ஆற்றலால் 1905 புரட்சியில் மேடையேறி தலைவரானவர். அதன் பின்பு சமூகத்தில் இருந்து அன்னியமாக, கட்சியின் புரட்சிகரமான நடவடிக்கையில் ஈடுபடாது, முற்றாக வெளிநாடுகளில் அங்குமிங்குமாக பத்திரிகையில் இடைநடுவழிப் பாதையை கோட்பாட்டுக்கு புறம்பாக எழுதி வாழ்ந்தபடி காலத்தை ஓட்டினார். இதற்கு எதிரான புரட்சிகரமான மக்கள்திரள் கட்சிகளில் அவர் இருக்கவுமில்லை, அதுபோல் போராடியதுமில்லை. மாறாக அலைந்து திரிந்தும், கட்சிகளுக்கு இடையில் உள்ள முரண்பாடுகளுக்குள் தலை நீட்டியும், அதற்குள் சதிப்பணியான (இது லெனின் கூற்று) அனுகுமுறைகளும், அடிப்படையில் நிர்வாக ரீதியாக காய்களை நகர்த்தும் அரசியலில் பிரமுகராக இருந்தார். இவருக்கு இருந்த பேச்சாற்றல், எழுத்தாற்றல் இவரின் ஒரே அரசியல் மூலமாக இருந்தது. போல்ஷெவிக்கு எதிராக எப்போதும் மென்ஷெவிக்குகளுடனும் கூடியும், சில நேரங்களில் இதற்கு இடையிலும் ஒரு பாதையை வைப்பதுமாக இருந்ததுடன், இதை பிரநிதித்துவப் படுத்திய சர்வதேச போக்குகளிலும், அங்கம் இங்கும் அலைந்து திரிந்த லும்பன் அரசியலையே, அரசியல் நடைமுறையாக கொண்டிருந்தவர். 1917 இல் போல்ஷெவிக் கட்சியில் இணைந்தவுடன், யுத்த நிலைமை காரணமாக இராணுவத்தில் கட்டளையிடும் ஒரு அரசியல் வடிவத்தில் தொடர்ந்து வளர்ச்சி பெற்ற போக்குகள், நிர்வாகத் தன்மை மற்றும் அதிதமான சுய நம்பிக்கை சார்ந்து, இயந்திர கதியில் கட்சி நிர்வகத்தை கையாளும் தன்மையைக் கொண்டிருந்தார். இது அதிகார வர்க்கத்தின் ஊற்று மூலமாக மாறிவிடுகின்றது.

இந்த டிராட்ஸ்கிய அரசியலில் இருந்து ஸ்டாலின் அனுகுமுறை முற்றிலும் மாறுபட்டது. கட்சியை ஆரம்பம் முதல் உருவாக்கிய ஸ்டாலின், மக்களுக்குள் தலைமறைவாக அவர்களுக்குள் வாழ்ந்து, அவர்களைச் சார்ந்து மக்கள் திரள் பாதையே ஸ்டாலின் மார்க்கமாக இருந்தது. ஆனால் புரட்சிக்கு பிந்தி சமுகத்தில் இதில் ஊன்றி நிற்க தவறியது ஏன்? ஸ்டாலின் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில், முரண்பாடுகள் கட்சியின் உயர் மட்டங்களில் தொடர்ச்சியாக அலை அலையாக முன்வந்த போது, முரண்பாட்டை முன்வைத்தவர்கள தமது சொந்த அரசியல் வழியில், நிர்வாக ரீதியான வழிகளில் பகிரங்கமான, இரகசியமான அணைத்து வழியிலும் மேல்மட்ட சதியை கட்டமைத்த போது, ஸ்டாலின் மற்றாக நிர்வாக ரீதியான வடிவத்தை கையாளும் தவறைச் செய்கின்றார். கட்சியின் மேல் மட்டத்தில் பாட்டாளி வர்க்க போராட்டத்துக்கு எதிராக கையாண்ட அணைத்து நிர்வாக ரீதியான நடத்தைக்கும், சமூகத்தில் மறைமுகமாக வர்க்க வேர் இருப்பதை ஸ்டாலின் கவணத்தில் கொள்ளவில்லை. அதை மேல்மட்ட சதியாக மட்டும் குறுக்கி பார்த்த நிலையில், அதை நிர்வாக ரீதியாக அணுகுவதை துரிதப்படுத்தியது. இடதுசாரி கம்யூனிசம் என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நூலில் லெனின் "(ஓரே ஒரு நாட்டில் கூட) தூக்கியெறியப்படுவதால் அதன் எதிர்ப்பை பத்து மடங்கு அதிகரித்திருக்கும் ஒரு சக்தி வாய்ந்த எதிரியாகிய முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக புதிய வர்க்கம் நடத்தும் மிகவும் தீர்மானகரமான, மிகவும் ஈவுரக்கமற்ற ஒரு யுத்தம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாகும். முதலாளித்துவ வர்க்கத்தின் சக்தி அதன் சர்வதேசிய மூலதனத்தில் மட்டுமல்ல, முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வதேசிய தொடர்புகளின் பலத்திலும் நம்பகமான தன்மையிலும் மட்டுமல்ல பழக்க வழக்கங்களின் சக்தி வாய்ந்த படிப்பிலும், சிறு உற்பத்தியின் பலத்திலும் கூட இருக்கின்றது. ஏனெனின் துரதிருஷ்ட வசமாக உலகில் இன்னும் மிகமிகப் பரந்த அளவிலானதாக சிறு உற்பத்தி இருக்கிறது. இடையராதும், தினந்தோறும், மணிதோறும், தன்னியல்பாவும் ஒரு திரளான அளவிலும் முதலாளித்துவ மற்றும் முதலாளித்துவ வர்க்கத்துக்கான தோற்று வாய்க்குக் காரணமாக சிறு உற்பத்தி இருக்கிறது. இந்தக் காரணங்களினால் எல்லாம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் இன்றியமையாததாக இருக்கிறது; சளையாத, கட்டுப்பாடான உறுதியான, வெல்லற்க மற்றும் திடசித்தம் ஆகியவற்றைக் கோரும் ஒரு யுத்தமின்றி, நீண்ட உடும்புப்பிடியான மற்றும் ஜீவமரண யுத்தமின்றி முதலாளித்துவத்தின் மீது வெற்றி சாத்தியமில்லை." இந்த கூற்றுகளை பிரதிநிதித்துவம் செய்த கட்சியின் தலைமை உறுப்புகளுக்கு, சமூகத்தில் ஒரு வர்க்க வேர் உண்டு என்று பார்த்திருப்பின், ஸ்டாலின் தனது கடந்தகால மக்கள் திரள் பாதையை கொண்டே இந்த போக்கை தனிமைப்படுத்தி ஒழித்திருக்க முடியும். இதை சரியாக அனுகாமையால் அடுத்த தவறு ஏற்படுகின்றது.

5.பல்வேறு வர்க்க கோரிக்கையை உள்ளடக்கிய சமூக வேர்களை அடிப்படையாக கொண்டு கட்சியின் உயர் மட்டங்கள், தமது அதிகாரத்தை நிலைநிறுத்த கட்சியூடாக தீவிரமாக முனைந்தன. இதன் போது வன்முறை, வன்முறை சாராத அணைத்த வடிவத்தையும், இரகசியம் மற்றும் இரகசியமல்லாத குழு வடிவில் கட்டமைக்கப்பட்டன. 1.12.1934ம் ஆண்டு இந்த இரகசிய சதிக் குழுக்கள், ஸ்டாலின் மிக நெருங்கிய நண்பரும் கட்சியின் முன்னணித் தலைவருமான கிரோவ்வை படு கொலை செய்ததைத் தொடர்ந்து, ஸ்டாலின் சதி மற்றும் நாச வேலையை கட்டுப்படுத்த, நிர்வாக ரீதியான அனுகுமுறையில் சார்ந்திருப்பதை நடைமுறையாக்கியதுடன் அதையே ஒரு கோட்பாடக்கினர்.

6.1934 இல் கிரோவ் படு கொலையைத் தொடர்ந்து இரகசிய சதிக் குழுக்களை கண்டறிவதில் அதிகமான அக்கறை காட்டப்பட்டது. இதன் விசாரணைகளின் வடிவமாகவே 1937-1939 காலகட்ட கட்சி சுத்திகரிப்பு இயக்கம் விரிவாக நடத்தப்பட்டது. இந்த காலகட்டத்தில் இதை கையாள்வதில் கட்சியின் முதன்மைப் பாத்திரம் பின்தள்ளப்பட்டது. இந்த சதிகளை கண்டறிய முற்றாக இரகசிய உளவு அமைப்பை சார்ந்து அதை விரிவாக்கினார். இதன் போது கட்சியின் முக்கிய முன்னணித் தலைவர்கள் பலர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட போது, அவ் விசாரனையை பகிரங்கமாக சர்வதேச பத்திரிகைதுறையின் முன்பாகவே விசாரனை நிகழ்த்தப்பட்டது. இந்த விசாரனையின் போது, அவர்கள் தமது அரசியல் நிலைக்காக நிதிமன்றத்தில் உறுதியுடனேயே வாதித்திட்டனர். அதன் அடிப்படையில் தமது சதியை நியாப்படுத்தினர். தமது அரசியல் நடத்தைகளை முன்வைக்கவும் அவர்கள் தயங்கவில்லை. உண்மையில் உண்மையான சதியாளர்கள் விசாரனைக்கு கொண்டு வரப்பட்டனர். ஆரம்பத்தில் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தை தொடர்வதை எதிர்த்து, சதிசெய்த குற்றவாளிகளை கைது செய்து நீதிமன்ற கொண்டு வந்த கட்டம் தாண்டி, அடுத்த கட்டத்தில் பொது முரண்பாடுகள் மீதான, பொதுவான கைதாக மாறிவிட்டது. இவைகூட ஏற்பட காரணம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரகசியமான சதிகளில் ஈடுபட்ட முன்னணி தலைமை தாங்கிய அரசியல் சார்ந்த இரகசியக் குழுக்கள், கட்சியின் முரண்பாடுகளையும் கையாளத் தொடங்கியிருந்தது. முரண்பட்ட கருத்துகளை தெரிவுப்பவர்களை சந்தித்து வென்று எடுக்கவும், சதியில் பங்காளியாக்குதல் என்ற பொதுவான இரகசிய சதிப்பாணியும், கட்சி மற்றும் கட்சிக்குள் கட்சி கட்டும் இரகசிய அனுகுமுறைகள், இந்த கைதை பொதுமையான முரண்பாட்டின் மாற்றிவிடுகின்றது. பொது முரண்பாடுகள் மீதான இரகசிய சதிக் குழுக்களின் அரசியல் செயற்பாடு, ஸ்ராலினை கட்சியிடம் நம்பிக்கை இழக்க வைத்ததுடன், முற்றாக நிர்வாக ரீதியான இரகசிய உளவு அமைப்பை சார்ந்திருப்பதை உந்தித்தள்ளியது. அதாவது கட்சியின் ஜனநாயக மத்தியத்துவத்தை கொண்டு, ஸ்டாலின் எதிர்ப்பாளர்கள் கட்சியில் வர்க்கப் போராட்டத்தை தொடர மறுத்து, ஸ்ராலினையும் அவர் சார்ந்த பாட்டாளி வர்க்க நிலையையும் இரகசியமான வழியில் அகற்றிவிட முயன்ற போக்குதான், பொதுவான முரண்பாட்டின் மீதான விசாரணையாக மாறிவிடுகின்றது.

சதியில் நேரடியாக கண்டுபிடிக்கப்பட்டவர்கள் மேலான விசாரணையின் போது, அவர்கள் முரண்பாடுகளை கையாளும் எல்லையில், கட்சியின் முரண்பாட்டின் எல்லைவரை விரிந்த தளத்தில் இரகசியமாக சந்தித்து, தமது சதிக்கு வென்றெடுக்கும் போக்கு காணப்பட்டது தெரியவந்த போது, அதை, ஸ்டாலின் முரண்பாடுகளை எல்லாம் சதியாக காண்பதன் மூலம் தவறு இழைத்தார். இது முரண்பாட்டை மறுக்கும் கோட்பாடாக மாறி, அதை சதியாக மட்டும் கண்பது என்ற அரசியல் தவறை கையாண்டார். கட்சிக்குள் இருந்த எதிரியையும், கட்சிக்குள் இருந்த முரண்பாட்டையும் வேறு பிரித்தறிவதை கைவிட்டார். இதனால் முரண்பாட்டின் இயங்கியல் தன்மையை படிப்படியாக கைவிட்டார். இது இரண்டு பிராதானமான கோட்பாட்டு தவறை உருவாக்கியது

1.முரண்பாடு தான் ஒரு சமுதாயத்தின் ஒரு இயங்கியல் விதிமட்டுமின்றி, வளர்ச்சியின் விதியுமாகும். முரண்பாடு இல்லாத இயக்கம் என்பது கற்பனையானது. முதலாளித்துவத்தில் இருந்து சோசலிசமும், சோசலிசத்தில் இருந்து கம்யூனிசமும் என்ற அணைத்திலும் முரண்பாட்டின் விதியுண்டு. முரண்பாடு நட்பாகவும், பகையாக என இரண்டும், அக்கம்பக்கமாக சமுதாயத்தில் காணப்படுகின்றது. இதை அவர் கட்சிக்குள் மறுப்பதை ஒரு பொதுவடிவமாக்கினர். முரண்பாடுகள் சமுதாய வளர்ச்சியை துரிதப்படுத்துகின்றது. முரண்பாடுகள் சமுதாய வளர்ச்சிக்கு எதிராக மாறும் போது அதை அழிப்பதற்கு பதில், சமுதாய வளர்ச்சியை ஊக்குவித்த முரண்பாட்டையும் பகைமுரண்பாடக்கிய, கோட்பாட்டு தவறை செய்தார்.

2.அடுத்து அவர் இயங்கியல் வளர்ச்சி விதியை நிராகரித்தார். ஒரு பொருள் நிலையானது என்ற அடிப்படையான கொள்கையை, கட்சி உறுப்பினர்கள் மீது கையாளும் வழிமுறையில், இது சார்ந்து வெளிப்பட்டது. ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் மாறிக் கொண்டிருப்பதை காணத் தவறினர். நட்பு முரண்பாடுகளையும், தவறுகளையும், பகைமுரண்பாடுகளையும் ஒன்றாக்கியதன் மூலம், இயங்கியலில் மாறிக் கொண்டிருக்கும் தன்மையை மனிதர்களுக்குள் புரிந்து கொள்ளவும், அதை நடைமுறையில் கையாளவும் மறுத்தார். இது திருந்தக் கூடிய மற்றும் நட்பு முரண்பாட்டை இயங்கியல் வளர்ச்சி விதியாக்க மறுத்தன் விளைவு, முரண்பாடுகளை பொதுவான எதிரியாக காண்பது நிகழ்ந்தது. பாட்டாளி வர்க்கப் போராட்டத்துக்கு எதிரான எதிரியின் நோக்கத்தை இனம் கண்டு, அதை தனிமைப்படுத்தி அழிப்பதுக்கு பதில், பொதுவான வகையில், முரண்பாட்டின் மீது சதியைக் காண்பது ஒரு வடிவமாகியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதனால் கட்சியில் சரியான சக்திகள் கூட, இனம் பிரிக்க முடியாத பொதுவாக வகைப்படுத்தும் அரசியல் தவறால், உண்மையான சதியாளர்களுடன் இணைக்கப்பட்டு கட்சியில் இருந்து அகற்றப்பட்டனர். இது பற்றி 1940 இல் ஸ்டாலின் எழுதிய "லெனினியம்" என்ற நூலில் களையெடுப்புக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டதுடன், களையெடுப்புடன் "கடுந்தவறுகள்" ஏற்பட்டது என்பதையும் ஏற்றுக் கொண்டு, சுயவிமர்சனம் செய்துள்ளார். 1956 இல் ஸ்ராலினை துற்றும் போது கூட ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படையிலும், பாதுகாப்பு படையில் எதிரி உடுருவியிருந்ததும் கூட, இதன் குறிப்பான விளைவுகளாக இருந்தது என்பது, உண்மையான ஸ்டாலின் ஆதாரவளர்கள் கூட தண்டனைக்குட்பட்டனர்.

7.சதிகள் மீதான விசாரணை, விரிந்த தளத்தில் கட்சிக்குள் முரண்பாடுகள் மீது சதிக் குழுக்களின் தொடர்புகள் தெரியவர, கட்சி மீதான நம்பிகையை தொடாசியாக இழக்கின்றார். இது கட்சி மீதான நம்பிகையை விட, தன் மீதான நம்பிக்கையை ஆதாரமாக கொள்வது ஒரு போக்காக மாறுகின்றது. அதாவது போல்ஷ்சுவிக் வரலாற்றில் தனது சரியான தொடர்ச்சியான நிலையை அடிப்படையாக கொண்டு, சுய நம்பிக்கையில் சார்ந்து நிற்பதில் அதிகமான கவணத்தை குவிக்கின்றார். அன்று டிராட்ஸ்கியின் தன்னம்பிக்கையை (இது லெனின் டிராட்ஸ்கி மீது செய்த விமர்சனம்) தொட்டு, ஸ்டாலின் தன்னம்பிக்கையில் தன்னை ஆதாரப்படுத்தினர். இது கட்சியை சார்ந்திருப்பதை கைவிடுவதாக மாறியது. இது கட்சியை விட தன்னைச் சார்ந்து முடிவு எடுக்கும் பண்பாக மாறுகின்றது. இது லெனின் ஸ்டாலின் மீது செய்த விமர்சனத்தை படிப்படியாக கைவிட்டு, அதை மீள கையாளும் அளவுக்கு புறநிலமை மற்றும் முரண்பாட்டை பொதுமையாக்கிய தவறால், ஸ்ராலினை தொடர்ச்சியான தவறுக்கு இட்டுச் சென்றது. ஸ்டாலின் கட்சியை கூட்டவது, விவாதிப்பது அனைத்தையும் படிப்படியாக கைவிடுகின்றார். இது இயல்பாக தனிமனித வழிபாட்டுக்கு வித்திடுகின்றது. இதன் மூலம் எதிரியும் இந்த தனிமனித வழிபாட்டில் ஒளித்துக் கொள்வது, புதிய போக்காகின்றது. முன்பு கட்சியில் முரண்பட்ட விவாதங்கள், எதிரியையும் நண்பனையும் தெளிவாக இனம் காண்பது சாத்தியமாக இருந்தது. ஆனால் முரண்பட்ட விவாதங்கள் குறைந்து செல்ல, தனிமனித வழிபாடு முதன்மை பெற, எதிரியையும் நண்பனையும் இனம் காண்பது முடியாததாகிவிடுகின்றது. ஸ்ராலினை தனிமனித வழிபாட்டின் ஊடாக, புகழ்வதன் ஊடாக, எதிரிகள் சொந்த கோட்பாடுகளை அதற்கு பின் ஒளித்து வைத்தபடி, அதிகாரத்தின் உயர் வடிவங்களை கைப்பற்றுவது இலகுவானதாகியது. ஸ்டாலின் மறைவுக்கு பின்பு எதிரி வர்க்கம், இந்த தனிமனித புகழ்பாடும் எல்லைக்குள் ஒளித்தபடி, அதிகாரத்துக்கு இலகுவாக வரமுடிந்தது. அதேபோல் ஸ்டாலின் அவதூறுகளையும் அதன் எல்லைக்குள், இரகசிய குழுவில் கட்டமைக்க முடிந்தது. முரண்பாடுகளை கட்சியில் முன்வைக்கும் ஜனநாயக மத்தியத்துவமும், ஒழுங்காக கட்சி காங்கிரஸ் கூடியிருப்பின், இலகுவாக 1950 களில் எதிர்புரட்சி ஆட்சிக்கு வந்திருக்க முடியாது. ஸ்டாலின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்க கையாண்ட வழியில் ஏற்பட்ட தவறு ஊடாகவே, எதிரி ஆட்சிக்கு வந்திடுவது நிகழ்கின்றது.

8.மேல் மட்ட கட்சியில் ஸ்டாலின் நம்பிக்கை இழக்க, இரகசியக் குழுக்களின் விரிவான நடத்தைகள் காரணமாக இருந்தன. ஸ்டாலின் சுய தன்நம்பிக்கை மீது சார்ந்திருந்தனால், தனிநபர் வழிபாடு ஒரு பொது அரசியல் வடிவமாகியது. சதி மீதான பகிரங்க விசாரனை, முரண்பாடுகள் மீதான பொதுவான விசாரனையாக மாறிய போது, ஸ்டாலின் தனது சொந்த அரசியல் சட்ட அமைப்புக்குள் விசாரனை செய்வதை கைவிட்டு, அதற்கு புறம்பான வழியில் அவ் விசாரனையை நடத்தியதன் மூலம், தனது சொந்த அரசியல் சட்ட அமைப்பைக் கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புறக்கணித்தன் மூலம், அரசியல் தவறு இழைத்தார்.

9. இதன் மூலம் நட்பு மற்றும் தவறு இழைத்த முரண்பாட்டின் மீது உள்ள சரியான போல்சஷ்விக்குகள், மற்றும் திருந்தி வரக் கூடிய உறுப்பினர்கள் கூட கொல்லப்பட்டனர், சிறையில் அடைக்கப்பட்டனர், அரசியில் ரீதியாக ஒதுக்கப்பட்டனர். இது கட்சிக்கு மாபெரும் இழப்பைக் கொடுத்தது. 1950 இல் அரங்கேறிய எதிர்புரட்சிக்கு இது சாதகமாக இருந்தது. ஸ்டாலின் விரும்பிய பாட்டாளி வர்க்க விடுதலைக்கு எதிராகவே, இது தனது விளைவைக் கொடுத்தது. ஸ்டாலின் கூறியது போல் "முதலாளியத்தைத் திரும்பக் கொண்டுவரும் சாத்தியப் பாட்டுக்கான நிலைமைகள் நமது சோவியத் நாட்டில் உள்ளனவா? ஆம், இங்கு உள்ளன. இது விந்தையாகத் தோன்றலாம் தோழர்களே, ஆனால் இது உண்மை" இது பற்றி ஸ்டாலின் நிறையவே எப்படி எல்லாம் ஏற்பட முடியும் என எழுதியுள்ளார். ஸ்டாலின் எச்சாரித்படியே அவரின் மரணத்தின் பின்பு இது நிகழ்ந்தது.

10.எதிரிகளை கட்சி இனம் கண்டு கொண்டதன் மூலம், அவை உயர்மட்ட சதியாக வெளிப்பட்டதால், களையெடுப்பு உயர்மட்ட வடிவமாக இருந்தது. 1937-1939 களில் கட்சியில் எதிரி வர்க்கத்தை ஒழிக்கும் விசாரனைகள் நடத்தப்பட்டு அது முடிவுக்கு வந்த போது, 1939 இல் ஸ்டாலின் வர்க்கங்கள் ஒழிந்து விட்டது என்று பிரகடனம் செய்தார். அதை அவர் "உள்நாட்டில் உறுதியற்ற தன்மையை உருவாக்கும் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும், உழவர்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையே உள்ள தீர்க்க முடியாத முரண்பாடுகளால் முதலாளியச் சமுதாயம் கொந்தளித்துக் கொண்டிருக்கும் சமயத்தில், சுரண்டல் நுகத்தடியிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சோவியத் சமுதாயத்திலோ இத்தகைய முரண்பாடுகள் ஏதும் இல்லை; அது வர்க்க முரண்பாடுகளிலிருந்து விடுபட்டிருக்கிறது; அது தொழிலாளர், உழவர், அறிவாளிகள் ஆகியோரின் நட்புநிறைந்த ஒத்துழைப்பு என்ற காட்சியை வழங்குகிறது." என்றார் ஸ்டாலின். இது போல் 1936 புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட போதும் இதுபோல் கூறிய ஸ்டாலின், 1937 சதிகள் கண்டு பிடிக்கப்பட்ட பின்பு முந்திய கருத்துக்கு எதிராக, எதிரி வர்க்கம் பற்றி எச்சாரித்து போராடக் கோருகின்றார். இங்கு ஸ்டாலின் களையெடுப்பின் அரசியல் கண்ணோட்டம், குறிப்பான நிலைமைகளைச் சார்ந்து வெளிப்படுகின்றது. இங்கும் வர்க்க முரண்பாட்டை மேல் மட்டத்தில் மட்டும், அதுவும் சதியாக கண்டு கொண்டதும், அதற்கு சமூக வேர் இருந்தை காணத் தவறிய அரசியல் தவறை இழைக்கின்றார். அத்துடன் தொடர்ச்சியான வர்க்கப் போராட்ட லெனிய கண்ணோட்டத்தையும், மேல் மட்ட சதியாக மட்டும், குறுக்கி பார்த்து விடும் தவறு நிகழ்ந்தது. வர்க்கப் போராட்டம் கட்சியில், அதிலும் மேல் மட்டங்களில் குவிந்த காணப்படும் என்பது உண்மையாக இருந்த போதும், அதை பிரநிதித்துவப் படுத்தும் சமூகத் தொடர்ச்சி சமூகத்தில் இருப்பதை ஸ்டாலின் கண்ட கொள்ளவில்லை. இது புரட்சிக்கு பிந்திய மக்கள் திரள் அமைப்புகான புரட்சிகரமான பாதையை இனம் கண்டு கொள்ளாத, தொடர்ச்சியுடன் தொடர்புடையதாக இருந்தது. 1939 இல் வர்க்கங்கள் எதுவும் இல்லை என்ற ஸ்டாலின் தவறான விளக்கம், எதிரி வர்க்கம் தன்னை அதற்குள் ஒளித்துக் கொள்ளவும், எதிர் புரட்சிக்கான மறு வர்ப்பு செய்து ஆட்சியைக் கைப்பற்றவும் எதிரிக்கு வாய்பாளித்தது.

11.எதிரி இல்லை என்று கூறிய போதும், யதார்த்தத்தில் அவைகளை எதிர் கொள்கின்ற போது ஸ்டாலின் "அதிகார வர்க்கத் துரு" என்று அதிகார வர்க்கம் பற்றி எச்சரித்து, அவர் வெறும் நிர்வாகம் மட்டும் சார்ந்த வர்க்கப் போராட்டத்தை நடத்தியமை, என்பது உள்ளடகத்தில் அதிகார வர்க்கத்தின் உருவாக்கத்தை களைந்துவிடவில்லை. இது பொருளாதாரம் உள்ளிட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சலுகைகளை கொடுப்பதன் ஊடாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்க வழிகாட்டியது. 1952 இல் 19 வது கட்சி பேரவையில் சில உதாரணங்கள் மூலம், ஊழல் மற்றும் அதிகாரத்துவம் பற்றி அம்பலம் செய்யப்பட்டது. ஆனால் இதன் தோற்றவாய் மற்றும் அதன் ஒழிப்பு பற்றி யாரிடமும் ஒரு மக்கள்திரள் வழி இருந்ததில்லை. ஒன்றில் புரட்சியை கைவிட்டுச் செல்வது அல்லது நிர்வாக முறையிலான பாட்டாளி வாக்க சர்வாதிகாரத்தை மேல் இருந்து கையாள்வது என்ற இரு பாதையே, எதிர் எதிராக காணப்பட்டது.

12.வர்க்கப் போராட்டத்தை நிர்வாகம் சார்ந்து மேல் இருந்து கீழாக மட்டும் முன் தள்ளிய போக்கில், மேல் இருந்தவர்களை திருத்தி செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஸ்டாலின் தள்ளப்பட்டார். இது சலுகைகளையும், வேறுபட்ட சம்பள விகிதத்தையும் கொண்ட போக்கு அனுமதிக்கப்பட்டது. இது சலுகைபெற்ற பிரிவை உருவாக்கியது. ஸ்டாலின் இங்கும் கடும் சீராழிவுகள் மீது களையெடுப்புகளை நடத்திய போதும், உண்மையில் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கும் மக்கள் திரள் பாதையை கண்டறியதானால், நிர்வாக ரீதியான தண்டனை, சலுகை என்ற இரு போக்கை சார்ந்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாத்தார். இங்கு மக்கள் திரள் பாதை யாராலும் இக்காலத்தில் முன்வைக்கப்படவில்லை. இந்த பாதையை மாவோதான் முதன் முதலாகக் கண்டறிகின்றார்.

13.அடுத்து தொழில் மயமாக்கலுக்கு விரிவான அழுத்தம் கொடுத்து, விவசாயத்தை புறக்கணித்துடன், தொழில் மயமாக்கலுக்கு விவசாயத்தை மூலதனமாக்கியதால், தொழிலாளார் விவசாயிகளுக்கிடையில் ஏற்றத் தாழ்வு மறைவதற்கு பதில் ஆழமாகியது. இது வர்க்க வேறுபாட்டை குறைப்பதற்கு பதில், எதிர் மறையில் செயலாற்றியது. இந்த அனுகுமுறை வர்க்கங்களை ஒழிக்கும் போராட்டத்துக்கு எதிரானதாக இருந்தது.

14.அடுத்து ஸ்டாலின் அடிக்கட்டுமானம் மற்றும் மேல்க்கட்டுமான உறவின் இயங்கியலை ஒருதலைபட்சமாக பார்த்தார். அடிக்கட்டுமான மாற்றத்தை சாதிப்பதன் மூலம், மேல் கட்டுமானத்தில் மாற்றத்தை கொண்டு வந்த விட முடியும், இதனுடாக சோசலித்தை கட்டிவிட முடியும் என்று நம்பினார். இதனால் அடிக்கட்டுமானத்தில் நடத்திய புரட்சியை மேல் கட்டுமானத்தில் கையாளவில்லை. இது உள்ளடக்கத்தில் பொருளாதார வாதமாக உள்ளது. புரட்சி பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று தொடர்ச்சியாகவும், பரஸ்பரமும், இடைவெளியின்றி அனைத்து வடிவத்திலும் "இடைவிடாது" நடத்தப்பட்டிருக்க வேண்டும். மேல் கட்டுமான புரட்சி நடத்தப்படமையால் அடிக்கட்டுமான புரட்சி, சோசலிசத்தை பலப்படுத்தும் திசையிலான வளர்ச்சியில் முடமாகியது. சோசலிசத்தை பாதுகாத்து நிறுவும் போராட்டத்தில், ஸ்டாலின் சமூக விளைவுகளைப் பற்றி சிந்தித்தை விட, பொருட்களைப் பற்றியே கவணத்தைக் குவித்தார். அதாவது மேல்கட்டுமானத்தை பற்றி அக்கறைப்படாது, அடிக்கட்டுமானதில் மட்டுமே கவணத்தை குவித்தார். இது உண்மையில் மக்கள்திரள் பாதையுடன் தொடர்புடையதாக இருந்தது.

15.ஸ்டாலின் மக்களைப்பற்றி பேசாது நிபுணர்கள், கட்சி ஊழியர்கள், என்று ஒரு பக்கத்தை மட்டுமே அழுத்தம் கொடுத்து, பாட்டாளி வர்க்க நிர்மானிப்பை முன்னெடுக்கும் அரசியல் மார்க்கத்தை வைக்கின்றார். அதாவது மக்கள் என்ற முக்கியத்துவம் உடைய பகுதியை கவனிப்பதில் தவறு இழைத்தார். கட்சி ஊழியர்களும், நிபுணர்களும் மக்கள் இன்றி இல்லை என்பதை புரிந்து கொண்டு, இரண்டையும் கொண்டு முன்னேறும் மார்க்கத்தை காணத் தவறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தத் தவறும் நேரடியாக மக்கள் திரள் பாதையுடன் தொடர்புடையதாக இருக்கின்றது.

16.ஸ்டாலின் நிாவாகம் சார்ந்த விதிகளையே புரிந்த கொள்வது பற்றி அக்கறை கொண்டார். ஆனால் இதில் உள்ள நிகழ்வுமுறைகளைபற்றி அக்கறைப்படுவதில் தவறு இழைத்தார். ஸ்டாலின் கூட்டு உடைமையில் இருந்து பொதுவுடமைக்கு மாறும் வழியை கண்டறியவில்லை. கம்யூனிசத்தை நோக்கி "இடைவிடாத" மக்கள் திரள் புரட்சியின்றி, கம்யூனிசத்தை அடைய முடியாது என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை. அதாவது ஒரு மக்கள் திரள் புரட்சி, எப்படி தொடர்வது பற்றிய விதியை கண்டறியத் தவறினார். இதை யாரும் அன்று முன்வைக்கவில்லை.

17.மக்கள் திரள் பாதையை கண்டறியதால் மையப்படுத்தப்பட்ட வடிவில் அணைத்தையும் நிர்வகிக்கும் முறை பரந்த தளத்தில் காணப்பட்டது. மேல் இருந்து கீழாக, கீழ் இருந்து மேலாக என்ற, பரஸ்பர விதி கண்டறியப்படவில்லை. இதனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்க போராடிய வரலாற்றில், அவை முழுமையாக மக்களின் நலனை தொடர்சியாக பிரதிபலிக்கத் தவறியது.



18.கட்சியின் ஜனநாயக மத்தியத்துவத்தை கையாள்வதை 1937 களில் கைவிட்டார். 1937 களின் முன்பு ஸ்டாலின் கையாண்ட சரியான அரசியல் வழிகள், லெனியத்தின் தொடர்சியாக (கூட்டுப் பண்ணையாக்கலிலும், மூலதனத்தை திரட்டிய வடிவத்திலும், வர்க்கங்களை வகைப்படுத்துவதில் தவறுகள் இழைத்த போதும்) விரிவாக்கிய பண்பை, புறநிலையின் வளர்ச்சி பெற்ற எதிரி வர்க்கத்தின் சதிகளின் நிர்ப்பந்தில் கைவிட்ட வரலாற்றின் ஊடாகவே, ஸ்டாலின் அவதூறுகள் எதிரி வர்க்கத்தை மறைத்தபடிதான், கட்டமைக்கப்படுவதை நாம் இன்று தெளிவுபடவே எல்லா ஸ்டாலின் அவதூறுகள் மீதும் இனம் காண்கின்றோம். இதன் ஊடாக சரியான முந்திய மார்க்கங்கள் கூட, அரசியல் ரீதியாக துடைத்தெறிய எதிரி வர்க்கங்கள் முனைகின்றது. இதைத் தான் குருசேவ் முதல் கொர்ப்பச்சேவ் வரை கையாண்டு, ஏகாதிபத்தியத்திடம் புரட்சியை தரை வார்த்தனர். ஸ்டாலின் சில வெளி நாடுகளின் கட்சி உறவுகளை கையாள்வதிலும் கூட, தவறு இழைத்தார். சில தவறான மோசமான ஆலோசனைகளைக் கூட வழங்கினார். ஏகாதிபத்தியங்கள் சோவியத் மீதான யுத்தமாக இரண்டாம் உலகயுத்தத்தை நகர்த்த நடத்திய ஏகாதிபத்திய சதிகளை, ராஜதந்திரமாக ஏகாதிபத்தியத்துக்கிடையில் ஸ்டாலின் நகர்த்திய நிலையில், அதை மட்டும் சார்ந்து நின்றதன் மூலம், யுத்தத்துக்கு முன்பு இரண்டாம் உலக யுத்த தயாரிப்பில் முழுமையான கவனத்தை செலுத்தி, தற்காப்புக்கு தயார் செய்யத் தவறினர்.

19.பாட்டாளி வர்க்க தத்துவத்தில் காலத்தால் அழியாத பல தத்துவார்த்த விடையத்தை தந்ததுடன், எதிரியை கோட்பாட்டு ரீதியாக அம்பலம் செய்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவியவர், பிற்பட்ட காலத்தில் சில கடந்த கால ஆவணங்களை (படங்களை) தவறாக திருத்த அனுமதித்தார். புரட்சியின் வேறுபட்ட காலத்தில் இனைந்து கொள்ளும் நபர்களின் வேறுபட்ட வாக்க நோக்கத்தையும் மற்றும் அரசியலின் தொடர்ச்சியின்மையை, அவர்களின் வர்க்க அரசியலுடாக அம்பலம் செய்த சரியான பாதையை முழுமையாக சார்ந்திருக்கத் தவறி, பிற்பட்ட காலத்தில் தனிமனித வழிபாட்டு வழிகளுடாக ஆவணங்களைத் திருத்த அனுமதித்தது, அரசியல் ரீதியாக பாட்டாளி வர்க்கமல்லாத கட்சியில் ஒட்டிக் கொண்ட சகபயணிகளை, அரசியல் ரீதியாக அம்பலம்செய்யும் பழைய பாதை முழுமையாக சார்ந்திருப்பதை கைவிட்டது என்பது, சக பயணிகள் இதற்கு ஊடாக தம்மை அரசியரீதியாக பாதுகாக்கும் வழிக்கு இட்டுச் செல்ல மறைமுகமாக அனுமதித்த தவறுகளையும் இழைத்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுபோன்று பல கடுமையான தவறுகளை, மக்கள் திரள் பாதையை கண்டறியத் தவறியதால் இழைத்தார். மக்கள் திரள் பாதையை தொடர்சியான வர்க்கப் போராட்டத்தில் கண்டறியத் தவறியதன் விளைவால், ஜனநாயக மத்தியத்துவத்தைக் கூட கட்சியில் இருந்து விலக்கியதுடன், அகமுடிவுகளை சார்ந்திருக்கும் நிலைக்கு சரிந்து சென்றார். இது உண்மையான எதிரிகளை ஒடுக்கிய அதே நேரம், நண்பர்களையும் ஒடுக்கும் அளவுக்கு விரிவாகியது. இதன் போது தனிமனிதர் வழிபாடு புதிய வடிவமாக வளர்ச்சி பெற்றது. இதற்குள் எதிரி ஒளித்துக் கொண்டதுடன், அதன் வழியிலேயே ஆட்சி கைப்பற்றி அதை தனிமனித வழிபாட்டு கண்ணோட்டத்திலேயே தனிமனிதனாக குற்றம் சாட்டி, ஸ்ராலினை எட்டி உதைக்கவும் பின்நிற்கவில்லை. எப்படி தனிமனித வழிபாடு தவறானதோ, அதே அளவுக்கு ஸ்ராலினை தனிமனிதனாக குற்றம் சட்டும் அரசியலும், தனிமனித வழிபாட்டு தூற்றுதல் எல்லைக்கு உட்பட்டதேயாகும்.

## பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் வர்க்கப் போராட்டத்தை ''இடைவிடாது'' தொடர்வதை எதிர்த்து நின்ற, முக்கிய எதிராளியான டிராட்ஸ்கியின் ''நிரந்தரமான'' அரசியல் பாத்திரம் என்ன?



ஸ்ராலினுக்கு எதிராக போராடியவர்களில் முக்கியமானவர் டிராட்ஸ்கியாவர். இவர் "ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்ட முடியாது" என்று கூறி மேற்கின் புரட்சி வரும் வரை காத்திருக்க அறை கூவியதன் மூலம், புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தை தனது புரட்சிகர வர்க்க கடமையை எதிர்த்து நின்றவர். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடர்ந்து நடத்தக் கூடாது என்பதும், லெனின் "இடைவிடாத" புரட்சியை எதிர்த்து "நிரந்தரமான" இயங்கியல் மறுப்புக்காக போராடியவர். பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தை கைப்பற்றுவது, வர்க்கப் போராட்டத்தில் வடிவ மாற்றமே ஒழிய, வர்க்கப் போராட்டத்தின் முடிவல்ல. இதை டிராட்ஸ்கி ஏற்றுக் கொண்டதில்லை. அதாவது பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தை கைப்பற்றுவது, வர்க்கப் போராட்டத்தின் முடிவாக கருதியவர். அப்படி இடைவிடாது தொடர்வது பற்றி 1925 இல் 14வது காங்கிரஸ்சில் டிராட்ஸ்கி ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்ட முடியாது என்றதுடன், அப்படி கட்டப்படின் "தோல்வியடையும் - அது வளராமல் தேங்கி நிற்கும் அல்லது நெப்போலியன் சர்வாதிகாரமாக முடியும்" என்ற கூறி எதிர்த்து நின்றார். அதற்கு மாறாக ஒரே நொடியில் மேற்கு நாடுகளின் புரட்சியின் வெற்றியின் ஆதாரவுடன் சாதிக்க கோரிய, இடது தீவிரவாதத்தை முன் தள்ளியவர். இதற்கு மேற்கின் புரட்சி பற்றியும், உதவி பற்றியும் யதார்த்ததுக்கு புறம்பாக கற்பனை செய்து, அதையே அவரின் எதிர்ப்புரட்சியாக நடைமுறைப்படுத்தியவர். அராஜாகவாதத்தின் கருவில் இருந்தே, இந்த இடது தீவிரவாதம் புளுத்துப் போய் இருப்பது, இதன் அரசியல் உள்ளடக்கமாகும். இவர் வேறுபட்ட நாடுகளின் வேறுபட்ட புரட்சி கால கட்டத்தையும், வேறுபட்ட புரட்சியின் வடிவத்தையும் மறுத்தார். சோவியத்தில் புரட்சியில் சக பயணியாக ஒட்டிக் கொண்ட அதே நேரம், கட்சியில் தொடர்பற்றவராக, கட்சிக்குள் முரண்பாடுகள் மீதான குழுக்களை சார்ந்து இருந்தார். அங்கு முரண்பாடுகளை கையாள்வதன் ஊடாகவே தலைமையைக் கைப்பற்ற முனைந்தார். அதாவது கோட்பாட்டு ரீதியாக ஜனநாயக மத்தியத்துவத்தின் பெரும்பான்மையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையில் அல்ல. புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் தொடரும் புரட்சி பற்றி தனது எதிர்ப்பை தெரிவிப்பதில், சகலவிதமான வடிவத்தையும் தொடர்சியாக கையாண்டார். பாட்டாளி வாக்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடர்வதை எதிர்த்து, அதாவது கம்யூனிசத்தை நோக்கி போராடுவதை எதிர்த்து இவர் போராடிய வழிகளில், ஜனநாயக மத்தியத்துவத்தை கைவிட்டு சதியாக இயங்கிய போதே, அவர் கட்சி அரசியலில் இருந்து வெளியேற்றப்பட்டார். ஆனால் தொடர்ந்தும் அவர் இரகசியமான தொடர்புகள் மூலம் இயங்கிய போக்கு, அவரின் தொடர்சியான கடந்த கால அரசியல் போக்கின் விளைவாக இருந்தது. அதைப் பார்ப்போம்.

லெனின் ''இடையறாத புரட்சி" என்ற கோட்பாட்டை முன் வைத்த போது டிராட்ஸ்கி ''நிரந்தரப் புரட்சி'' என்று முன்வைத்தார். மார்க்ஸ்சிடம் கடன் வாங்கிய இந்த சொல்லுக்கான அர்த்தத்தை திரித்து, விவசாயிகளை எதிரியாக்கி புரட்சியின் தொடர்ச்சியை மறுத்தார். இடையாறத புரட்சி, புரட்சிக்கு பிந்திய வர்க்கப் போராட்டத்தை தொடர்வதை அங்கிகரிக்கின்றது. நிரந்தரப் புரட்சி, புரட்சிக்கு பிந்திய வர்க்கப் போராட்டத்தை மறுக்கின்றது. அதாவது போல்ஷ்விக்குகளுடன் இனைந்த பின்பும் கூட, அங்கு கடந்தகால கோட்பாடு மீது சுயவிமர்சனம் செய்யாது, கடந்தகால அரசியலை கைவிடாமை, இதன் அடிப்படையான அரசியலாக உள்ளது. புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் இடைவிடாத புரட்சியாகிய (மாவோ இடைவிடாத புரட்சியாக கலச்சார புரட்சியை முன்னிறுத்திய லெனிஸ்ட்டாக உள்ளார்.) தொடரும் வாக்கப் போராட்டத்தை, டிராட்ஸ்கி தனது நிரந்தர புரட்சிக் கோட்பாட்டில் (பழைய போல்ஷ்விக் அல்லாத வழியில்) நின்று மறுத்தார். இது சராம்சத்தில் அராஜாகவாத அரசியலையும், ஓரே எட்டில் புரட்சியை கடந்துவிடும் கற்பனையையும், புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் வர்க்கப் போராட்டத்தையும் மறுக்கின்றது. நிரந்தரப் புரட்சி வர்க்கப் போராட்டத்தை தொடர்வதை மறுப்பதால், அது மார்க்சியத்தில் இருந்த விலகிச் சென்று விடுகின்றது.




லெனின் டிராட்ஸ்கி பற்றி ''டிராட்ஸ்கி போல்சவியத்தைச் சிதைக்கிறார்; ஏனெனில் ரசிய முதலாளி வர்க்கப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரம் பற்றிய திட்டவட்டமான கண்ணோட்டங்கள் எதையும் உருவாக்குவதற்கான ஆற்றல் அவரிடம் ஒருபோதும் இருந்ததில்லை." ''சிறுகுழு மனப்பான்மையின் மிக மோசமான எச்சங்களின் பிரதிநிதி டிராட்ஸ்கி என்று நாம் அழைத்தது சரியே என்பதை உண்மை மெய்பிக்கின்றது.." '' 'சிறு குழு மனப்பான்மை - இன்மை' என்ற திரையின் பின், வெளிநாட்டில் உள்ள ஒரு குழுவின் நலன்களுக்கு டிராட்ஸ்கி பரிந்து செயலாற்றுகிறார். குறிப்பாக, இக் குழுவுக்குத் திட்டவட்டமான கோட்பாடுகளோ, ரசியாவில் உள்ள உழைக்கும் வர்க்க இயக்கத்தில் எந்த ஒரு அடிப்படையுமோ இல்லை. மின்னுவதெல்லாம் பொன் அல்ல. டிராட்ஸ்கியின் சொற்றொடர்களின் பளபளப்பும் ஆரவாரமும் நிறைய உள்ளது. ஆனால் அவை பொருளற்றவை." என்றார். இதுதான் அவரின் புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில், வர்க்கப் போராட்டத்தை தொடர்வது தொடர்பாக அவரின் அரசியலின் உள்ளடக்கமாகும். புரட்சிக்கு பிந்திய ஒரு நாட்டின், அதவாது சோவியத் புரட்சியின் கடமை என்ன? அதை எப்படி தொடர்வது? என்பதற்கு பதில் இல்லாமல், சோவியத்தில் எதை பேசினாலும் அவை பளபளப்பான போதும், பொருளற்றவையேயாகும்.

இதையே லெனின் தனது அனுபவத்தில், டிராட்ஸ்கி பற்றிய கூற்றில் ''மார்க்சியத்தின் முக்கிய பிரச்சனை எதிலும் டிராட்ஸ்கி ஒரு போதும் ஒரு உறுதியான கருத்தைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருந்ததில்லை. எந்தக் கருத்து வேறுபாட்டிலும் உள்ள விரிசல்களில் நுழைந்து கொள்ள எப்பொதும் அவர் கடும் முயற்சி செய்கிறார். ஒரு சாராரைக் கைவிட்டு இன்னொரு சாராருடன் சேர்ந்து கொள்கிறார்." என்ற லெனின் மதிப்பீடு, புரட்சிக்கு பிந்தி காலத்தில் டிராட்ஸ்கியின் நடத்தை எந்த விதத்திலும் மாறிவிடவில்லை என்பதையே, லெனின் முந்திய மதிப்பீடுகள் மீள மெய்ப்பிக்கின்றன.

1917 ஆம் ஆண்டு பிப்ரவரி 19ம் திகதி லெனின் எழுதினார் "டிராட்ஸ்கி வந்து சேர்ந்தார்; வந்த சேர்ந்த உடனேயே இந்த அயோக்கியர் இடது விம்மர்வால்டினருக்கு எதிராக 'நோவிமிர்' பத்திரிகையில் இருந்த வலதுசாரியுடன் கோஷ்டி சேர்ந்த கொண்டார்.!! இதுதான் டிராட்ஸ்கி!! பார்த்துக் கொள்ளுங்கள்!! அவர் தனது சுயரூபத்தை எப்போதும் வெளிப்படுத்துகிறார் - திரிபுகள், மோசடிகள், இடதுசாரியாக வேடம் போடுவது, வலது சாரிகளுக்கு உதவுவது, தன்னால் இயன்றவரை இதைச் செய்வது..." என்றார் லெனின். இதுதான் புரட்சிக்கு பிந்திய காலத்தில் அவரின் அரசியலாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடர்வதை எதிர்த்து, டிராட்ஸ்கி செயலற்றிய வடிவம் எந்தவிதத்திலம் இதைவிட குறைந்தல்ல. யாராலும் மறுக்க முடியுமா?



டிராட்ஸ்கி எதாவது கருத்து வைத்தால், அது மார்க்சியத்தை விட்டு விலகி நிற்பதை லெனின் காண்கின்றார். 1920 இல் லெனின் "எனது விமர்சனத்துக்குரிய முதன்மையான விசயம் தோழர் டிராட்ஸ்கியின் சிறு பிரசுரமான 'தொழிற்சங்கங்களின் பாத்திரமும் கடமைகளும்' என்பதாகும். மத்தியக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுரைகளுடன் இப் பிரசுரத்தை ஒப்பிடும் போது, அதை மிக எச்சரிக்கையாகப் படிக்கும் போது, அது கொண்டுள்ள ஏராளமான தவறுகளையும் வெளிப்படையான குழப்படிகளையும் கண்டு பெரிதும் வியப்படைகிறேன்...
பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சாரத்தைப் பாதிக்கக் கூடிய ஏராளமான தவறுகளை அவர் செய்துள்ளார் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்." என்றார். மார்க்சியத்தை விட்டு விலகி ஒடும் டிராட்ஸ்கியின் அரசியல் சாரம் என்ன? கட்சி உருக்கு போன்றதாக இருக்கக் கூடாது. கட்சியில் கட்டுப்பாடு இருக்கக் கூடாது. கட்சியில் சிறு குழுக்களின் சுதந்திரம் அல்லது சிறு குழுக்கள் இணைந்து புரட்சி செய்வதை அங்கிகரித்தல். (இதையே இன்று பின்நவீனத்துவம் முன்வைக்கின்றது.) இவை சார்ந்து தனித் தனி பத்திரிகை, தனித் தனி மையங்கள் இருக்க வேண்டும். அரசு வேறு கட்சி வேறாக இருக்கவேண்டும். அரசில் கட்சி பங்குபற்றக் கூடாது. என பலவற்றை மார்க்சியத்துக்கு எதிராக முன்வைத்தார். அரசு பற்றி மார்க்சியம் என்ற கட்டரையில் லெனின் "அரசியல் என்பது அரசு தொடர்பான விவகாரங்களில் ஈடுபடுவதாகும்; அரசு நடவடிக்கைகளின் வடிவமுறைகள், குறிக்கோள்கள், உள்ளடக்கம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதாகும்." என்றார்.

விவசாய வர்க்கத்துடன் கூட்டை மறுத்தல், இதன் இடது அரசியலாகும். தனிநாட்டில் சோசலிசத்தை கட்ட மாறுப்பதும், அதாவது வர்க்கப் போராட்டத்தை தொடர மறுப்பதும், மேற்கு புரட்சி வரை அதை ஒத்திப் போடக் கோருவதன் மூலம், புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் வர்க்கப் போராட்டத்தை தொடர மறுத்து, மறைமுகமாக பூர்சுவா வர்க்கத்திடம் சரணடைவதாகும். இதை மூடிமறைக்க உலகப் புரட்சி பற்றி பள பளப்பாக பொருளாற்று பேசுவது அவசியமாகின்றது. ஆனால் உட்சாரம் எதுவும் அற்றது. உலகப் புரட்சி எதுவும் நடக்காத நிலையில் சோவியத் புரட்சிகர கடமை என்ன என்ற கேள்விக்கு, அரசியல் அற்ற பளபளப்பான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆரவாரத்தால் காலத்தை ஒட்டுவதே ரொக்சியமாகும்.

## ஸ்டாலின் பற்றிய அவதூறுகளின் தோற்றமும், அதன் உள்ளடக்கமும்

கம்யூனிஸ்டுகள் 10 கோடி மக்களை தனது வர்க்கப் போராட்ட பாதையில் கொன்று விட்டதாக, சாவியத் புரட்சி முதல் புரட்சிகான ஆயுதத் தயாரிப்பு நடந்த பிரதேசம் ஈறாக, இன்று ஏகாதிபத்தியம் கூட்டிக் கழித்து கணக்கு காட்டுகின்றது. ஸ்டாலின் மீதும், கம்யூனிஸ்டுகள் மீதும் வைக்கின்ற அவாதூறுக்கு தனித்தனியான ஒவ்வொரு வர்க்கப் நோக்கமும், பின்னனியும் இருந்தபோதும், அவை ஒரே இடத்தில் இருந்து தொடங்கி ஒரே இடத்தில் சங்கமிக்கின்றது. இந்த வெவ்வேறு விதமான அவதூறுக்கான மூலமாக, ஏகாதிபத்திய புள்ளிவிபரத்தை அடைப்படையாக கொள்கின்றனா். இன்று இடதுசாரி முகமுடியின் கீழும், மார்க்சியத்தை திரித்தும், திருத்தியும், சேர்த்தும், பரிசோதித்தும் வளர்ப்பதாக வேடம் போடும் இடதுசாரி போலி மார்க்சியவாதிகள், அடிப்படையில் ஸ்டாலின் எதிர்ப்பு ஊடாக அரங்கில் நுழைகின்றனர். ஸ்ராலினை பகுதியாக மறுப்பதாக, முழுமையாக மாறுப்பதாக பலவண்ணமாக ஸ்டாலின் எதிர்பாளர்கள் முன்வைக்கும், ஸ்டாலின் படுகொலைப் புள்ளி விபரங்கள் (உதாரணமாக பிரான்சில் இருந்து வெளிவரும் அம்மாவில் 15 லட்சம் போல்ஷ்சுவிக் ஸ்டாலின் 1937 இல் படு கொலை செய்தார் என்று, இடதுசாரி பெயரில் கதை அளக்கின்றனர்) ஏகாதிபத்திய புள்ளிவிபரத்தை மிஞ்சி விடுவதன் மூலம், அவதூற்றை அரசியலாக்கின்றனர்.

நாம் ஏகாதிபத்தியம் முன் வைக்கும் பத்து கோடி படுகொலையில், சோவியத்தில் அரசியல் சார்ந்த கைது மற்றும் படு கொலைகள் என்று முன்வைக்கும் புள்ளி விபரங்களை, முதலில் பார்ப்போம்.

| ஆண்டு | கைது செய்யப்பட்டோர் | கொல்லப்பட்டோர் |
|---|---|---|
| 1921 | 35 829 | 9 701 |
| 1922 | 6003 | 1 962 |
| 1923 | 4794 | 414 |
| 1924 | 12 425 | 2 550 |
| 1925 | 15 995 | 2 433 |
| 1926 | 17 804 | 990 |
| 1927 | 26 036 | 2 363 |
| 1928 | 33 757 | 869 |
| 1929 | 56 220 | 2 109 |
| 1930 | 208 069 | 20 201 |
| 1931 | 180 696 | 10 651 |
| 1932 | 141 919 | 2 728 |
| 1933 | 239 664 | 2 154 |
| 1934 | 78 999 | 2 056 |




இதுதான் சோவியத்தில் அரசியல் காரணத்துகாக கைது செய்யப்பட்டதும், கொல்லப்பட்டதாக ஏகாதிபத்தியம், தனது 10 கோடி கம்யூனிச படு கொலை அவதூற்றில் தொகுக்கும் புள்ளிவிபரம். இது 1921 முதல் 1953 வரையிலான காலத்தை உள்ளடக்கிய 33 வருடத் தொகுப்பாக முன்வைக்கின்றனர். அண்ணளவாக 8 லட்சம் பேர் இந்த 33 வருடத்தில் அரசியல் கரணத்துக்காக கொல்லப்பட்டதாக ஏகாதிபத்தியம் குற்றம் சாட்டுகின்றது. இதில் 1921 முதல் 1953 வரையிலான காலத்தில் எதிர்ப் புரட்சி நபர்கள் முதல் குலாக்கள் மற்றும் பாசிட்டுகள் வரை உள்ளடக்கிய அரசியல் கைது மற்றும் கொல்ப்பட்டவர்கள் சார்ந்து, இப்புள்ளி விபரத்தை ஏகாதிபத்தியம் எம்முன் வைக்கின்றது. இடதுசாரிகளின் ஆய்வுக் குஞ்சுகளின் ஸ்டாலின் எதிர்ப்பு பற்றி கற்பனைகளை பார்ப்போம்.

இடதுசாரி மாக்சிய தோல்களுக்கு பின்னால் ஆய்வு செய்யும் ஸ்டாலின் எதிர்ப்பு கம்யூனிச விரோதிகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| 1935 | 267 076 | 1 229 |
| 1936 | 274 670 | 1 118 |
| 1937 | 790 665 | 353 074 |
| 1938 | 554 258 | 328 618 |
| 1939 | 63 889 | 2 552 |
| 1940 | 71 806 | 1 649 |
| 1941 | 75 411 | 8 011 |
| 1942 | 124 406 | 23 278 |
| 1943 | 78 441 | 3 579 |
| 1944 | 75 109 | 3 029 |
| 1945 | 123 248 | 4 252 |
| 1946 | 123 294 | 2 896 |
| 1947 | 78 810 | 1 105 |
| 1948 | 73 269 | - |
| 1949 | 75 125 | 8 |
| 1950 | 60 641 | 475 |
| 1951 | 54 775 | 1609 |
| 1952 | 28 800 | 1612 |
| 1953 | 8 403 | 198 |
| மொத்தம் | 4060 306 | 799 473 |

புள்ளி விபரங்கள், எப்படி இதைத் தாண்டி பல மடங்காக எமக்கு புள்ளிவிபரங்களை முன்வைக்கவும், ஏமாற்றி காலத்தை ஒட்ட முடிகின்றது. இதை வைத்தே கம்யூனிச எதிர்ப் பிரச்சாரத்தை கட்டமைக்க முடிகின்றது. ஏகாதிபத்திய புள்ளிவிபரங்கள் எவ்வளவு மோசடி கொண்ட, எதிர்புரட்சிகரத் தன்மை கொண்டவையாக உள்ள போது, உண்மை எவ்வளவு நேர்மாறனதாக இருக்கும் என்பதற்கு, எமக்கு சுய அறிவே போதுமானது. இடதுசாரி வேடத்தின் பின் கட்டமைக்கும் ஸ்டாலின் அவதூறு எவ்வளவு இழிவனவை என்பதையும், இப் புள்ளிவிபரங்கள் துல்லியமாக எமக்கு தெளிவுபட விளக்குகின்றது. லெனின் உயிருடன் இருந்த போதே, டிரோட்ஸ்கி பாதுகாப்பு மந்திரியாக இருந்த போதே, அரசியல் ரீதியாக எதிர்ப்புரட்சியாளர்கள் கைது செய்யப்பட்டதாகவும், கொல்லப்பட்டதாகவும் ஏகாதிபத்திய புள்ளிவிபரம் காட்டுகின்றது. அதாவது 1921-1923 இல் லெனின் உயிருடன் இருந்த போது, டிராட்ஸ்கி அரசில் இருந்த காலத்தில், ஏகாதிபத்தியம் அரலியல் கைது மற்றும் கொலையை முறையே 46 626 - 12 107 என்று தொகுக்கின்றது. ஏகாதிபத்தியம் விளக்கி அவதூறு செய்யும் அவதூற்று எல்லையைத்




தாண்டி, எதிர்ப்புரட்சியில் ஈடுபட்டு அரசியல் எதிரிகள் கைது செய்யப்பட்டதும், சுட்டுக் கொல்லப்பட்டதும் இயல்பானவைதான். இந்த அரசியல் வன்முறையை டிராட்ஸ்கி "புரட்சிகரத் தொழிலாளர் மத்தியில் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டடையும் ஏற்படுத்தும் வழிமுறைகளில் மட்டுமே அனுமதிக்கத் தக்கதும் கட்டாயமானதுமாகும். இந்த ஐக்கியமும் ஒருமைப்பாடுமே அடக்கமுறைக்கு எதிரான விட்டுக்கொடுக்க முடியாத குரோதத்தினால் அவர்களை நிரப்பும். இதுவே அவர்களது வரலாற்றுப்பணி பற்றி பிரக்ஞையில் அவர்களை அமிழ்த்தி எடுக்கும். அவர்களது திடசித்தத்தையும் தியாக உணர்வையும் அவர்களிடம் ஏற்படுத்தும்." என்று அவர் அரசில் இருந்த காலத்து அரசியல் வன்முறைக்கு, அரசில் இல்லாத காலத்தில் விளக்கம் கொடுத்தார். அரசியல் ரீதியான வர்க்க வன்முறை, வர்க்க சமுதாயத்தில் நிபந்தனையானது தவிர்க்க முடியாது. இதுவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் தொடரும் வர்க்கப் போராட்டத்தை மறுத்து வன்முறை முதல் அனைத்து வழியிலும் போராடும் போதும், அதற்கு எதிராக நிகழ்கின்றது. ஆனால் இந்த வன்முறையில் ஏகாதிபத்தியம் காட்டும் புள்ளிவிபரத்தின் அடிப்படையில் நடந்தவையல்ல. மூலதனம் தனது இழந்து போன சொர்க்கத்தை மீட்க போராடும் போது, வன்முறை இயல்பானது. "அரசும் புரட்சியும்" என்ற நூலில் லெனின் "ஒரு கம்யூனிச சமுதாயத்திற்கு முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து மாற்றமடைவது, கம்யூனிசத்தை நோக்கி அது வளர்வது ஒரு அரசியல் ரீதியிலான மாறுதலடையும் காலகட்டமின்றிச் சாத்தியமில்லை. இந்த காலகட்டத்தில் அரசு புரட்சிகர பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக மட்டுமே இருக்கமுடியும்" என்பதை விளக்குகின்றார். இந்த சர்வாதிகாரம் சுரண்டும் வர்க்கத்துக்கு எதிராக, தனது அனைத்து வகையான போராட்ட வடிவத்தையும் கையாளும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சுதந்திரத்தை மீட்ட போது விபச்சாரம் ஜனநாயகமானது

இனி நாம் ஏகாதிபத்தியம் வைக்கும் மற்றைய புள்ளி விபரங்கள் சிலவற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.
1.சோவியத் யூனியனில் வறுமையில் இறந்தோர்
1921-1922 -50 லட்சம்
1932-1933 -60 லட்சம்
1946-1947 -5 லட்சம்
2.முதலாம் உலக யுத்தம் முதல் சோவியத் புரட்சி மற்றும் உள்நாட்டு யுத்தப் படுகொலை எண்ணிக்கை
1914-1922 -150 லட்சம்
3.கூட்டுபண்ணை உருவாக்த்தில் குலாக்கள் கொல்லப்பட்டதாக ஏகாதிபத்திய கணக்கு
1930 முதல் 1950 வரை 15-25 லட்சம் கொல்லப்பட்டதாக கணக்கு காட்டுகின்றது.
4.உழைப்பு முகாமுக்கு அனுப்பியதாக
1930 - 1953 60 லட்சம்
இதில் 1930 இல் குலாக்கல் 18 லட்சம் என்று ஏகாதிபத்தியம் கணக்கு காட்டுகின்றது.
இந்த உழைப்பு முகமுக்கு இட்டுச் சென்றோரில் 1930 இறப்பு வீதம் 13.3 சத வீதமாகவும், 1933 இல் 6.8 சதவீதமாகவும் இருந்தாக காட்டி 6 முதல் 7 லட்சம் பேர் இறந்தாக ஏகாதிபத்திய புள்ளிவிபரம் கணக்கு கூறுகின்றது.
1940 இல் 32 லட்சம் பேரை யுத்த முனையில் இருந்து அகற்றியது முன் வைக்கின்றது.
1944 இல் யுத்த முனையில் இருந்து அகற்றிய 575 768 பேரில் 146 892 (25.5 சதவீதம்) இறந்தாக கணக்கு கூறுகின்றது.
1944 இல் கிரிமினல் குற்றத்துக்காக 2,28,392 பேரை கட்டாய உழைப்பு முகாமுக்கு அனுப்பிதாகவும் அதில் 44,887 (20 சதவீதம்) இறந்தாக கணக்கு காட்டுகின்றது
5.1940 இல் போலந்து அரசியலில் இருந்த முக்கிய அதிகார வர்க்கம் மற்றும் பொலிஸ் இராணுவத்தை சேர்ந்த 25700 பேரை கைது செய்து 4500 பேரை படுகொலை செய்ததாம்.
6.உணவு பஞ்சத்தில் இறந்தோர் என்ற கணக்கில் ஏகாதிபத்தியம் வைக்கும் புள்ளி விபரம்
சோவியத்தில் 100 -120 லட்சம்
சீனா 300 -400 லட்சம்
கம்பூச்சியா 8 லட்சம்
7. சீனாவில் அரசியல் கொலை 50-70 லட்சம் என்றும், இதில் கலாச்சார புரட்சி 20-30 லட்சம் என்கின்றனர்.
என்று பல கணக்குகளை ஏகாதிபத்தியம் உலகம் முழுக்க தொகுத்து, 10 கோடியாக முன்வைக்கின்றது.

ஏகாதிபத்தியத்தின் இப் புள்ளிவிபரங்கள், இடதுசாரி ஆய்வுக் குஞ்சுகளில் அவதூறு அரசியல் நோக்கத்தை தகர்க்கின்றது. ஏகாதிபத்தியம் வைக்கும் புள்ளிவிபரங்களை விட, இந்த இடதுசாரிகள் புள்ளி விபரங்கள் பலமடங்காக இருப்பது ஏப்படி? உலகையை ஆய்வு செய்யும் மார்க்சியபப்படி, அம்மாவில் 15 லட்சம் போல்ஷவிக் படு கொலை என்கின்றனர். இலங்கையில் இடதுசாரியும் எஸ்.வி. ராஜதுரையின் நன்பருமான றெஜிசிறிவர்தானவின் ஆய்வுப் படி, இரண்டு கோடி பேரை ஸ்டாலின் கொன்றார் என்கின்றர். இது போல் எஸ்வி.ராஜதுரை, அ. மார்க்ஸ், யமுனா ராஜேந்திரன் என்று நீண்ட பட்டியலில் இடம் பிடிப்போர், தமது அவதூறுகள் மூலமே, பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக களத்தில் நீடிக்க முடிகின்றது. ஸ்டாலின் பல பத்து லட்சகணக்கில் படு கொலை செய்தார் என்ற அவதூற்றின் ஆதி மூலத்தில் இருந்தே,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நாம் அதன் பொய்மையின் பின்னுள்ள அவதூற்றை இனம் காணமுடியும். இதில் இருந்தே ஸ்டாலினின் சரியான வர்க்கப் போராட்டத் திசையை நாம் அடையாள காணமுடியும்.

1934 இல் அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் ரடால்ஃப் பெர்ஸ்ட் என்பவன், நாசிகள் ஜெர்மனிய ஆட்சிக்கு வந்த பின்பு, பாசித்தின் தலைமையை அலங்கரித்த கிட்லரை சந்தித்தை தொடர்ந்தே, முதல் படுகொலை அவதூற்றை பாசிசத்திடம் இருந்து பெற்று, சர்வதேசியமயமாகியது. இந்த அவதூறே அனைத்து இடதுசாரிகளின் ஆய்வுகளின் மூலமாக உள்ளது. யார் இந்த வில்லியம் ரடால்ஃப் பெர்ஸ்ட். அமெரிக்காவின் மிகப் பெரிய பத்திரிகை முதலாளியாவன். அமெரிக்கா செனட்சபை உறுப்பினரும், சுரங்க முதலாளியும், பத்திரிகை முதலாளியமான கோடிஸ்லரான ஜார்ஜ் பெர்ஸ்டின் மகன் ஆவன். இவன் 1885 இல் "சான் பிரான்சிஸ்கோ டெய்லி எக்சாமினர்" என்ற பத்திரிகையை பொறுப்பு எடுத்தான். இவன் தந்தை இறந்தவுடன் சகல சொத்தையும் விற்று பத்திரிகை துறையில் முதலிட்டான். பல பத்திரிகைகளை மூலதனத்தின் ஆதிக்கத்தின் ஊடாக "சுதந்திரமாக" வாங்கி, பத்திரிகைத் துறையைக் கட்டுப்படுத்தும் கொழுத்த முதலையானன். பாலியல் வக்கிரம், கிரிமனல் கதைகள், குசுகுசுச் செய்தி என்று பல வக்கிரத்தை, தனது பத்திரிகையின் உன்னதமான "கருத்துச் சுதந்திரமாக்கி ஜனநாயக"மாக்கினான். 1935 உலகில் மிகப் பெரிய கோடீஸ்வரனான். அவனுக்கு அன்றே 20 கோடி அமெரிக்கா டொலர் சொத்திருந்தது. பல நாளேடுகள், 24 வாரச் செய்தி ஏடுகள், 12 வனோலி நிலையங்கள், இரண்டு உலகச் செய்தி சேவைகள், சினிமா கம்பெனிகள் என்று பலவற்றின் சொந்தக்காரனாக இருந்தான். இவனின் செய்தி ஏடுகள் நாள் ஒன்றுக்கு 1.3 கோடி (13 மில்லியன்) பிரதிகள் விற்றன. 4 கோடி (40 மில்லியன்) வாசகர்கள் படித்தனர். அமெரிக்காவில் மூன்றில் ஒருபகுதி மக்கள் இவனின் செய்தி ஊடாகவே "சுதந்திரமான" உலகையும், வாழ்வையும் புரிந்து கொண்டனர். இராண்டாம் உலக யுத்தத்தில் சோவியத்துடன் அமெரிக்க நேச ஒப்பந்த கூட்டமைப்பில் இணைவதை, எதிர்த்து நின்ற ஒரு கம்யூனிச எதிரியாவன்.

இவன் தான் முதல் ஸ்டாலின் அவதுற்றை தொடக்கி தனது பத்திரிகை மற்றும் "கருத்துச் சுதந்திரம்" ஊடாக சர்வதேசியமக்கி வைத்துடன், இன்றைய ஸ்டாலின் அவதூற்றை பொலியும் அறிவுத் துறையினருக்கு கள்ளத் தந்தையாவன். 18.2.1935 ஆண்டு இவனின் "சிகாகோ அமெரிக்கன்" என்கிற செய்தியேடு உக்ரைனில் 60 லட்சம் மக்கள் பட்டினியால் செத்தனர் என்ற செய்தியை முதலில் உலகிற்கு வெளியிட்டான். இதற்கு முன்பே சோவியத் பற்றி பலவிதமான அவதூறுகளை, கேலிச் சித்திரங்களை இப்பத்திரிகை வெளியிட்டது. ஸ்டாலின் கத்தியுடன் இருக்கும் கேலிச் சித்திரத்தைக் கூட, இவன் வெளியிடத் தவறவில்லை. நாசி அரசின் உளவுப்படையான கெஸ்டபோவை ஆதாரமாக கொண்டே, இப்பிரச்சாரம் கட்டமைக்கப்பட்டது. இவை கட்டமைக்க என்ன காரணம். 1925 இல் கிட்லர் எழுதிய "மெயின் கேம்ப்" என்ற நூலில் உக்கிரைன் பற்றிய அபிராயத்தில் இருந்து, அதைக் கைப்பற்றும் பாசிச கனவுகளில் அடிப்படையில் தான், இந்த அவதூறு திட்டமிடப்பட்டது. முதலில் நாசிகள் செய்த அவதூறு எடுபடாமையை போக்க, கிடைத்த கம்யூனிச எதிர்ப்பு "சுதந்திர நயாகனாக" வில்லியம் ரடால்ஃப் பெர்ஸ்ட நாசிகளுக்கு கிடைத்தான். இந்த அவதூற்றை "பெர்ஸ்டின்" பத்திரிகையிலும் தொடங்கினான். இதை நாசி ஆதாரவாளரன "ரான பெர்ஸ்ட்" பிரசுரிக்கா தொடங்கினான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1930 இல் சோவியத்தில் 14 கோடி விவாசயிகளிடையே நடத்தப்பட்ட கூட்டுமையாக்கல் என்ற வர்க்கப் போராட்டத்தில் கம்யூன்கள் நிறுவப்பட்டது. இதனால் விவசாய உற்பத்தில் எற்பட்ட தளம்பல், உணவுப்பற்ற குறையையும், இதனால் தொற்ற நோய்களும் அதிகாரித்தது. இந்த தோற்று நோய்கள் உலகம் முழுக்க இருந்ததுடன், பல கோடி மக்களை அழித்தன. இது சோவித்துக்கும் மட்டும் விதிவிலக்கல்ல. பென்சிலின் ஊசி கண்டுபிடிப்பே இதை கட்டுப்படுத்தும் மாற்று ஊடாகமாக இருந்தது. அதுவரை தொற்று நோய் இயற்கை அழிப்பாக இருந்தது. உற்பத்தில் ஏற்படும் மாற்றம் தளம்பலை உருவாக்கும் போது, தொற்று நோய் தனது விரியத்தை இயல்பில் வெளிப்படுத்தும். பட்டினியும், பஞ்சத்தையும் திட்டமிட்டே உருவாக்கியதாக ஹெரஸ்டின் பத்திரிகை எழுதியதுடன், அதல் பல பத்து லட்சம் மக்கள் இறந்தனர் என்ற அவதூற்றை பொலிந்தனர். இதுதான் முதல் "பல பத்து லட்சம் மக்களை ஸ்டாலின் கொன்றான்" என்ற கற்பனை புனை கதையாகும்.



இந்த கம்யூனிச எதிர்ப்பு நாயகன் வில்லியம் ரடால்.்.ப் பெர்ஸ்ட 1951 இல் இறந்தான். இவன் இறந்த போது, கம்யூனிச எதிர்ப்பு பிரச்சார படையாக 15000 "சுதந்திர அறிவுத்துறை"யினரைக் கொண்ட 100 மிகப் பெரிய பல்துறை செய்தி அமைப்புகளை விட்டுச் சென்றான். இதை சி.ஐ.ஏ முதல் பிரிட்டிஸ் உளவு அமைப்பான எம் 15 வரை ஆதாரமாக கொண்டு, கம்யூனிச எதிப்பிரத்தை கட்டமைத்தனர். 1933 இல் "கிரமிளின் மாளிகையில் கருப்பு நடவடிக்கை" என்ற தலைப்பின் ஸ்டாலின் படுகொலை என்ற அவதுற்றை உள்ளடக்கி இந்த நூல், அமெரிக்காவில் கம்யூனிசத்தை எதிர்த்து வாழ்ந்த உக்கிரைன் எதிர்ப் புரட்சிவாதிகள் நிதியளித்து, இந்நூல் வெளியாகியது. இவர்கள் நாஜிகளுக்கு உதவியதுடன், இவர்களை "ஜனநாயகவாதியாக" அமெரிக்கா காட்டி, உலகுக்கு முன் வேடம் வேறு கொடுத்தனர். மீண்டும் இந்த அவதூறு 1980 இல் ரீகன் மீண்டும் உயிர் கொடுத்தார். அதன் தொடர்ச்சியில் பார்வார்டு பேராசிரியர் "ரஷ்யாவில் மனித வாழ்வு" என்ற நூலை மதிப்புக்குரிய பல்கலைக்கழகம் ஊடாக வெளியிட்டார். அதில் 1930 களின் அவதூறு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. இதில் இந்த நூல் 1986 இல் வெளியாகிய போது, பட்டினிச் சாவு தீடிரென 150 லட்சமாக மாறிவிட்டது. இந்த அவதூறுகளுக்கு பயன்படுத்தப்பட்ட படங்கள் அனைத்தும், 1922 இல் பிரசுரிக்கப்பட்ட, 1918 முதல் 1921 வரையிலான வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தத்தில் நடந்த கோரத்தைதான், இந்த கம்யூனிச எதிர்ப்பு பிரச்சார அவதூறுக்கு ஆவணமாகியது.

இந்த அவதுற்றை கட்டமைத்து பஞ்சபூமியான உக்கிரைனில் இருந்து செய்தி அனுப்புவதாக கூறிய தாமஸ் வாக்கர் உக்கிரைனில் கால்வைத்தது கூட கிடையாது. மாஸ்கோவில் ஐந்தே நாட்கள் தாங்கியிருந்தவர். இதே நேரம் பெர்ஸ்ட் நிருபராக மாஸ்கோவில் தங்கியிருந்த லூயிஸ் பிஷர் 1933 இல் சோவியத் மிகச் சிறந்த அறுவடை செய்தது என்று செய்தயனுப்பிய போது, அது பிரசுரிக்க மறுக்கப்பட்டது. "தாமஸ் வாக்கர்" என்பவர் அமெரிக்காவில் சிறையில் இருந்து தப்பிய கிரிமினல் கைதி. இவனின் சொந்தப் பெயர் ராபர்ட் கிரீனனாகும். இவன் அமெரிக்கா திரும்பிய போது கைது செய்யப்பட்ட நிலையில், தான் ஒருபோதும் உக்கிரைன் சென்றதில்லை என்ற வாக்கு மூலம் அளித்தான். ஆனால் இன்றைய நவீன எழுத்தளார்கள் தமது ஜனநாயக மூகமுடிகளின் பின், இவனின் செய்தியை மூலமாகக் கொண்டே இந்த அவதுற்றை பொழிய ஒருக்காலும் தயங்கியதில்லை.

அடுத்த அவதுற்றின் மூலம் ராபர்ட் கான்குவஸ்ட அடிப்படையாக கொண்டது. "மாபெரும் பயங்கரம்" (1969), "சோகத்தின் அறுவடை" (1986) ஆகிய இரு நூல்கள் மூலம் பிரபலமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கம்யூனிச எதிர்ப்பு போராளியானன். இவர் 1936-1938 விசாரணையின் போதும், நிலப்பிரபுகளான குலாக்குகள் அடிப்படையாக கொண்டு உருவாக்கிய உழைப்பு முகங்களிலும், உக்ரைன் பஞ்சாத்தாலும் பல பத்து லட்சம் மக்கள் இறந்தாக பிரச்சாரம் செய்தார். இவர் இதற்கு ஆதாரமாக அமெரிக்காவில் வாழும் உக்கிரைனிய வலதுசாரிகளை (இவர் நாசிகளுடன் இரண்டாம் உலக யுத்தத்தில் ஒத்துலைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது) ஆதாரமாக கொண்டார். இந்த வலதுசாரிகள் 1942 இல் உக்கிரனில் வாழ்ந்த யூதர்களை அளிப்பதில் முக்கிய பங்கேற்றவர்கள். இவர்களில் ஒருவரான மைக்கேலா எலபிட் 1942 இல் பொலிஸ் தலைவானக இருந்து, யூத படு கொலைக்கு தலைமையேற்றவன். இவன் இரண்டாம் உலக போர்க் குற்றவாளியாக தண்டிக்கப்பட்டவன். இவன் தான் இந்த புதிய அவதுற்றை 1949 இல் சி.ஐ.ஏ தயவில் தொடங்கி வைத்தவன். இந்த நயகர்களை அடிப்படையாக கொண்டே ராபர்ட் கான்குவஸ்ட தனது அவதுற்றுக்கு அடிப்படையாக கொள்ள, இன்றைய ஜனநாயக, மற்றும் ஸ்டாலின் எதிர்ப்பு இடதுசாரிகளின் தந்தையும் மூதாததையாவன். இவன் 1969 இல் எழுதிய நூலில் 1932 க்கும் 1933க்கும் இடையில் 50 முதல் 60 லட்சம் மக்கள் பட்டினியில் இறந்தார் என்றும், இதில் பாதி உக்கிரனில் ஏற்பட்டது என்றார். இந்த பஞ்சம் 1937 வரை நீடித்தது என்றார். பின் இதை 140 லட்சம் பட்டினிச் சாவாக விரிவாக்கினர். இந்த தந்தையிடமே ரீகன், 1988 கம்யூனிச எதிர்ப்பு தேர்தல் பிரச்சாரத்தை எழுதி தர ஒப்படைத்தார். இந்த கள்ளத் தந்தை தான் ஸ்டாலின் எதிர்ப்பு இடதுசாரிகளின் ஆய்வுக்கு, சுதந்திரமான ஜனநாயக ஆண்மாவாக உள்ளவன்.

இந்த கம்யூனிச எதிர்ப்பு கள்ளத் தந்தை, 1978 இல் பிரித்தானிய இரகசிய உளவுத் துறையின் பொய்ப் பிரச்சார ஆய்வுத் துறையின், அதாவது ஐ.ஆர்.டியின் ஒரு கைக்கூலி என்பதை, 27.1.1978 பிராஞ்சு கார்டியன் பத்திரிகை அம்பலப்படுத்தியது. 1947 இல் ஸ்டாலின் எதிர்ப்பு இடதுசாரி கள்ளக் குழந்தைகளை உருவாக்க உருவாகப்பட்ட இந்த நிறுவனம், பிரித்தானிய உளவுப்படையின் பிரிவாக இயங்கியது. இதன் பெயர் கம்யூனிசத் தகவல் குழு. இந்த தகவல் குழுவை அடிப்படையாக கொண்டே ஸ்டாலின் அவதாறு பொழியப்படுகின்றது. இந்த அமைப்பு கலைக்கபப்பட்ட போது, பிரிட்டனில் மட்டும் 100 மேற்பட்ட செய்திப் பத்திரிகைகள் நாள்தோறும் செய்தி பெற்று வந்த, "கருத்துச் சுதந்திர ஜனநாயகம்" அம்பலமானது. இந்த அமைப்பை நிறுவியது முதல் 1956 வரை ராபர்ட் கான்குவஸ்ட இணைந்து கம்யூனிச எதிர்ப்பு கட்டுக் கதைகளை உருவாக்கினான். "மாபெரும் பயங்காரம்" என்ற நூல், 1937 இல் நடந்த அதிகாரப் போட்டி என்பதை ஆய்வுப் பொருளாக கொண்டது. சி.ஐ.ஏ மூலதனத்தை அடிப்படையாக கொண்டு பதிப்பிக்கும் பிரேஜர், இந்த நூலில் மூன்றில் இரண்டு பகுதியை வங்கி, சகல அறிவுத் துறையினருக்குப் இடதுசாரி கள்ள குழந்தைகளை உருவாக்க பரிசு அளித்தது.


அலெக்சாண்டர் சோல்ஜெனித்சின்

அடுத்த மூலம் ருசிய எழுத்தாளர் அலெக்சாண்டர் சோல்ஜெனித்சின் அவரின் நூலான "தி குலாக் ஆர்சிபிலாகோ" மூலம் 1960 களின் இறுதியில் ஸ்டாலின் எதிர்ப்பு கட்டமைக்கப்பட்டது. இவர் கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரம் செய்தமையால் 1946 முதல் எட்டு வருடம் சிறையில் இருந்தவர். ஸ்டாலின் மரணத்துடன் முதலாளித்துவ மீட்சியில் தப்பி "ஜனநாயகவாதி"யனவர். இவர் இராண்டம் உலக யுத்தத்தில் சோவியத் நாசிகளுடன் சமரசம் செய்து சரணடைந்து இருக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார். அத்துடன் நாசி ஆதாரவு அனுதபத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தியதால், துரோகி என்று கண்டிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்டாலினை தூற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை கைவிட்டு அமெரிக்காவுடன் தேன்நிலவை தொடக்கிய சமாதான சக வாழ்வு நாயகன் குருசேவின் துணையுடன், 1962 இல் தனது நூல்களை பதிப்பிக்க தொடங்கினான். ஒரு கைதியின் வாழ்க்கை என்ற "ஜவான் டெனிசோவிச" என்ற "வாழ்வின் ஒரு நாள்" என்பது அவர் பதிப்பித்த முதல் நூலாகும். இதையே குருசேவ் ஸ்டாலின் எதிர் பிரச்சாரத்துக்கு பயன்படுத்தினான். சோல்ஜெனித்சின் நூலான "தி குலக் ஆர்சிபிலோகோ" என்ற அவரது நூலுக்கு 1970 இல் ஏகாதிபத்திய ஆதாரவுடன் நேபால் பரிசு பெற்றது. இவர் ஏகாதிபத்திய நாடுகளின் பிரபலமான "ஜனநாயகவாதி"யாகி, சோவியத் எதிர்ப்பிரச்சாரத்தின் கள்ளத் தந்தையானன். 1974 இல் சோவியத் குடியுரிமையை துறந்து சுவிட்சர்லாந்திலும், பிறகு அமெரிக்காவிலும் குடியேறினார். அவர் ஒரு நாஜி அனுதாபி, ஆதரவாளன் என்பது மறைக்கப்பட்டு, உழைப்பு முகாம் பற்றிய செய்திகள் முதல், பல பத்து லட்சம் படுகொலை செய்திகள் வரை உயிருட்டப்பட்டது. இவன் பல கூட்டங்களின் முக்கிய பேச்சாளன் ஆனான். இவன் வியட்நாம் மீதான அமெரிக்கா ஆக்கிரப்பில், அமெரிக்கா தோற்று ஓடிய பின்பு, மீண்டும் ஆக்கிரமிக்க வேண்டும் என்ற கோரிய கம்யூனிச எதிர்ப்பு "ஜனநாயக"வாதியானன். இந்த ஸ்டாலின் எதிர்ப்பு ஜனநாயகவாதி 40 ஆண்டுகால போர்ச்சுக்கலில் இருந்த பாசிச ஆட்சியை, இடதுசாரி இராணுவ அதிகாரிகள் கவிட்ட போது, உடனடியாக அமெரிக்கா தலையீட வேண்டும் என்று கோரினான். அவனின் உரையில் போர்ச்சுக்கலில் இருந்து ஆபிரிக்கா காலனிகள் விடுதலையடைவதை, அச்சத்துடன் பிதற்றிய ஜனநாயகவாதியாவன். சோவியத்தில் பல பத்து லட்சம் கொல்லப்பட்டது முதல் கட்டாய உழைப்பு முகம் பற்றிய கற்பனைகளை கட்டிவிட்டதுடன், வியத்நாமில் பல பத்தாயிரம் அமெரிக்கர் பிடிக்கபட்டு அடிமையாக்கப்பட்டு கட்டாய உழைப்பு முகங்களில் வதைபடுவதாக தொடுத்த எதிர்புரட்சிகர பிரச்சாரத்தில் தான், கம்யூனிச எதிர்ப்பு "ராம்போ" போன்ற சினிமாக்கள் உற்பத்தியானது.



ராபர்ட் கான்குவஸட் என்பவன் 1961 செய்த கணக்குப் படி 1930 ஆரம்பத்தில் சோவியத்தில் 60 லட்சம் பட்டினி சாவாக இருந்தது. இதே நபர் 1986 இல் அதை 140 லட்சமாக உயர்த்திக் கொண்டார். இவரின் கணக்கு படி 1937 களையெடுப்பு தொடங்க முன்பு குலாக்களான நிலப்பிரபுகளின் கொல்லப்பட்ட எண்ணிக்கை 50 லட்சமாக இருந்தது. களையெடுப்பு தொடங்கிய பிறகு அதாவது 1937-1938 இல் இவ் எண்ணிக்கை 70 லட்சமாக்கினர். (இங்கு பாரிஸ் கம்யூனிச எதிர்ப்பு சஞ்சிகையான அம்மாவில், கார்லீப்னெக்ட் பெயரில் எழுதிய புணைபெயர் ஸ்டாலின் எதிர்ப்பாளர், கொல்லப்பட்டது 15 லட்சம் என்கிறார். இவர் பழைய அந்த கட்டுக் கதையாளனையே மிஞ்சிவிடுகின்றார்.) பின்பு 1939 இல் உழைப்பு முகாமில் 120 லட்சம் என்று கணக்கை கூட்டிக் கொண்டார். இந்த 120 லட்சம் பேரும் அரசியல் கைதி என்கின்றார். இந்த அரசியல் கைதிகளை உள்ளடக்கிய கிரிமினல் கைதிகள் மொத்தமாக, 250 முதல் 300 லட்சம் பேர் சிறையில் அடைக்கப்பட்டனர் என்கின்றார். ராபர்ட் கான்குவஸட் கணக்கு படி 1937-1939 காலகட்டத்தில் 10 லட்சம் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டனர் என்கின்றர். ஆனால் அம்மாவில் எழுதும் கம்யூனிச எதிர்ப்பு நாயகன் 15 லட்சம் கொல்லப்பட்டதாக, கதையை உருவாக்கி, கள்ளத் தந்தையான குருவையே மிஞ்சிவிடும் சீடர்களாகிவிடுகின்றனர். இக்கால கட்டத்தில் ராபர்ட் கான்குவஸட் கணக்கு படி மேலும் 20 லட்சம் பேர் பட்டினியில் இறந்து விட்டனர் என்கின்றார். 1937-1939 களையெடுப்புக்கு பின் கைதியாக 90 லட்சம் சிறையில் இருந்தனர் என்கின்றார். இதை பின் சரிக்கட்ட 1939 -1953 க்கும் இடையில் 120 லட்சம் கைதிகளை கொன்று விட்டனர் என்று புள்ளிவிபரத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரிவாக்கினர். மொத்தமாக அவர் 1930 முதல் ஸ்டாலின் காலம் வரை 260 லட்சம் பேர் கொல்லப்பட்டனர் என்றார். 1950 இல் 120 லட்சம் பேர் சிறையில் இருந்தனர் என்கின்றார்.

இதைப் போலவே அலெக்சாண்டர் சோல்ஜெனித்சினும் புள்ளிவிபரத்தை வெளியிட்டார். 1932-33 பஞ்சத்தால் 60 லட்சம் பேர் இறந்தனர் என்றும், 1936 -1939 க்கு இடையில் வருடம் பத்து லட்சம் பேர் இறந்தனர் என்ற கணக்கு காட்டினர். இடதுசாரி கம்யூனிச ஆய்வை செய்வதாக அம்மாவில் பீற்றும் அந்த நபரின் புள்ளி விபரமும், இதனுடன் விதிவிலக்கின்றி ஒத்துப் போகின்றது. அலெக்சாண்டர் சோல்ஜெனித்தின் கணக்குபடி கூட்டுபண்ணை உருவாக்கம் தொடங்கியது முதல் ஸ்டாலின் இறந்த கால கட்டம் வரை மெதத்தமாக 660 லட்சம் பேரை கம்யூனிஸ்ட்டுகள் கொன்று விட்டனர் என்கின்றார். இது தவிர இரண்டாம் உலகப் போரில் 440 லட்சம் பேர் கொல்லப்பட்டதுக்கும் ஸ்டாலினே பொறுப்பு என்கின்றார். மொத்தத்தில் 11 கோடி மக்கள் சோவியத்தில் கொல்லப்பட்டதாக கூறுகின்றார். அதாவது சனத்தொகையுடன் இது எப்படி பொருந்தும் என்பது கம்யூனிச எதிர்ப்பு அறிவுத்துறையினருக்கு அவசியமற்றவை. அதே நேரம் 250 லட்சம் பேர் சிறையில் இருந்தாக வேறு கணக்கு காட்டினர். இந்த அவதுற்றுக்கு எந்தவிதமான ஆதாரமோ, மூலமோ கிடையாது. இதை மூலமாக்கி ஆதாரமாக்கும் கனவுடன், ஸ்டாலின் அவதுற்றைச் தொடர்ந்து செய்ய கோர்ப்ச்சேவ் இரகசிய கட்சி ஆவணங்களை திறப்பதன் மூலம், கட்டமைத்து வந்த கம்யூனிசத்துக்கு எதிரான அவதுற்றை நிறுவவிரும்பினர். கோர்ப்ச்சேவ் - ரீகனின் வேஷைத்தனத்தில் உருவான, புதிய சுதந்திர செய்தி ஊடகம் கட்டமைக்கப்பட்ட படுகொலை அவதூறுகளை விரிவாக்கியது. இந்த புதிய சுதந்திர செய்தி ஊடகத்தின் கோரிக்கையை ஏற்று, ஸ்டாலின் எதிர்ப்பு கம்யூனிச எதிர்ப்புக்காக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் ஆவணப்பகுதி, ஆய்வுகாக சுதந்திரமாக திறக்கப்பட்டது. இந்த ஆவணம் திறக்கப்பட்டதன் மூலம், கட்டுக் கதையாக உருவாக்கிய கொல்லப்பட்டோ, சிறையில் அடைக்கப்பட்டோர் பற்றிய தரவுகளை உறுதி செய்யும், என்று எல்லா "ஜனநாயக" மற்றும் கம்யூனிச எதிர்ப்பு போலி மார்க்சிய வாதிகளும், ஸ்டாலின் எதிர்ப்பு இடதுசாரிகளும் சாதித்தனர். இந்த ஆவணக் காப்பாகத் தரவுகள் பிரசுரமாக தொடங்கியவுடன், இந்த புள்ளிவிபர கட்டுக் கதையாளர்கள், அதைப் பற்றி வாய் திறப்பதை மறந்து போனர்கள். ஜெம்ஸ்கோவ், டௌஜின், ழெவன் ஜீக் ஆகிய ருசிய வரலாற்று ஆசிரியர்கள் மத்திய கமிட்டியின் ஆவணக் காப்பகத்தை ஆதாரமாக கொண்டு, 1990 இல் அறிவியல் ஆராய்ச்சி பத்திரிகையில் வெளியிடத் தொடங்கினர். இந்த ஆய்வு அறிக்கை வெளிவரத் தொடங்கியவுடன், கம்யூனிச எதிர்ப்பு, ஸ்டாலின் எதிர்ப்பு இடதுசாரி நாயகர்கள் தமது சொந்த முகம் அம்பலமாகத் தொடங்க, வேண்டுமென்றே அதைக் கண்டு கொள்ள மறுத்தனர். உண்மையில் எகாதிபத்திய ஜனநாயகவாதிகள் முதல் மாாக்சிய வேடம் போடும் இடதுசாரி பாதகை கீழ் பிழைப்பு நடத்தவோருக்கு, ஸ்டாலின் எதிர்ப்பு கம்யூனிச எதிர்ப்புகான மூலம், ஆதாரமற்ற புள்ளிவிபரங்களை முன்வைத்து சர்வதேச மூலதனத்தின் ஆதரவுடன் அறிவு துறையினராக இயங்கிய இந்த மூவருமேயாகும். இவர்கள் தான் இந்த புள்ளிவிபர அவதுறுகளின் தந்தைகள் ஆவர். இதில் இருந்தே பலரும் புள்ளிவிபரங்களை தொகுக்கின்றனர். இந்த கம்யூனிச, ஸ்டாலின் எதிர்ப்பு அவதுறை விரிவாக்க இடதுசாரி பாதகை ஒரு புதிய வடிவமாக உள்ளது. சிவப்புக் கொடியை ஆட்டியபடி எப்படி எதிர்ப்புரட்சி கம்யூனிசத்துக்கு எதிராக இயங்குவது போல், இடதுசாரி மாக்சிய பாதைகையின் கீழ் பழைய ஏகாதிபத்திய புள்ளிவிபரங்களை சரிபார்த்து அவதூறை அடிப்படையாக கொண்டு தொகுக்கின்றனர்.




ஏகாதிபத்திய எச்சில்களில் இருந்து, இடதுசாரி வேடம் போட்டு குலைக்கும் ஸ்டாலின் எதிர்ப்பு மார்க்சிய விரோதிகளை இனம் கண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ள, நாம் சோவியத் மக்கள் தொகை ஆய்வில் இருந்து சுயமாகப் பார்ப்போம். கீழ் உள்ள வரைவு 1929 முதல் 1946 வரையிலான சனத்தொகையைக் காட்டுகின்றது.




இது எமக்கு சுயமாக எதை விளக்குகின்றது. சனத் தொகை சீரான அதிகரிப்பைக் காட்டுகின்றது. 1932, 1933 இல் சனத் தொகை அதிகரிப்பு வீழ்ச்சியை, ஒப்பிட்டில் கொடுத்த போதும், பின்னால் அது சீராக அதிகாரித்துள்ளது. இடதுசாரி ஆய்வுப் புலிகள் கூறுவது போல் 1937 முதல் 1938 வரையிலான காலப்பகுதியில் மொத்த சனத் தொகையில் வீழ்ச்சியைக் காட்டவில்லை. மாறாக முந்திய தொகையுடன் சீரான அதிகாரிப்பையே காட்டுகின்றது. ஒவ்வொரு ஆண்டுக்கு இடையிலான அதிகாரிப்பை நாம் கீழ் பார்ப்போம்.

| ஆண்டு | சோவியத் சனத்தொகை கோடியில் | ஆண்டு இடைவெளி | சோவியத் அதிகரிப்பு லட்சத்தில் | அமெரிக்கா அதிகரிப்பு லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1929 | 17.20 | 1929-1930 | 22 | 14 |
| 1930 | 17.42 | 1930-1931 | 17 | 10 |
| 1931 | 17.59 | 1931-1932 | 9 | 8 |
| 1932 | 17.68 | 1932-1933 | 6 | 7 |
| 1933 | 17.74 | 1933-1934 | 10 | 8 |
| 1934 | 17.84 | 1934-1935 | 12 | 9 |
| 1935 | 17.96 | 1935-1936 | 19 | 8 |
| 1936 | 18.15 | 1936-1937 | 31 | 8 |
| 1937 | 18.46 | 1937-1938 | 39 | 10 |
| 1938 | 18.85 | 1938-1939 | 38 | 11 |

இவை வருடத்துக்கு வருடம் சோவியத் சனத்தொகை அதிகாரிப்பை காட்டுகின்றது. இவ் அதிகாரிப்பு 1930-1932 இல் குறைந்து மீண்டும் அதிகாரிக்கிறது. மஸ்கோ சதிவழக்கு நடந்த காலத்தில், இச் சனத் தொகை எந்த விதத்திலும் இடதுசாரி அவதுாறுகள் படி குறைந்துவிடவில்லை. வழக்கமான சனத் தொகை அதிகாரிப்பையே கொண்டு இவை காணப்படுகின்றது. இவை 1946-1956 க்கும் இடைப்பட்ட காலத்தில் அதை வீகிதத்தில் கூட சமமாக இருக்கின்றது. அண்ணளவான சனத் தொகையை யுத்த இழப்புக்கு பின்பாக நீண்ட காலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

| | | | | |
|---|---|---|---|---|
| 1939 | 19.23 | 1939-1940 | 36 | 11 |
| 1940 | 19.59 | 1940-1941 | - | 13 |
| 1945 | —— | 1945-1946 | - | 15 |
| 1946 | 17.39 | 1946-1947 | 1 | 27 |
| 1947 | 17.4 | 1947-1948 | 11 | 26 |
| 1948 | 17.51 | 1948-1949 | 24 | 25 |
| 1949 | 17.75 | 1949-1950 | 25 | 25 |
| 1950 | 18.00 | 1950-1951 | 32 | 26 |
| 1951 | 18.32 | 1951-1952 | 32 | 27 |
| 1952 | 18.64 | 1952-1953 | 31 | 26 |
| 1953 | 18.95 | 1953-1954 | 32 | 29 |
| 1954 | 19.27 | 1954-1955 | 32 | 29 |
| 1955 | 19.61 | 1955-1956 | 34 | 30 |

கொண்டருந்த நிலையில், சனத் தொகை அதிகாரிப்பு ஒரே வீகிதத்தில் அண்ணளவாக காணப்படுகின்றது. இங்கு இவ் அதிகரிப்பில் உள்ள சீரற்ற அதிகாரிப்பு மற்றும் இழப்புகள் கூட வேறுபட்ட ஆண்டுகளில் விதிவிலக்கின்றி காணப்படுவதுடன், அமெரிக்கா உள்ளீட்ட பல நாடுகளுக்கும் பொதுவானது. இவை ஏற்பட நோய்கள், சமூக கொந்தழிப்புகள், சமூக உழைப்புகள், சமூக வெற்றிகள், யுத்தங்கள், இயற்கை அழிவுகள், பெருளாதார நெருக்கடிகள், பொருளாதார வெற்றிகள் என பலவிதமான காரணத்தின் அடிப்படையில் நிகழ்கின்றது.



இடதுசாரி பாதகையின் கீழ் காவடியெடுக்கும் ஏகாதிபத்திய எச்சிலை நக்கும் புத்தீயிவிகள், களையெடுப்பில் லட்சக்கணக்கில் கொன்றதாக அவதுாறுபுரிகின்ற போது, இது அப்பட்டமாக பொய்மையாவதை சனத்தொகை புள்ளிவிபரம் கூட தகர்க்கின்றது. மாஸ்கோ சதி வழக்கு கட்சியின் உயர் பீடங்களிலும், அதைச் சுற்றியிருந்த உயர்மட்டங்களிலும், பூர்சுவா புத்தியீவிகளிடையுமே நடத்தப்பட்டதுடன், அந்த எல்லைக்குள் தான் இவை நிகழ்த்தப்பட்டன. சதியில் உயர்மட்ட அதிகாரப் பிரிவுகள் தான் ஈடுபட்டதுடன், இதில் பரந்துபட்ட மக்களுக்கு எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அறிவுத் துறை சார்ந்த பூர்சுவா வர்க்கம் தான், தனது வர்க்க இருப்புகான போராட்டத்தை நடத்தியது. அதற்கு எதிரான களையெடுப்பில் மிகக் குறைந்த எண்ணிக்கை உடையவர்களே களையெடுக்கப்பட்டனரே ஒழிய, ஏகாதிபத்திய எச்சில்களில் பிதற்றும் எண்ணிக்கையில் அல்ல. அம்மாவில் எழுதும் இடதுசாரி புத்தியீவி 15 லட்சம் பேர் கொல்லப்பட்டனர் என்கின்ற போது (ஏகாதிபத்தியம் 6.7 லட்சம் என்று அரைவாசியாக மதிப்பீடுகின்றது), சனத் தொகையில் எவ்வளவு வீழ்ச்சியைக் காட்டியிருக்கும். இவர்கள் எந்த ஆவணத்தை, அந்த சமூகத்தில் ஆய்வாக கொண்டு இதை முன்வைப்பதில்லை. ஏகாதிபத்திய எச்சில் பருக்கையில் இருந்து வைப்பதற்க்கு அப்பால் எதையும் இவர்கள் சுயமாக கொண்டிருப்பதில்லை. பொதுவான



நீண்ட கால இடைவெளியில் அதாவது 20 வருட இப்புள்ளிவிபரத்தை தொகுப்பதன் மூலம் வளர்ச்சி விதியையும், அதில் சரிவற்ற தன்மையையும் காட்டவும், இதன் ஊடாகவும் அவதுாற்றை நிர்வாணப்படுத்த முடிகின்றது. தேவைப்பட்டால் பிறப்பு விகிதத்தைக் கொண்டும், வேறு நாடுகளுடன் ஒப்பிட்டுக் காட்டும் தரவுகளையும், வரலாற்றின் உண்மை நிலைமையின் மீது சாத்தியம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதை மேலும் அம்பலம் செய்ய, நாம் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை மூலம் இதை மேலும் ஆராய முடியும். அதை ஆராய்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| ஆண்டு | 1918 | 1921 | 1923 | 1927 | 1934 | 1939 | 1952 |
|---|---|---|---|---|---|---|---|
| உறுப்பினர் எண்ணிக்கை லட்சத்தில் | ≅4 | 7.3 | ≅4 | 8.9 | 18.7 | 16 | 60 |

கட்சியை துய்மைப்படுத்திய 1934-1939 இடைப்பட்ட காலத்தில், கட்சியில் இருந்து அண்ணளவாக 2.7 லட்சம் பேர், அதாவது 14.43 சதவீதம் பேர் கட்சியில் இருந்து அகற்றப்படுகின்றனர். இது 1921-1923 இல் கட்சியை துய்மைப்படுத்தும் போது அண்ணளவாக 3.3 லட்சம் பேர், அதாவது 45.2 சதவீதம் பேர் கட்சியில் இருந்து அகற்றப்பட்டனர். 1921-1923 இல் நடந்த கட்சி துய்மைப்படுத்தும் போக்கைவிட, 1934-1939 க்கு இடையில் குறைந்தளவு பேரே கட்சியில் இருந்து அகற்றப்பட்டனர். இவர்களில் பலர் கட்சி வாழ்வில் இருந்து அகற்றியதுடன், ஒரு பகுதியினர் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். 1923 க்கு பிந்திய கட்சி வாழ்வில் ஒட்டிக் கொண்ட சகபயணிகள் முதல் கட்சி விரோதிகள் வரை, நீண்ட பல புரட்சிகர மற்றத்துடன் கட்சியை துய்மைப்படுத்துவது இயல்பானது. இங்கு தவறுகள் இழைக்கப்பட்ட போதும், கட்சி தனது வர்க்கப் பார்வையில் உறுதியாக மேலும் முன்னோக்கிச் செல்ல கட்சி தன்னை புணரமைப்பது அவசியமானது நிபந்தனையானது.

கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் என்ற அவதூறு ஆதாரமற்றது, ஏகாதிபத்திய எச்சிலைக் கொண்டது. கணிசமான பகுதி கொல்லப்பட்டது உண்மை. இதில் ஒரு பகுதி சட்டத்தின் முன் பகிரங்கமாக விசாரிக்கப்பட்டே கொல்லப்ட்டனர். பலர் கட்சி அரசியலில் இருந்து ஒதுங்கிவாழ கோரப்பட்டனர். சிலர் திட்டமிட்ட சதியில் நேரடியாக பங்கு பற்றியவர்கள் கூட, விடுதலை செய்யப்பட்டு இன்றுவரை உயிருடன் உள்ளதுடன், இன்றும் அவர்கள் தமது எதிர்ப்புரட்சி தனத்தை பெருமைபட ஒப்புவிக்கின்றனர். இந்த சதிகளை ஆதாரித்து பெருமைபட பீற்றி முன்வைக்கும் நான்காம் அகில டிராட்ஸ்கிய வெளியிடுகளில், இதை பெருமைபட தொகுக்கின்றனர். ஆயுதம் எந்திய சதி கவிழ்ப்பு முதல் சகல முயற்சியிலும் ஈடுபட்டதை பெருமையுடன் இன்று முன்வைக்கும் போது, அன்றைய மஸ்கோ சதி வழக்கு மீள ஒருமுறை உறுதிசெய்யப்படுகின்றது. "நான்காம் அகில வாக்கு மூலத்தில் இருந்து.." என்ற எனது நூலில் இவைபற்றிய நிறைய தரவுகளை ஆதாரப்படுத்தியுள்ளேன் பார்க்க.

அடுத்து 1930-1932க்கும் இடையிலான சனத் தொகை அதிகாரிப்பில் வீழ்ச்சி பற்றி ஆராய்வது அவசியமாகின்றது. இந்த சனத் தொகை அதிகாரிப்பில் வீழ்ச்சியை ஒப்பிட அமெரிக்க சனத் தொகை வளர்ச்சியையும் ஒப்பிட்டுள்ளேன். அமெரிக்காவும் அதே காலப் பகுதியில் விதிவிலக்கின்றி, அதிகாரிப்பில் சனத் தொகை வீழ்ச்சியைக் கொண்டு காணப்படுகின்றது. இந்த அதிகாரிப்பில் வீழ்ச்சிக்கு வேறுபட்ட காரணங்கள் இருந்த போதும், பொதுவான காரணங்களும் உண்டு. சோவியத் சனத் தொகை அதிகாரிப்பில் வீழ்ச்சியை ஆராய்வது அவசியமாகின்றது.



1930களில் சோவியத்தில் நடந்த திடீர் பாய்ச்சல் சார்ந்த புரட்சி இதற்கு காரணமாகும். சனத்தொகையில் ஐந்தில் நாலு பங்கைக் கொண்ட விவசாயிகள் இடையே நடத்தப்பட்ட கூட்டுப்பண்ணையாக்கல் என்ற கம்யூன்கள், அச் சமூகத்தை உலுக்கியது. இது கிராமப்புற பல அடிமைத்தனத்தை ஒழித்தது. இது பெண்ணை விடுவிக்கும் ஒரு புதிய வடிவமாக வளர்ச்சி பெற்றது. குடும்பங்களில் வழக்கமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


குலாக்கு எதிராக ஆயுதம் ஏந்திய விவாசயப் பெண்கள்

பெண்ணின் பிள்ளைப் பெறும், பெண்ணின் அடிமைப் பாத்திரம், முதன் முதலாக கூட்டுப் பண்ணையாக்கல் மூலம் கேள்விக்குள்ளாக்கியது. பெண் கூட்டுப் பண்ணையில் சுதந்திரமான உழைப்பாளியாகியதன் மூலம், பெண் மீதான ஆணின் பாலியல் ஆதிக்கம், மற்றும் பிள்ளைப் பெறும் கடமை, ஆணுக்கும் பெண்ணுக்கும் புதிய முரண்பாடகியது. இதை பாலியல் ரீதியாக புதிய வடிவத்தை கோரியது. இதனால் பழைய குடும்பம் தகர்ந்து, புதிய குடும்பம் உருவாகின்ற இடைவெளி, குழந்தை பிறப்பை மட்டுப்படுத்தியது. புதிதாக உருவாக்கிய கம்யூன் விரிந்த தளத்தில் உழைப்பை சமூகமயமாக்கியது. புதிய உற்பத்தி சார்ந்து உழைப்பு பரவலானது. இதானல் உழைப்பு ஊக்குவிக்கப்பட்டு, நீண்ட இடை வெளி கடந்து மக்கள் புலம் பெயர்வை புரட்சி தனது உள்ளடக்கமாக்கியது. உழைப்பு அதிகாரிப்பும், நகர்வும் கூட குழந்தை பிறப்பை கட்டுப்படுத்திய முக்கிய காரணமாகும். பொருளாதாரம் ஒரு மாற்றத்தினுடாக தேக்கத்துக்கு உள்ளாகி, மீண்டும் வேகமாக பாய்கின்ற போது, சமூகம் ஒருமுறை குலுங்கி பின் பாய்கின்றது. இது இயல்பில் பழைய குடும்ப இறுகத்தை தளர்த்தி, பின் புதிய இறுக்கமாக்கின்றது. இது குழந்தை பிறப்பை குறைத்து பின் அதிகாரிக்க வைக்கின்றது. இதனால் சனத் தொகை வீழ்ச்சி ஏற்பட்டு பின் தீடிரென அதிகாரிக்கின்றது. பின் குறைந்து சீராகின்றது.

கூட்டுப்பண்ணையாக்கல் அடிப்படையில் பெண்களை விடுவித்தது. ஸ்டாலின் கூட்டுப் பண்ணையை உருவாக்கிய பிரதிநிதிகளின் முன்னணியாளர்கள் முன் பேசிய போது "தோழாகளே, கூட்டுப் பண்ணைகளில் பெண்கள் பிரச்சனை பெரிய பிரச்சினையாகும். உங்களில் பலர் பெண்களைக் குறைத்து மதிப்பிடுவதையும் பரிகசிப்பதையும் நான்னறிவேன். இது தவறு, பெரும் தவறு. ஜனத்தொகுதியில் பாதி மாதர்கள் என்பது மட்டுமல்ல, கவனத்துக்குரிய விஷயம். முதன்மையான பேருண்மை என்னவென்றால், கூட்டுப்பண்ணை இயக்கத்தில், குறிப்பிடத் தக்க திறமைசாலிகளாக பல பெண்கள் தலைமை நிலைக்கு வந்துள்ளனர். இந்த மகாநாட்டைப் பாருங்கள்! பிரதிநிதிகளைப் பாருங்கள்! பிற்பட்டவராயிருந்த பெண்கள் முன்னணிக்கு விரைந்து வந்திருப்பதை நீங்கள் உணர்வீர்கள். கூட்டுப் பண்ணைகளில் மாதர்கள் மகத்தான சக்தியாகவிருக்கிறார்கள்." என்றார் ஸ்டாலின். இது எதைக் காட்டுகின்றது. பெண்களை கிராமப்புற ஆணாதிக்க அடிமையில் இருந்து, கூட்டுப் பண்ணை மீட்டதைக் காட்டுகின்றது. இது பெண் விடுதலையின் வடிவமாக, புதிய சுதந்திர மனிதனாக பெண்ணை உருவாக்கிய போது, பராம்பரிய ஆணாதிக்க குடும்ப உறவுகள் சிதைவை கோருவது இயல்பு மட்டுமின்றி நிபந்தனையுமாகும். இது பாலியல் உறவிலும், குழந்தை பிறப்பிலும் மாபெரும் சரிவை கொடுத்தன் மூலம், சனத்தொகை அதிகாரிப்பில் வீழ்ச்சியைக் கொடுத்தை மேல் உள்ள புள்ளிவிபரம் காட்டுகின்றது. இதை விட்டுவிட்டு கட்டமைக்கும் பொய்களும், போலித்தனமான புள்ளி விபரங்களும் கம்யூனிச மற்றும் ஸ்டாலின் எதிர்ப்பின் அபத்தங்களேயாகும்.

இங்கு பாட்டாளி வர்க்கம் தனது வாக்க சர்வாதிகாரத்தில், தொடர்ந்து நடத்திய வர்க்கப் போராட்டத்தில், எதிரி வர்க்கம் மேலும் தனிமைப்படுகின்றது. அதைப் பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| வீதத்தில் | 1913 | 1928 | 1939 | 1959 |
|---|---|---|---|---|
| தொழிலாளர், ஊழியர்கள் | 17 | 17.6 | 50.2 | 68.3 |
| கூட்டுப் பண்ணை மற்றும் கூட்டு உழைப்பாழிகள் | - | 2.9 | 47.2 | 31.4 |
| தனிப்பட்ட விவாசாயி, சிறு உற்பத்தியாளன் | 66.7 | 74.9 | 2.6 | 0.3 |
| குலாக்கள், மற்றும் பூர்சுவா வர்க்கம் | 16.3 | 4.6 | - | - |

1930 களில் கூட்டுப் பண்ணையாக்கம் என்ற கம்யூன் புரட்சி தொடரும் வர்க்கப் போராட்ட அடிப்படையில், 4.6 வீதத்துக்கு எதிராக நடத்தப்பட்டது. அதவது மக்கள் தொகையில் இவர்களை பிரதிநிதித்துவப்படுத்திய, அண்ணளவாக 80 லட்சம் பேருக்கு எதிராக நடத்தப்பட்டது. இதனால் கூட சனத் தொகை பெருக்கம் கணிசமாக தடைப்பட்டது. இந்த புதிய நிலப்பிரபுத்துவ வாக்கம் மற்றும் 1923இல் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால பொருளாதாரத்ததால் உருவான சொத்துடைய வர்க்கம், அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டு, மக்களின் எதிரியாக இனங்காட்டியதன் மூலம், ஒரு அதிர்வை எதிர் கொண்டதன் மூலம், சமூக உயிர் தொகுதியிலும் பாரிய அதிர்வைச் சந்தித்தன் மூலம், இனப் பெருக்கம் அதிர்வுற்று சனத் தொகை பெருக்கத்தில் தற்காலிக சரிவு ஏற்பட்டதையே, 1930-1932 ஆண்டு புள்ளிவிபரம் நிறுவுகின்றது. மற்றும் கூட்டப் பண்ணையாக்கலில் விட்ட சில தவறுகள் கூட, மேலும் சனத் தொகை பெருக்கத்தில் மந்தத்தைக் கொடுத்தது. இவை எப்படி தாழ்வையும், வளர்ச்சியையும் கொடுக்கின்றது என்பதற்க்கு, அண்மைய உதாரணம் ஒன்றைக் காணமுடியும்.

பிரான்சில் 1999 ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட புயல், சில கிராாமத்தில் சில நாட்கள் மின்சாரத்தை இல்லாதாக்கியது. இதன் விளைவாக இருட்டான காலம் சார்ந்து, அந்தப் பகுதியில் குழந்தை பிறப்பு 26 சதவீதத்தால் திடிரென அதிகாரித்துள்ளது. இதுவே இப்படி



இருக்கும் போது, ஒரு புரட்சி மொத்த மக்களையும் ஒரு சில ஆண்டுகள் உலுப்பும் போது, அதில் ஒரு பகுதி முற்றாக எதிர்நிலைக்கு தள்ளப்படும் போது, மறுபகுதி முன்னிலைக்கு வரும் போது, இவ் அதிர்வு இரு தளத்தாலும், சமூகத்தில் அனைத்து தளத்தையும் பாதிக்கின்றது. இது சனத் தொகை அதிகாரிப்பில் சரிவைக் கொடுத்து, புரட்சி பயனைக் கொடுக்கின்ற போது சனத் தொகை அதிகாரிப்பில் உயர்ச்சியைக் கொடுக்கின்றது. பின்பு சரிவைக் கொடுத்து சீராகின்றது. இதற்கு நிகாராக சீனக் கலாச்சார புரட்சியில் பாடசாலை செல்வது குறைந்து, பின் அதிகாரித்த வீதத்தில் மாறியது. கலாச்சார புரட்சி கிராமப் புற பெண்ணடிமைத்தனம் மீது கொடுத்த அடி, பெண் குழந்தைகள் கல்வி கற்பதை நோக்கி வருவது திடீரென அதிகாரித்தது. புரட்சியின் அதிர்வுதான், சோவியத்தின் 1930-1932 சனத் தொகை அதிகாரிப்பில் ஏற்பட்ட சரிவாகும். இதை காணத் தவறி ஏகாதிபத்திய பிரச்சாரத்தில் இருந்த பொறுக்கி வைக்கும், இடது வேடதாரிகளைப் பற்றி கொஞ்சம் சுருக்கமாக பார்ப்போம்.

## இடது சாரி வேடங்களின் பின்பாக மார்க்சியத்தை வளர்ப்பவர்களின் சொந்த முகங்கள் பற்றி

இனி இந்த இடதுசாரி வேடதாரிகளைப் பற்றி கொஞ்சம் பார்ப்போம். இடதுசாரி மார்க்சிய ஆய்வளராக, ஸ்டாலின் எதிர்ப்பு வாதிகளாக திகழ்ந்த அறிவுத்துறை கோட்பாட்டுளரகளான ரஸ்ஸல், ஜார்ஜ் ஆர்வெல், ஸ்டீபன் ஸ்பெண்டர், ஆர்தர் கீஸ்லர் ஆகியோரின் சொந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகங்கள் 1996 யூலையில் அம்பலமானது. இவர்கள் பிரிட்டிஸ் உளவுத்துறையில் கைக்கூலியாக இருந்து கம்யூனிசத்தை திருத்தி எழுதவும், ஸ்டாலின் மற்றும் கம்யூனிச எதிர்ப்பு போராளியாக இருந்தது உலகையே வியக்கவைத்தது.



விலங்குப்பண்ணை என்ற ஸ்ராலின் எதிர்ப்பு நாவலை எழுதிய சுதந்திர பிரிட்டிஸ் உளவாளியான ஜாாஜ் ஆர்வெல்

இவர்களைப் பற்றி சுருக்கமாக பார்ப்போம். உலகிலும், தமிழிலும் புகழ் பெற்ற மற்றும் நான்காம் அகில டிராட்ஸ்கிகளால் போற்றப்பட்ட ஸ்டாலின் எதிர்ப்பு இலக்கிய ஆவணமான "விலங்குப் பண்ணை"யை எழுதிய, சுதந்திர இடதுசாரி ஸ்டாலின் எதிர்ப்பு எழுத்தளரான ஜார்ஜ் ஆர்வெல், பிரிட்டிஸ் உளவுப்படையில் இயங்கிய கம்யூனிச எதிர்ப்பு இடதுசாரி போராளியாவர். பாசிசம் தனது உருக்கொண்டு உலகை அடக்கி ஆக்கிரமிப்பை செய்து கொண்டிருந்த 1943 இல் தான், விலங்கு பண்ணையை ஸ்டாலின் எதிர்ப்பாக, கம்யூனிசத்தை இழிவுபடுத்த வெளிக் கொண்டு வந்தவன். அடுத்து அமெரிக்காவுக்கும், சோவியத்துக்கும் இடையில் பனிப்போர் தொடங்கி அதுவே தேன்நிலவாக கொப்பச்சேவ்வுடன் கூடியபோது, இவரின் மற்ற நூல் "1984" வெளியாகியது. இந்த நூல் இரண்டையும் பிரபலப்படுத்தி விற்கும் படி, பிரிட்டிஸ் அரசு தனது துதரகங்களுக்கு உத்தரவு இடமளவுக்கு, கம்யூனிச எதிர்ப்பை அடிப்படையாக கொண்டிருந்தது. இங்கு விலங்கு பண்ணையில் வரும் பன்றி மற்றும் நாய்யை கம்யூனிஸ்டுகள் என்று, முஸ்லிம் நாடுகளில் அடையளப்படுத்தி, அந்த நாட்டு மதப் பண்பாட்டுக்கு ஊடாக, பிரிட்டிஸ் துதரகம் அவதூறு செய்தது. பிரிட்டிஸ் உளவுதுறையில் முக்கிய பொறுப்பில் பணியற்றிய செலியா என்ற பெண் 1996 இல் கூறிய விபரத்தில் "1949 இல் ஆர்வெல்லை கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரம் மற்றும் உளவு வேலை தொடர்பாக சந்தித்தேன். அவருக்கு இவ்வேலையில் பெரும் ஆர்வம் இருந்த போதிலும் உடல்நிலை சரியில்லாதால் இயலவில்லை என்று கூறிவிட்டு, பத்திரிகைத்துறையில் உள்ள கம்யூனிச ஆதரவாளர்கள் யார் யார் என்ற பட்டியலைக் கொடுத்தார். தான் ஆள் காட்டிய விசயம் வெளியே தெரிய வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார்." இந்த இடதுசாரி கனவான் தான் "1984" நாவலில் "பெரியண்ணன் உன்னைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான்" என்று பிரபாலமான கம்யூனிச எதிர்ப்பு வாக்கியத்தை உருவாக்கிய மேதை, ஒரு உளவாளி என்பதை சொன்னால் ஸ்டாலின் எதிர்ப்பு கம்யூனிச எதிர்ப்பு உலகம் நம்பிவிடமாட்டாது. ஆனால் அது சந்தி சிரிப்பது என்னவோ வேடிக்கையல்ல. இதுதான் பலரின் சொந்த இரகசிய முகங்கள் ஆகும்.



பிரிட்டிஷ் உளவாளி யான இடது சாரி பெர்டான்டு ரஸ்ஸல்

அடுத்து ரஸ்ஸல் இடதுசாரியாக இருந்தாலும் கம்யூனிஸ்ட் அல்லாத இடதுசாரியாக இருக்க வேண்டும் என்பதில், பிரபு குலத்தில் பிறந்த அவரின் கனவாக இருந்தது. இவரின் பாட்டானர் பிரிட்டிஸ் பிரதமராக இருந்தவர். 1920 இல் லெனினை மொஸ்கோ சென்று சந்தித்த பின்பு "போல்ஷ்விக் கோட்பாடும் நடைமுறையும்" என்ற நூலில், தனது இடதுசாரி அற்பத்தனத்தில் இருந்து மார்க்சிய எதிர்ப்பை வெளியிட்டார். ஒரு கொள்கையில் ஈடுபடுபவர்கள் கொலையிலும் இடுபட தயங்க மாட்டார்கள் என்றும், அந்த வகையில் மதம், கம்யூனிசம், நாசிசம் ஆகிய அனைத்தும் ஒன்றே என்பது இவரின் கருத்து. பின்நவீனத்துவ கோட்பாட்டை உள்ளடக்கி, இது கட்டமைக்கின்றது. ஐயவாதமும் அறியொணாவாதமும் "சிந்தாந்தம்" என்று ஒன்று இல்லாது இருப்பதே ஜனநாயகமும் மற்றும் சகிப்புத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தன்மைக்கும் அடிப்படையானது என்கின்றார். இந்த இடதுசாரி, பாசிசம் தோற்கடிக்கப்பட்ட பின்பு கவலையுற்று "ரசியா மேலை நாடுகளிடம் நிபந்தனையின்றிச் சரணடைய வேண்டும். இல்லையேல் அதனை அணுக்குண்டு வீசி அழித்தவிட வேண்டும்" என்றாரே. கொள்கைகாக வன்முறையில் ஈடுபடக் கூடாது என்றவர், எப்படி இதை கூறமுடிகின்றது? இதையும், இந்த இடதசாரித்தனத்தையும் என்ன என்று சொல்வது.

1960 இல் மீண்டும் ஜனநாயகத்தின் அவதாரமாகி அணு ஆயுத எதிர்ப்பு போராட்டம் செய்தன் தொடர்ச்சியில் கைது செய்யப்பட்டார். அதேபோல் அமெரிக்காவின் வியத்நாம் ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட்டம் நடத்தினர். இவை எல்லாம் கூட பிரிட்டிஸ் உளவுத்துறையின் வழிநடத்தப்பட்டார். இவர் உலகம் போற்றும் மாபெரும் அறிஞர், கனித விஞ்ஞானி, சமூகவியல் ஆய்வாளர், எழுத்தாளர், ஜனநாயகவாதி, நாத்திகர், கல்வியாளர் என்ற எல்லைக்குள் நடந்தன. இவரின் நூல்கள் இன்ற கல்விப் பாட நூலில் இருக்கின்றது. பிரிட்டிஸ் உளவுத் துறை விட்ட அறிக்கையில், தமது சம்பளத்தை பெற்று வந்தற்கான காரணம், அறிவுத் துறை சார்ந்து கம்யூனிச எதிர்ப்பு பிரச்சரம் மற்றும் கம்யூனிச ஆதாரவளர்களை காட்டிக் கொடுப்பதற்காகவே பணத்தைப் பெற்றனர் என்று தெளிவுபடவே முன்வைத்தனர். கம்யூனிச எதிர்ப்பு இடதுசாரி பின்னால் இதுபோன்ற பல வேடங்கள் இருக்கும் வரை, அவர்கள் ஸ்டாலின் எதிர்ப்புடன கம்யூனிச எதிர்ப்பு ஜனநாயகவாதிகளாக உலவுவது தொடரும்.




அடுத்தவன் 30 களில் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்ததுடன், சோவியத்யூனியன் சென்று வந்த கீஸ்லர் ஆவன். ஸ்பெயின் பாசிச எதிர்ப்பு போரில் பங்கு பற்றியதுடன் சிறை சென்ற இவன், சர்வதேச நிர்பந்தம் காரணமாக விடுதலை செய்யப்பட்டவன். அந்த யுத்தத்தில் பாசிச எதிர்ப்பு பத்திரிகையாளராக செயல்பட்டவர். இவரை பிரபலமாக்கிய நூல் "பகலில் இருள்" என்பது ஸ்டாலினை கொடுகோலனாக வருணித்த நூலாகும். புகாரின், ஜிகோவியேவ் போன்றவர்கள் மீது பகிரங்கமான விசாரனை, சர்வதேச பத்திரிகையாளர்கள் முன் நடைபெற்றது. அது தொடர்பாக "அவர்கள் ஏன் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள்?" என்ற கேள்வியை எழுப்பி, அதை மிரட்டி வாங்கினார்கள் என்பதை சொல்லமுடியாது. விசாரனை பகிரங்கமாக நடைபெற்றது. அத்துடன் அவர்கள் தமது செயலை கொள்கையாக விசாரனை மண்டபத்தில் பிரகடனம் செய்தவாகள் அல்லவா. அதை இவர் "அவர்கள் இத்தனை காலம் பொருள் முதல்வாதிகளாக இருந்தார்கள்; எனவே மார்க்சியம் தான் அவர்களுடைய எதிர்ப்புணர்வையே உறுஞ்சி விட்டது" என்றாரே இந்த இடதுசாரி. இது எல்லாம் குற்றத்தை தமது சொந்த பிரகடனங்கள் ஊடாக ஒப்புக் கொண்டதை சகிக்கமுடியாத, ஸ்டாலின் எதிர்ப்பில் பிதற்றியவையே. மேலும் "நாம் முரணற்றவர்கள் அல்ல; முரணற்றவர்களாக மாற வேண்டும் என்பதற்கான முயற்சி நம்மை எங்கே கொண்டு சேர்க்கும் தெரியுமா? அதோ கம்யூனிஸ்டுகளைப் பாருங்கள்!" என்றார். முரண்பாட்டை "உறிஞ்சும்" மார்க்சியத்தை "எதிர்ப்பை உறிஞ்சும்" மார்க்சியமாக விகாரப்படுத்தி காட்டுவதன் மூலம், ஸ்டாலின் எதிர்ப்பு ஒழுங்கமைக்கப்பட்டது. இவர் "தவறிழைத்தவன் தனதுடைய தவறை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்" என்ற எழுப்பும் வாதத்தின் பின்பு, ஸ்டாலின் மீதான கற்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எஞ்சிக்கிடப்பது தெளிவாகின்றது. இந்த புத்திஜீவியும் பிரிட்டிஸ் உளவுத்துறையின் உளவாளியாக, ஸ்ராலினுக்கும் மார்க்சியத்துக்கும் எதிராக அறிவை உற்பத்தி செய்பவனாக, சம்பளப் பட்டியலில் இருந்தது அம்பலமாகியுள்ளது.

அடுத்தவன் பிரிட்டிஸ்சில் இருந்த பிரபலமான இடதுசாரி கவிஞரான ஸ்பென்டர் ஆவர். "என் கவுண்டர்" இதன் அர்த்தம் சந்திப்பு அல்லது மோதல் என்ற பொருளில், அறிவுத்தரம் கொண்ட பத்திரிகையின் ஆசிரிராக இருந்தவர். இப் பத்திரிகைக்கு "பண்பாட்டு சுதந்திரத்திற்கான காங்கிரஸ்" நிதிவழங்கியது. இப்பத்திரிகை அமெரிக்காவின் சி.ஐ.ஏயால் நடத்தப்படுகின்றது என்று, 1960 இல் கனார்க்யூரி ஒப்பியன் என்ற ஜரிஷ் ராஜதந்திரி வெளியிட்ட போது, ஸ்பென்டர் அவருடன் இருந்த அறிவாளிகளும் மறுத்தனர். ஆனால் அமெரிக்கா உளவுத்துறை நாங்களே பணம் கொடுத்தோம் என்று ஒப்புக் கொண்டது. உடனே அவர் எனக்கு எதுவும் தெரியாது என்று கூறி, பத்திரிகையில் இருந்து ராஜினமா செய்தார். ஆனால் இந்த அப்பாவி முற்போக்கு இடதுசாரிக் கவிஞர் பிரிட்டிஸ் உளவாளியாக வேறு இருந்தது இன்று அம்பலமாகியுள்ளது. ராஜினாமா சுதந்திரமான முற்போக்கு கவிஞர் பட்டத்தை பாதுகாக்க என்பதும், தொடர்ந்து சமூகத்தை ஏமாற்றி கம்யூனிச எதிர்ப்பை விரிவாக்கவும் பயன்பட்டது அவ்வளவே.

இவர்கள் நால்வரும் பிரபலமான இடதுசாரியாக அறியப்பட்டது மட்டுமின்றி, அப்படித்தான் அவர்கள் பிரகடனம் செய்தனர். ஸ்ராலினையும், கம்யூனிஸ்ட்டுகளையும் தூற்றி எழுதிய "விலங்குபண்ணை" வெளியிட்ட பின்பு "தான் சோசலிச எதிப்பாளன் அல்ல" என்று கூறிக் கொள்ள பின்நிற்கவில்லை. ஆர்வேல் பிரிட்டிஸ் உளவாளியாக செயல்பட்டதை வெளிக் கொண்ட வந்த பிரிட்டிஸ் உளவு நிறுவன அதிகாரி செலியா "ஆர்வேல் சோசலிசத்துக்குத் துரோகம் செய்யவில்லை. அவர் கம்யூனிசத்தைத்தான் எதிர்த்தார். மக்கள் இதைக் குழப்பிக் கொள்ளக் கூடாது" என்றார். நாங்கள் கம்யூனிசத்தின் எதிரிகள் அல்ல ஸ்டாலின் எதிரிகள் என்போரும் இதைத்தான் குருவின் வழியில் மீள மீள ஒப்புவிக்கின்றனர் அவ்வளவே.




கம்யூனிச மற்றும் ஸ்டாலின் எதிர்ப்பளர்களான .'.ப்ராங்க்.'.பர்ட் மார்க்சியவாதிகளைப் பற்றி சிறுகுறிப்பு ஒன்றைப் பார்ப்போம். முதலாம் உலக யுத்தத்தை இரண்டாம் அகிலத்தின் கட்சிகள் ஏற்று, சமூக தேசியவெறியர்களாகி வர்க்கப்போரட்டத்தை காட்டிக் கொடுத்த போது, லெனின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி, தனது வர்க்கப் போராட்டத்தை நடத்துவதில் ஊன்றி நின்று, அதை நடத்தினர். இதைத் தொடர்ந்து ஏகாதிபத்தியங்கள் சோவியத் மீதான ஆக்கிரமிப்பை நடத்தியதிலும், தோற்று ஓடிப் போன நிலையில், மார்க்சியத்தை, அதன் உள் நெருங்கியும் புகுந்தும் அழிப்பது என்பது அவர்களின் அடுத்த குறிக்கோலாகியது. இதன் தொடர்ச்சியில் தான் .'.ப்ராங்க்.'.பர்ட் மார்க்சியவாதிகள் உருவாகின்றனர். லெனின் உயிருடோ இருந்த காலத்தில், ஏகாதிபத்தியம் தோற்றோடிய நிலையில், 1922 இல் மத்தியில் இந்த .'.ப்ராங்க்.'. பர்ட் மார்க்சியவாதிகள் முதல் கூட்டத்தை நடத்தினர். இந்த காலகட்டத்தில் சோவியத்துக்கு எதிராக, புத்தக அறிவுத்துறை சார்ந்து, நடைமுறையை மறுக்கின்ற, மார்க்சிய அடிப்படைகளை நிராகரித்த நபர்கள், ஒன்றுகூடி மார்க்சியத்தை மறுத்து உருவாக்கிய எழுத்துகளே இதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோட்பாடாகும். இந்த ∴ப்ராங்க்∴பர்ட் மார்க்சியவாதிகளின் நிறுவன ஆய்வுகள் ஏகாதிபத்திய பல்கலைக்கழக ஆதரவும், ஆசியும் பெற்று இணைந்தே இயங்கியது. இங்கு மார்க்ஸ்க்கு இப் பல்கலைக் கழகங்கள் என்ன பரிசைக் கொடுத்தது என்பது, மார்க்ஸ்சின் வரலாறாக உள்ளது. இந்த ∴ப்ராங்க்∴பர்ட் மார்க்சியவாதிகள் பெரும்பாலனோர் பணக்கார யூதர்களால் நிரப்பபட்டு (அதாவது பூனூல் போட்ட பணக்கார பார்ப்பனர்கள் போல்) இருந்தனர். அறக்கட்டளை ஒன்றின் மூலம், வருடம் 30000 அமெரிக்கா டொலரை பெற்று மார்க்சியத்தக்கு எதிராக சொகுசாக வாழ்ந்தபடி எழுதினர். ஜெர்மனியில் பாசிசம் வந்த நிலையில், யூதர்க்கு எதிரான பொதுப்படையான விரிவான தாக்குதாலால், பெரும்பாலனோர் அமெரிக்கா சென்றனர். பாசிசம் தோற்கடித்த பிற்பாடு உடனடியாகவே, 1944 இல் அமெரிக்கா ஜனாதிபதி ட்ருமன் நேரடி உதவியுடன் ∴ப்ராங்க்∴பர்ட் பேறார்க்பைறமர் ஜெர்மன் அனுப்பபட்டு, மீண்டும் ∴ப்ராங்க்∴பர்ட் மார்க்சியம் தனது ஆய்வின் பின் கம்யூனிச, ஸ்டாலின் எதிர்ப்பு பிரச்சாரத்தை கட்டமைத்தனர். அமெரிக்க ஜனதிபதி கம்யூனிச எதிர்ப்பு புத்திஜீவிகள் ஜெர்மனியில் பாதுகாப்பாக தங்கியிருந்து எதிர்ப்பிரச்சாரம் செய்ய, ∴ப்ராங்க்∴பர்ட் மார்க்சியவாதிகளுக்காக சிறப்பு பிரஜாயுரிமை சட்டம் ஒன்றை அமெரிக்கா ஏகாதிபத்தியம் உருவாக்கி, ∴ப்ராங்க்∴பர்ட் மார்க்சியவாதிகளுக்கு இரட்டை பிரஜாஉரிமை வழங்கினர். இந்த ஏகாதிபத்திய ஆதாரவு பெற்ற இவர்களை, இடதுசாரி மாரக்சியவாதிகள் என்று சொல்லி வாலாட்ட பலர் தயாராக உள்ளது.

அதேநேரம் ∴ப்ராங்க்∴பர்ட் மார்க்சியவாதிகளாக இருந்த பலர், அமெரிக்கா ஏகாதிபத்திய அரசில் இணைந்து கொண்டனர். கம்யூனிச எதிர்ப்பை சர்வதேச கொள்கையாக கொண்ட அமெரிக்கா இராஜாங்க அமைச்சில் இணைந்து கொண்டு, அதற்கு முண்டு கொடுக்கும் தூண்களாக இயங்கினர். கிரிச்சைமர் 1955 வரை இராஜங்க அமைச்சில் வேலை செய்தார். மார்க்யூஸெ இராஜாங்க அமைச்சில் 1950 வரை செயல்ப்பட்டார். இவர்கள் இருந்த காலகட்டம் தான் அமெரிகாவில் ஸ்டாலின் எதிர்ப்பும், கம்யூனிச எதிர்ப்பு உச்சாத்தில் இருந்ததுடன், அவர்களை கைது செய்து சிறையில் தள்ளிய காலகட்டமாகும். கார்ல் விட்∴போகல் அமெரிக்கா விசாரனையில் கம்யூனிஸ்ட்டுகளை காட்டி கொடுத்ததுடன், அமெரிக்கா ஏகாதிபத்தியத்துக்கு சார்பாக சட்சியம் கூட அளித்தார். லோவெந்தால் "வாய்ஸ் ஆ∴ப் அமெரிக்கா" என்ற வனோளியில் இயக்குனர் பதவியைப் பெற்று கம்யூனித்துக்கு எதிராக பிரச்சாரத்தில் இறங்கினார்.

மீண்டும் ∴ப்ராங்க்∴பர்ட் மார்க்சியத்தை அமெரிக்க ஜனாதிபதியின் நேரடி உதவியுடன் ஜெர்மனியில் நிறுவிய கோர்க்சைமர் ஜெர்மன் ஏகாதிபத்திய தொலைக்காட்சி, வானொலியில் நாட்டின் பிரதமரான கோன்ராட் அடினாருடன் இனைந்து கம்யூனிசத்துக்கு எதிராக நிகழ்ச்சிகளை நடத்தினர். இந்த ∴ப்ராங்க்∴பர்ட் நிறுவனத்துக்குகான மூலம், யூத எதிர்ப்பை ஆய்வு செய்வதாக வரையறுத்து இருந்த போதும், அவர்கள் பாசிசத்துக்கு முன்பும் சரி பின்பும் சரி, அதை ஒருக்காலும் ஆய்வு செய்யவில்லை. மாறாக மார்க்சியத்தை எதிர்த்தே, மார்க்சியத்தின் பெயரில் மார்க்சியத்தை வீரியமிழக்கும் உள்ளடகத்தை வெளிப்படுத்தினர். மோசடியான கோட்பாடுகளின் பின்பு சொகுசான வாழ்வை,






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




எகாதிபத்திய தயவு பெற்று, அதில் இருந்து மார்க்சிய ஆய்வு, திருத்தம் என்று பலவண்ண வடிவங்களை முன் தள்ளினர். ஆனால் மார்க்சிய தலைவர்கள் எப்படி வாழ்ந்தார்கள். அவர்களின் எளிமையான வாழ்க்கையின் துரும்பைக் கூட இவர்கள் எட்ட முடியாது.

மார்க்சிய தலைவர்கள் தமது தத்துவத்தை நடைமுறை மக்கள் கோட்பாடாக, அதை மக்களுக்குள் பிரச்சாரம் செய்து அதற்காக போராடியபடியே நிறுவினார்கள். மார்க்ஸ் தனது தத்துவத்தை மார்க்சியத்தின் பெயரில் முன்வைத்த போது, நடைமுறை போராட்டத்தில் பங்கு பற்றியபடிதான் முன்வைத்தார். இவரின் எழுத்துகள் பிரசுரிப்பதற்கு தடை, வாழ்வதற்கு தடை, வறுமையில் வாழ நிப்பந்தித்த ஜனநாயக சுதந்திர அரசுகள் ஒடுக்கமுறையை ஒரு சுழற்சியான நீடித்த வாழ்க்கையாக்கினர். பசி, பட்டினி என்று வறுமையில் ஓடஓட துரத்திய ஒருநிலையில்தான், மார்க்சியத்தை உலகுக்கு தந்தார். ஆனால் மார்க்சியத்தை எதிர்த்த நிற்பவர்கள் அரசுகளின் ஆதாரவுடன், அவ் அரசுகளின் முக்கியமான பதவிகளை நிரப்பியபடி, பண நன்கொடைகளுடன், பல்கலைக்கழக உதவியுடன் சொகுசான வாழ்வை வாந்தபடி, நடைமுறையில் இருந்த அன்னியப்பட்டு, நடைமுறை மீது காறி உமிழ்ந்த கோட்பாடுகள் தான் அனைத்தும். ஏங்கெல்ஸ் தனது சொத்தை கைவிட்டு மார்க்ஸ்சுடன் ஒன்று இனைந்து போராடிய போது, மார்க்ஸ்சின் வறுமையில் பங்கு கொண்டு நடைமுறை வாழ்வில் மார்க்சியத்தை வளர்த்து எடுத்தார். லெனின் சொந்த நாட்டில் சிறையிலும் பின்பு நாட்டில் இருந்தால் சிறை படுகொலை என்ற நிலையில், தலைமறைவும் வாழ்விலும் பல நாடுகள் கடந்து வாழும் அரசுகளின் தொடர்ச்சியான நெருக்கடியில் வாழ்ந்தார். ஸ்டாலின் எழைக் குடும்பத்தில் பிறந்து புரட்சியில் பங்கு பற்றிய வாழ்வில் பலமுறை தொடர்ச்சியாக சிறை சென்றதுடன், ஒவ்வொருமுறையும் தப்பிவந்து தலைமறைவாக மக்களுக்குள் போராடிய தலைவர். ஒவ்வொரு நெருக்கடியின் போது மார்க்சியத்தை விட்டு ஓடாது, உறுதியான மார்க்சியவாதியாக லெனினுடன் கைகோத்து நின்றார். இவர் சோவியத் ஆட்சியில் பாசிச யுத்தத்தில் சொந்த மகனை சதாரன பிரஜையாகவே யுத்ததுக்கு அனுப்பிய போது, நாசிகள் கைது செய்து பேரம் பேசிய போது, பேரத்தை மறுத்து சொந்த மகனையே இழந்தார். ஏன் ஸ்டாலின் இறக்கும் வரை போட்டிருந்த ஒரேயொரு குளிர்க்கோட்டை, அவர் 20 வருடங்களாக பயன்படுத்தினர். நம்ப முடியாதவர்கள் இருப்பார்கள், நாம் என்ன செய்யமுடியும். எளிமையான வாழ்வு, மக்களுடன் மக்களாக வாழ்வதில் பற்று, அவரின் உன்னதமான பண்புகளாகும். மாவோ மிக கடினமான உள்நாட்ட சூழ்நிலையில் போராடிய ஒரு தலைவர். சொந்த மகன் சாதாரண பிரஜையாக கொரிய யுத்தத்தில் ஈடுபட அனுப்பிய போது இழந்தார். இன்று மவோவின் மற்றொரு மகன், சீனாவில் சாதாரண ஒரு உணவகத்தில் வேலைசெய்யும் ஒரு தொழிலாளிதான், தலைவர்களின் வாழ்க்கையே கம்யூனிசத்தின் பண்பை தெளிவாக வெளிப்படுத்துகின்றது. மக்களை நேசித்த இத் தலைவர்கள், மிக நெருக்கடியான வாழ்விலும், நெருக்கடியற்ற வாழ்விலும் ஒரே விதமாக வாழ்ந்தார்கள். போராடினர்கள். இதுவே மார்க்சிய தலைவர்களின் சிறந்த பண்பாகும். ஆனால் மார்க்சியத்தை திருத்த, ஆய்வு செய்ய, விளக்க, புகுத்து, விமர்சிக்க புறப்பட்டவர்களின் வாழ்வையே, நாம் மேலே தெளிவாக பார்க்கின்றோம். இவை கூட மிக குறைந்த பட்சம்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொகுக்கப்பட்டவை. இதுபோல் இன்னும் பலரை தொகுக்க முடியும். அதை பின்பு நாம் காண்போம்.

ஸ்டாலினையும், கம்யூனிஸ்டுகளை எதிர்த்து பல வண்ணக் கோட்பாடுகளை இடதுசாரி பெயரில், மார்க்சியம் என்ற பெயரில், மார்க்ஸ்சுக்கு விளக்கம் கொடுத்து வந்த பல வண்ணங்களை, கோட்பாட்டு ரீதியாகவும், நாம் கேள்விகளை உள்ளடக்கி விடுவது சுயமான தேடுதலை இதன் மேல் ஏற்படுத்தும். இதை அடிப்படையாக கொண்டு அனைவரின் சிந்தனைக்கும் உள்ளக வேண்டிய, யாரும் கருத்தின்றி தப்பிச் செல்ல முடியாத சில முக்கியமான பிரச்சனைகளை எழுப்புவது அவசியமாகின்றது.

## ஸ்ராலினை நிராகரிக்கும் கோட்பாடு, மார்க்சிய உள்ளடக்கம் எதுவுமற்ற வெற்றுப் பிதற்றலே.




மார்க்சியத்துக்கு எதிராக திட்டவட்டமாக வெளிப்படுத்தி இயங்க வெளிக்கிட்டுள்ள, பிரான்சில் இருந்து வெளிவரும் அம்மா புரட்டாதி 2000 இதழில், "வன்முறை எழுத்து" என்ற தலைப்பில் ஜெர்மனிய மார்க்சிய தலைவர் கார்லீப்னெக்ட் பெயரில், அவரை அவமானப்படுத்தும் வகையில், புனைபெயரில் மார்க்சியத்தை கோட்பாட்டில் விட்டோடிய ஓடுகாலி ஒருவர், கட்டுரை ஒன்றை எழுதித் தள்ளியுள்ளார். மொழியில் வன்முறை பற்றி எழுதப் போனவர், என் மீதான தனி நபர் தாக்குதலுக்கு பதில் சொல்வதாக பாசாங்கு செய்யப் போனவர், சாருநிவேதா கடந்து என் மீதான (உதாரணம் சோபாசக்தி, இது போல் பல வன்முறைகள் புலம் பெயர் இலக்கியத்தில் உள்ளது) தனி நபர் தாக்குதலுடன் சமரசம் செய்தபடி, வன்முறைபற்றிய கட்டுரையை இடையில் கைவிட்டு, என் மீதான அரசியலற்ற முத்திரை குத்தலில் இறங்கி விடுகின்றார். சாருநிவேதா எனது கோட்பாட்டுக்கு பதிலளிக்க முடியாமல் கண்மூடித்தனமான அவதூற்றை எதிர்ப்பதாக கூறிக் கொண்டு எழுத வெளிக்கிட்ட இக் கட்டுரையாளர், என் மீது அதே பாணியில் எனது கோட்பாட்டுக்கு பதிலளிக்க முடியாது, முத்திரை குத்தலைச் செய்கின்றார். என் கருத்துகளுக்கு பதிலளிக்காத கட்டுரையின் சாரம், என் மீதான மற்றொரு முத்திரை குத்தலை செய்வதன் மூலம் எனக்கு எதிரான பிரச்சாரத்தை சாருநிவேதாவில் இருந்து, வடிவத்தில் வேறுபட்டு செய்துள்ளார். 'வன்முறை எழுத்து' என்று தலைப்புக் கொடுத்து ஏமாற்றியபடி, எனக்கு எதிரான ஒரு முத்திரை குத்தலை திட்டமிட்டுச் செய்துள்ளார்..

இந்த முத்திரை குத்தும் வடிவிலான அரசியலைத் தாண்டி, கட்டுரை கோட்பாட்டு ரீதியாக ஏதவாது சொல்ல முனைகின்றதா என்பதை கேள்வியாக்குவதே, எனது அடிப்படையான உள்ளடக்கமாகும். இங்கு நீங்கள் கருதும் மார்க்சியத்தை அடிப்படையாக கொண்டு கீழ் உள்ளவைகளை ஆராய சவால் விடுகின்றோம். உங்கள் "மார்க்சியத்துடன்" சம்பந்தமில்லாத "மார்க்சியத்துக்குள்" ஸ்ராலினை இழுத்து காலத்தை ஓட்டுவதை விட்டு, நேர்மையாக விவாதிக்கக் கோருகின்றோம். முத்திரை குத்தும் அரசியல், சம்பவங்கள், நிகழ்ச்சிகளை கொண்டு மட்டும் அரசியலை விளக்குவது குருட்டு வௌவால்த்தனமாகும். நீங்கள் முத்திரை குத்தும் வழியில் மறுக்கும் ஸ்டாலின் மார்க்சியம் பற்றி, தனியாக அதன் கோட்பாடுகள் மீது, மாற்றுக் கோட்பாட்டை முன் வைத்து தனியாக விவாதிக்கவும். ஸ்ராலினை சேறடித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




முத்திரை குத்துவதே "மார்க்சியம்" என்றளவுக்கு மார்க்சியத்தை எளிமைப்படுத்தி, சம்பவங்களின் பின் காது மூக்கு வைத்து முத்திரை குத்தி, உயிர்வாழ நினைக்கும் அரசியல், இழிவான நயவஞ்சகத் தன்மை கொண்டவை. அரசியல் ரீதியாக பிரச்சனையை ஆராய்வது அடிப்படையானது. பிரச்சனையை கைவிட்டுச் விவாதிக்காது ஒடுவது பற்றி லெனின் மென்ஷ்விக்குகளுக்கு எதிராக போராடிய போது "கொள்கை ரீதியான பிரச்சனையில் எதிராளியினுடைய ஒரு வாதத்திற்கு பதில் சொல்லாமல் அவன் மீது 'இரக்கம்' காட்டுவதாகச் சொல்வது, விவாதிப்பதாகப் பொருளாகாது மாறாக அவதூறு செய்ய முயல்வது ஆகும்." என்று தெளிவுபடவே விளக்குகின்றார். கீழ் உள்ளவைக்கு கொள்கை ரீதியாக விவாதிக்க, எந்த ஸ்டாலின் எதிர்பாளாரும் தயார் இல்லை என்பதே வரலாற்று உண்மையாகும். இதை யாரும் இனியும் மீறமுடியாது. மார்க்சியம் தனது ஆய்வை இதன் மீது தெளிவுபடவே முன்வைத்துள்ளது என்பதால், இதை விவாதிப்பதை கைவிடுவதே ஸ்டாலின் எதிர்ப்பு இடதுசாரிகளின் ஒரேயொரு தற்காப்பு ஆயுதமாகும்.

☞ "ஸ்ரானிசியம்" என்று கட்டுரையில் பல பத்துத் தரம் சொற்களில் முத்திரை குத்தும் அந்த "ஸ்ராலினிசத்தை" நீங்கள் கருதும் "மார்க்சியம்" மூலம் கோட்பாட்டில் மறுத்து எப்போதாவது, எங்காவது வைக்க முடிந்ததா? முடியுமா?

☞ ஸ்ராலினை எதிர்ப்பது மட்டுமா மார்க்சியம்?

☞ ஸ்ராலினை விவசாய சமூகத்தின் மூர்க்கத்தனத்தின் விளைவாக வகைப்படுத்தும் உங்கள் அரசியலுக்கு, அரசியல் தத்துவார்த்த கோட்பாட்டு விளக்கம் என்ன?

☞ அப்படியாயின் விவசாய சமூகங்களைக் கொண்ட நாடுகளில் நீங்கள் கருதும் "மார்க்சியம்" புரட்சிக்கு வரமுடியாதல்லவா? வந்தால் ஸ்டாலின் மார்க்சியம் தான் நிலவும் அப்படித் தானே? அப்படித் தானே உங்கள் கோட்பாட்டு முடிவு?

☞ உங்கள் "மார்க்சியம்" வரமுடியும் எனின், ஸ்ராலினில் இருந்து எப்படி வேறுபட்ட வகையில் கட்சி, அரசு, வர்க்கங்கள் இருக்கும். அவைக்கு இடையிலான உறவு என்ன? உங்கள் "மார்க்சியம்" எப்படி அதை நடைமுறையில் கொண்டு வரும்?

☞ முதலாளித்துவ சமூகம் தனது சொந்த வர்க்கப் புரட்சியை வன்முறையூடாக நடத்துமா? அல்லது இல்லையா? நடத்தும் எனின் எப்படி? இல்லை எனின் ஏன்?

☞ இதில் இருந்து விவசாய சமூகங்கள் உள்ள முதலாளித்துவ புரட்சி நடைபெறாத நாடுகளில், புரட்சி எந்த வகையில் வேறுபடுகின்றது? வேறுபாடு இல்லை எனின் எப்படி? இருக்கின்றது எனின் எப்படி?

☞ விவசாய சமூகத்துக்கும், முதலாளித்துவ சமூகத்துக்கும் இடையில் புரட்சியை நடத்துவதில் வேறுபாடு இருக்கிறதா? இல்லையா? ஏன்? எப்படி? இதை உங்கள் "மார்க்சியம்" எப்படி விளக்குகின்றது?

☞ பாட்டாளி வர்க்கம் என்பதன் விளக்கம் என்ன? அதன் வர்க்கத் தலைமை எப்படி கட்டமைக்கப்படும்?

☞ தொழிலாளர்களை நேரடியாக கட்சியில் சேர்க்க முடியுமா? முடியாதா? ஏன்?

☞ தொழிலாளருக்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் வேறுபாடு உண்டா? இல்லையா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

☞ புரட்சியில் விவசாயிகளின் நிலை என்ன? விவசாயப் புரட்சி எழுச்சி பெறின், அதை பாட்டாளி வாக்கம் என்ன செய்ய வேண்டும்? விவாசயிகள் ஆயுதம் ஏந்திய தளப் பிரதேசத்தை நிறுவின், பாட்டாளி வர்க்கம் என்ன செய்யவேண்டும்? விளக்குவீர்களா? இங்கு தலைமை பாட்டாளி வர்க்கம் அல்லது குட்டிபூர்சுவா வர்க்கம் கொண்டிருப்பின், இதை தனித் தனியாக எப்படிக் கையாள்வது? இந்த நிலைமைகளில் பாசிசம் அரசின் பொது வடிவமாக இருக்கும் போது, தொழிலாளர் போராட்டம் எப்படி இருக்கும்?

☞ உலகளவில் ஆயுதப் போராட்ட வடிவங்களின் அனுபவங்களை, ஏற்றுக் கொள்கின்றீர்களா? இல்லையா? கொரில்லாப் போராட்டம் முதல் அரசின் பலவீனமான பிரதேசத்தில் இருந்து பலமான பிரதேசத்தை சுற்றி வளைக்கும் வடிவங்களை, ஒரு பாட்டாளி வர்க்க புரட்சியில் பயன்படுத்த முடியுமா? இல்லையா? ஏன்?

☞ பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்றால் என்ன? இது யாரை ஒடுக்கும்? எப்படி ஒடுக்கும்? இங்கு அழிக்கப்பட்ட வர்க்கம் புதிதாக உருவாகுமா?, உருவாகாதா? எப்படி? என்?

☞ புரட்சியில் ஒடுக்கப்படும் வர்க்கம் புரட்சிக்கு பின்பு என்ன செய்யும்? அவ்வர்க்கம் புரட்சி செய்த கட்சியில் ஊடுருவுமா? இல்லையா? இல்லை எனின் ஏன்? இந்த வர்க்கங்கள் தனது நலனை அடைய கட்சியை எப்படி எல்லாம், எந்த வடிவங்களை எல்லாம் கையாளும்? விளக்குவீர்களா?

☞ எப்படி, எதன் வழியில் அரசு மற்றும் வர்க்கங்கள் ஒழிக்கப்படும்? இதற்கு தலைமை தாங்குவது யார்? தலைமை பல கட்சி சார்ந்து இருக்குமா? எப்படி?, ஏன்? இதன் வர்க்கம் என்ன?

☞ புரட்சிக்கு பிந்திய கம்யூனிச சமூகம் வரையிலான சமுதாயத்தில் எதிர் புரட்சி நடக்கும் வாய்ப்பு உண்டா, இல்லையா? இல்லை எனின் ஏன்? எப்படி?

☞ எதிர்ப் புரட்சி நடக்கும் வாய்ப்பு இருப்பின் எதன் வழியில் நடக்கும்.? எப்படி? ஏன்? இதை பாட்டாளி வர்க்கம் எப்படி எதிர் கொள்ளும்?

☞ சோவியத்திலும், சீனாவிலும் 1950 மற்றும் 1970 களின் இறுதியில் எதிர்ப்புரட்சி நடைபெற்றதை ஏற்றுக் கொள்கின்றீர்களா? இல்லையா? இல்லை எனின் எதிர்ப்புரட்சி இந்த நாடுகளில் எப்போது ஏற்பட்டது. அக்கால கட்டம் எது? அதற்கு பிந்திய அவ்வரசுகள் முதலாளித்துவமா? அல்லது எது? இதை விளக்குவீர்களா?

☞ கட்சிக்குள் எதிர்ப் புரட்சி அணிகள் இருப்பார்களா, இல்லையா? இல்லை எனின் முரண்பாடுகள் எதன் அடிப்படையிலானவை? முரண்பாடுகள் புரட்சிகரமானவை எனின் கட்சி உருவான காலம் முதல் அது ஒரு நியதியா? பகை முரண்பாடாக இவை மாறியதில்லையா? சர்வதேச திரிபுகள் கட்சிக்கு வெளியில் உருவானதா அல்லது உள்ளும் உருவாகுமா? இது புரட்சிக்குப் பின் விதிவிலக்கா?

☞ புரட்சிக்கு முந்திய பிந்திய கட்சியில் வேறுபாடு உண்டா? புரட்சிக்கு முந்தி கட்சிகளில் புரட்சிக்கு எதிரான கோட்பாடு உருவாகும் எல்லாக் கட்சியிலும், வரலாற்றிலும் காணப்படும் போது, புரட்சிக்கு பிந்திய கட்சியில் அது அதிகமாகவே இருக்குமல்லவா? இதை மறுக்கின்றீர்களா? எப்படி? ஏன்?

☞ புரட்சியில் பங்கு பற்றும் ஒருவர், வாழ் நாள் முழுக்க சரியான புரட்சிக்காரனாக இருக்க முடியுமா? இருக்க முடியும் எனின் இயங்கியலா? எப்படி? புதிய சமூக முரண்பாடுகள் ஏற்படாதா?

☞ புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் பல கட்சி ஆட்சி இருக்க முடியுமா? புரட்சிக்கு வரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போது ஏற்படும் பல கட்சிகளின் ஐக்கிய முன்னணி தொடர்ச்சியாக நீடிக்க முடியுமா? எது வரை நீடிக்க முடியும்? இந்த நீட்சி தகர்கின்ற போது முரண்பாடு வன்முறையாக வளர்ச்சி பெறுமா? பெறாதா? ஏன்? எப்படி? இதை பாட்டாளி வர்க்கம் எப்படி கையாளும்?

☞ பாட்டாளி வர்க்கம் பல கட்சியை கொண்டிருக்க முடியுமா? முடியாதா? முடியும் எனின் வர்க்கத்தின் கட்சி என்பது என்ன? வர்க்கம் வேறுபட்ட கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்த முடியுமா? கட்சி என்பது ஒரு வர்க்கத்தின் கட்சியாக இருக்கும் போது, வர்க்கம் பல கட்சியை பிரதிநிதித்துவம் செய்ய முடியுமா? எப்படி? ஏன்? இங்கு கட்சி வர்க்கத்தை பிரதிபலிப்பதில்லையா?

☞ புரட்சிக்கு பிந்திய சமுதாயத்தில் பல கட்சி முறை இருப்பின் தேர்தலும், அதன் ஜனநாயகமும் எப்படி இருக்கும் அதாவது பல கட்சிகள் மக்களிடம் சென்று வாக்கு கேட்கும் முறை (முதலாளித்துவ பாராளுமன்ற முறை வடிவில்) இருக்குமா? இல்லை எனின் ஜனநாயகம் எப்படி பாதுகாக்கப்படும்? அப்படியெனின் பாட்டாளி வாக்க சாவாதிகாரம் என்றால் என்ன?

☞ பல கட்சியை யார் ஏற்றுக் கொள்வது? அதன் வரையறையை யார் தீர்மானிப்பது? இது புரட்சிகர கட்சி அல்லது பிற்போக்கு கட்சி என்பதை எது, எவை வரையறுத்து, யார் கட்டுப்படுத்துவது?

☞ பல கட்சி முறையில், பல கட்சிகள் காலத்துக்கு காலம் தமது பொருளாதார அடிப்படையை வைத்து போராடுமா? அது எப்படி என்ன பொருளாதாரமாக (வர்க்க அடிப்படையில்) பொதுவாக வகைப்படுத்துவீர்களா? இதன் அடிப்படையிலா தேர்தலில் நிற்க்கின்றது? வாக்குறுதியைக் கொடுக்கின்றது?. விளக்குவீர்களா?

☞ ஜனநாயகம் என்றால் என்ன? சோசலிச சமூகத்தில் ஜனநாயகம் எப்படி இருக்கும்? யார் கட்டுப்படுத்துவார்கள்? பல கட்சியின் ஜனநாயக எல்லை என்ன? அதை யார் தீர்மானிப்பது?

☞ இலக்கியம், கலை... போன்ற துறைகள் எப்படி இருக்கும்? இங்கு பாட்டாளி வர்க்க தலையீடு இருக்குமா? இருக்காதா? அல்லது இவை வர்க்க வகைப்படுத்தலுக்கு அப்பாற்பட்டதா? விளக்குவீர்களா?

☞ கோட்பாட்டு விவாதம் என்று எதை கருதுகின்றீர்கள்? சம்பவங்கள், நிகழ்ச்சிகளை தொகுப்பது கோட்பாட்டு விவாதமா? சம்பவங்களும், நிகழ்ச்சிகளும் ஒரு கோட்பாட்டு வடிவத்தில் அல்லவா இருக்கின்றது. இல்லையா? எப்படி? அதை உங்களால் விவாதிக்க முடியுமா?

☞ ஏகாதிபத்தியம் தேசங்களின் தேசியத்தை அழிக்கின்றதா? இல்லையா? இதற்கு எதிராக பாட்டாளி வர்க்கம் போராடுவது சரியானதா? இல்லையா? இல்லை எனின் எப்படி? சரியெனின் எப்படி போராடுவது?

☞ தேசிய முதலாளித்துவத்தை, ஏகாதிபத்திய தரகு முதலாளித்துவமும், தேசம் கடந்த பன்நாட்டு நிறுவனங்களும் அழிக்கின்றதா இல்லையா? அப்படியெனின் பாட்டாளி வர்க்க நிலை தேசிய முதலாளித்துவத்தின் பால் என்ன? இதை எதிர்ப்பதா? ஆதரிப்பதா? எதிர்ப்பது எனின் ஏன்? ஆதரிப்பது எனின் எப்படி?

☞ ஸ்டாலின் கால ஆட்சி, அதிகார வர்க்க ஆட்சி என்றால், எப்படி நீங்கள் வேறுபடுகின்றீர்கள்? அதாவது அதன் கோட்பாட்டு உள்ளடக்கம் என்ன? அரசு வடிவத்தில் எப்படி, எதனூடாக எப்படி அரசை மாற்றியிருக்க வேண்டும்? நீங்கள் ஆட்சியில் இருந்தால் எப்படி எதைச் ஸ்ராலினில் இருந்து வேறுபட்டுச் செய்திருப்பீர்கள்? ஸ்டாலின் ஒரு போராட்டத்தை செய்திருப்பின் எப்படி இதை கையாளுவீர்கள்? அதிகாரத்தை கைப்பற்றும் வடிவமாக மாறின் என்ன செய்திருப்பீர்கள்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

☞ சோவியத்யூனியனில் 1930 களில் விசாரணைக்கு உள்ளான போல்சுவிக் தலைவர்கள், எப்படியான போராட்டத்தை கட்சியில் நடத்தினர்? கட்சிக்கு வெளியில் எப்படியான போராட்டத்தை நடத்தினர்? கட்சிக்குள்ளும், வெளியிலும் நடத்திய போராட்டம் ஜனநாயக மத்தியத்துவத்தை அடிப்படையாக கொண்டிருந்ததா? எப்படி? அவர்கள் வன்முறை சார்ந்த வடிவங்களை கையாண்டார்களா? அல்லது இல்லையா? வன்முறையை தயார் செய்ததாகவும், அதில் பங்கு பற்றியதாகவும், அதில் ஈடுபட்டதாகவும் கொடுக்கும் இன்றைய வாக்கு மூலம் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? ஏன்? அவர்கள் கட்சியில் வைத்து போராடியவை என்ன? கட்சியில் தோற்ற போது, அதை எப்படி தொடர்ந்து கையாண்டனர்.

☞ புரட்சி எல்லா நாடுகளிலும் ஒரே நேரத்தில் ஏற்படுமா? எப்படி? இல்லாத பட்சத்தில் ஒரு நாட்டில் உருவாகும் புரட்சியை முன்னெடுப்பதா இல்லையா? எப்படி? ஏன்?

☞ அடுத்து "பின்நவீனத்துவம்" மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார வடிவத்துக்கு பொருத்தமில்லை என்பது, ஒரு தத்துவ விளக்கமா? எப்படி? பின்நவீனத்துவம் ஒரு வர்க்கத்தினை பிரதிபலிக்கின்றது எனின், அதன் வர்க்க மூலம் என்ன? அதன் மீதான கோட்பாட்டு விவாதங்கள் என்ன?

☞ பின்நவீனத்துவம் ஐரோப்பாவில் "ஒரு பகுதியின் வர்க்கப் பிரிவின் 'முரண்பாடுகளை' இயல்புகளை சொல்ல எழுந்த சிந்தனை.." என்று சமரில் தமிழரசன் முன்வைத்த விளக்கம் ஒரு பகுதி மக்களின் வர்க்க முரண்பாட்டை விளக்கி விடுகின்றதா? எப்படி? ஒரு பகுதி வர்க்க முரண்பாட்டை எப்படி விளக்கியது? அது எந்த வர்க்கத்தை எப்படி பிரதிநிதித்துவம் செய்தது? அது எந்த வர்க்கத்தை எதிர்த்து எப்படி விளக்கியது? பின்நவீனத்துவம் மார்க்சியத்துக்கு எதிராக உருவானதா? இல்லையா? பின்நவீனத்துவத்துக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் இடையில் என்ன உறவு? எப்படி? என்ன வேறுபாடு? ஒரு பகுதி வர்க்கப் பிரிவின் பின்நவீனத்துவம் விளக்கியது எனின், விளக்கிய வர்க்கத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் என்ன உறவு இருந்தது? இது மூன்றாம் உலக நாட்டுக்கு ஏன் பொருந்தாது?

☞ பின்நவீனத்துவம் ஒரு கோட்பாடாக, கலவையாக வைக்கப்படும் போது, அது எப்படி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றது என்பதன் தத்துவார்த்த ஆய்வுகளை வைக்க முடியுமா?

☞ இலக்கியம் பற்றி உங்கள் கருத்தை எனது கட்டுரை மீது முன்வைக்கலாமே? அதை விட்டு விட்டு முத்திரை குத்துவதில் அரசியல் பிழைப்பு அவசியம் தானா?

☞ இலக்கியம் வர்க்கம் கடந்ததா? இல்லையா? ஏன்? எப்படி? வர்க்க அடிப்படை கொண்டது எனின் வர்க்கப் போராட்டத்துக்கும், வர்க்க சர்வாதிகாரத்துக்கும் உட்ப்பட்டதல்லவா? இல்லை எனின் நாசிய, ஆணாதிக்க..... இலக்கியங்களை எப்படி, எந்த சர்வாதிகாரம் கட்டுப்படுத்தும்? இதை நீங்கள் கருதும் மார்க்சிய வழியில் முன் வைக்கவும். நீங்கள் கருதும் மார்க்சியத்துடன் சம்பந்தம் இல்லாத ஸ்ராலினை இழுத்து, அதை வைத்து காலத்தையும், கதையையும் ஓட்ட வேண்டாம்.

☞ மறு வாசிப்பு என்பது மார்க்சியமா? பின்நவீனத்துவமா? மார்க்சியம் முன்வைக்கும் விமர்சனம், சுயவிமர்சனத்துக்கு பதில் பின்நவீனத்துவ வாசிப்பு, மறுவாசிப்பை உங்கள் மார்க்சியம் எப்படி ஏற்றுக் கொள்கின்றது.? விமர்சனம், சுயவிமர்சனம் எப்படி உங்கள் மார்க்சியத்தில் தவறாகி மறுவாசிப்பு மார்க்சியமானது? விளக்க முடியுமா?

1.5 மில்லியன் (15 லட்சம்) போல்சவிக்குகள், இலக்கியவாதிகள், புத்திஜீவிகளை ஸ்டாலின் கொன்றார் என்று அடித்து சத்தியம் செய்கின்றீர்கள். நல்லது. 15 லட்சம் பேரைக் கொன்றார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற தரவுக்கு உங்கள் அடி மூல ஆதாரம் என்ன? போல்சவிக் கட்சியில் நீங்கள் குறிப்பிடும் கொலை நடந்த காலத்தில், எத்தனை லட்சம் பேர் கட்சி உறுப்பினராக இருந்தனர்? எத்தனை லட்சம் புத்திஜீவிகள், இலக்கியவாதிகள் இருந்தனர்? தனித்தனியாக எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பதை அந்த மூல ஆய்வு கொண்டிருக்குமல்லவா? அதை அலட்டாமல் கொல்லாமல், யார் எங்கே? எப்போது? சோவியத் ஆவணக் காப்பகத்தில் ஆய்வு செய்து, எப்போது? முன்வைத்தனர் என்பதை முன்வைக்கவும்? கடந்த கால நிகழ்ச்சிகள் அனைத்தும் ஆவணமாக இருப்பதால், அதை அடிப்படையாக கொண்டே நீங்கள் தரவுகளை தொகுக்கின்றீர்கள் எனின், அதை நேர்மையாக வைக்கவும்? இல்லை உத்தேசம் எனின் அது ஏகாதிபத்திய எச்சில் தெறிப்பில் இருந்து தொகுப்பது அல்லவா? கொல்லப்பட்டோர் ஆவணம் அழிக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் கூறுவீர்கள் எனின், அதன் ஆதாரம் என்ன?

☞ ஸ்டாலின் கால கட்டத்தை எப்படி வரையறுக்கின்றீர்கள்? அது சோசலிசம் இல்லை என்றால் அது சுரண்டல் அரசல்லவா? சுரண்டல் அல்லாத, சோசலிசமல்லாத ஒரு வர்க்க சமுதாயம் நிலவ, நீடிக்க முடியுமா? நிலவ முடியும் எனின் அதன் வர்க்க ஆய்வு என்ன? சீனா பற்றிய நிலைப்பாடு என்ன? ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்றதா? இல்லையா? எப்படி? சம்பவங்கள் அல்ல இங்கு கோட்பாடுகளைக் கோருகின்றேன்? முன்வைக்க முடியுமா?

☞ ஸ்டாலின் கால கட்டத்தில் நன்மைகள் இருக்கவில்லை. இராண்டாம் உலகப் போரில் நாசிகளை தோற்கடித்த நிகழ்ச்சிகளை எல்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அல்லது சோவியத் தீமைகள் எல்லாம் ஸ்டாலின் மீதும், நன்மைகள் எல்லாம் ஸ்ராலினுக்கு தொடர்பு இல்லை என்கின்றீர்களா? இதன் தத்துவார்த்த விளக்கம் மற்றும் அடிப்படை என்ன?

☞ 1960 களின் குருசேவ்வின் திரிபு வாதம் தொடர்பாக சர்வதேச கம்யூனிஸ் கட்சிகளுக்கிடையில் நடந்த கோட்பாட்டு விவாதம் மீதான, உங்கள் மார்க்சிய விவாதம் என்ன? இதன் மீதான உங்கள் கோட்பாட்டு விரிவாக்கம் என்ன?

☞ புரட்சிக்கு பின்பு புரட்சியின் வடிவம் என்ன? அது எப்படி, எதன் வழியில் நிகழும்? புரட்சிக்கு பின்பு புரட்சியை பாதுகாப்பது, புரட்சியை நடத்துவதை விட கடினமானது என்ற மார்க்சிய விதியை எப்படி? நீங்கள் விளக்குகின்றீர்கள்? இங்கு பண்பாட்டு, கலாச்சார புரட்சி அவசியமா, இல்லையா. இல்லை எனின் ஏன்? எப்படி புரட்சியை தொடர்வது?

☞ புத்தக புத்திஜீவி மாாக்சிய வாதிக்கும், நடைமுறை மார்க்சியவாதிக்கும் உள்ள வேறுபாடு என்ன? எப்படி இதை வகைப்படுத்துகின்றீர்கள்?

☞ மார்க்சியம் என்றால் என்ன? அதன் வரையறை என்ன? யார் மார்க்சியவாதி? அதன் வரையறை என்ன? ஒரு மார்க்சியவாதி எதை அடிப்படையாக ஏற்றுக் கொண்டு எதைச் செய்ய வேண்டும்?

☞ பின்நவீனத்துவத்தை எதிர்க்க வெளிக்கிட்டு, அதுவாக மாறி விளக்க வெளிக்கிட்ட பரிதாபம் வேடிக்கையானது. விளிம்பு மனிதன் பற்றி கோட்பாட்டில் அல்ல, நடைமுறை விளக்கத்தில் எதிர்க்க கிளம்பி, பின்பு விளிம்புக்கு உதாரணம் கொடுக்க பின்நிற்கவில்லை. கிட்லர், ஸ்டாலின் கூட விளிம்பு மனிதர்கள் என்று அவரின் மார்க்சியம் கூறத் தயங்கவில்லை? விளிம்பை புதிய மார்க்சிய அகராதியில் இணைத்த பெருமை அவரைச் சாருக! விளிம்பு என்பது என்ன? விளிம்பு ஒரு பொருளாக சுயமாக இருக்க முடியுமா? ஒரு பொருளில் விளிம்பு இருக்க முடியுமே ஒழிய, விளிம்பு சுயமாக இருப்பதில்லை அல்லவா! நீங்கள் ஸ்டாலின் அல்லாத மார்க்சிய அகராதியில் இணைத்த விளிம்பு மனிதன், எதன் விளிம்பு மனிதன்? வர்க்கத்தின் விளிம்பு மனிதனா? இனத்தின் விளிம்பு மனிதனா? சாதியின் விளிம்பு மனிதனா? ... எதன் விளிம்பு மனிதன்? எப்படி? இங்கு வர்க்க பகுப்பாய்வை பின்நவீனத்துவத்துக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாரைவார்த்துக் கொடுப்பது அல்லவா இவரின் மார்க்சியமாகி விடுகின்றது.

☞ கிட்லரையும், ஸ்ராலினையும் ஒப்பிடும் சாருநிவேதாவை எதிர்த்து கட்டுரைக் குறிப்பு எழுத வெளிக்கிட்டவர், அதையே மீளச் செய்வது ஸ்டாலின் எதிர்ப்பின் அரசியல் முடிவாகும். அதை அவர் "சாருநிவேதா மட்டுமல்ல றயாகரன் கூட பேசுவது கிடையாது" என்று ஸ்டாலின் கால நடவடிக்கைகளை சுட்டிக் காட்டி, சாருநிவேதா ஸ்ராலினையும் கிட்லரையும் ஒப்பிட்ட அதே பாணியில் மீள ஒப்பிட்டு ஒப்புவிக்கின்றார். நீங்கள் கருதும் ஸ்டாலின் கால விடயங்களை சாருநிவேதா பலமுறை உங்களைவிட அதிகமாக பேசியிருக்க, அதை என்னுடன் சேர்த்து ஒப்பிட்டு பூச் சுற்றுவது ஏன்? இதைத் தான் இந்த மார்க்சிய விரோத கும்பல் எனக்கு எதிராக முன்னிறுத்த, அதையே நீங்கள் மீள எனக்கு எதிராக முன்வைக்கின்றீர்கள். ஏகாதிபத்திய ஸ்டாலின் எதிர்ப்புக்கும், உங்கள் எதிர்ப்புக்கும் இடையில் வேறுபாடு இல்லாத போது, ஸ்ராலினை எதிர்ப்பதில் சாருநிவேதாவுடன் நீங்கள் ஒன்றுபட்டு நிற்கின்றீர்கள். இப்படி இருந்தபடி, சாருநிவேதா ஸ்டாலின் பற்றிய உங்கள் பார்வை சார்ந்து, ஸ்டாலின் கொடுமைகளை பேசவில்லை (அவர் ஏகாதிபத்திய எல்லையில் முழுமையை பேசுகின்றார் அல்லவா!) என்றவுடன், என்னுடன் இட்டுக் கட்டுவது மகா மோசடித்தனமாகும். என்னுடன் எந்த விதத்திலும் நெருங்கி வர முடியாத, ஏகாதிபத்திய கழிசடை பண்பாட்டு இலக்கியவாதியான சாருநிவேதாவை, என்னுடன் இணைத்து காட்டுவதும், உங்களுடன் ஸ்ராலினை எதிர்ப்பதில் உடன்படும் அவரை மூடித் திரித்துக் காட்டுவது ஏன்? உங்களுக்கும் அவருக்கும் உள்ள வேறுபாடு, சொல்லுகின்ற வடிவத்திலேயே ஒழிய உள்ளடக்கத்தில் அல்ல.

☞ நீங்கள் குறிப்பிடும் 15 லட்சம் படுகொலை முதல் ஏகாதிபத்தியம் சொல்லும் கம்யூனிச பத்து கோடி படுகொலை வரை 'இரயாகரன் பேசவில்லை' என்பது தவறானது. நாங்கள் அதைப் பற்றி பேசுகின்றோம். ஆனால், அதை நாங்கள் உங்கள் மார்க்சியத்தை விட்டோடும் ஓடுகாலி அரசியலில் இருந்தல்ல? நாங்கள் மார்க்சிய கோட்பாட்டின் அடிப்படையில் நடைமுறைகளை ஆய்வு செய்து சுயவிமர்சனம், விமர்சனம் என்ற அடிப்படையில் எல்லாவற்றையும் ஆய்வு செய்கின்றோம். இந்த வகையில் எமது ஆய்வு சர்வதேசிய மயமானவை. இதற்கு யாரும் இது வரை கோட்பாட்டு ரீதியாக பதிலாளித்ததில்லை.

மாறாக அவதூறுகள் மூலம் தூற்றுவதே அதன் வக்கிரமாகவும், அதன் உள்ளடக்கமாகவும், அதன் அரசியலாகவும் வெளிப்படுகின்றது.

இக் கட்டுரை எழுத உதவிய நூல்கள்


1.L'économie mondiale 1820 - 1992 -analyse et statistiques
2.புதிய கலாச்சாரம்
3.L' union soviétique - Denis Brand -1987
4.L'EVENEMENT DU JEUDI - staline... - 7.1988 -ஸ்ராலினுக்கு எதிரான சிறப்பு இதழ்
5.L'HISTOIRE - october 1917 - la revolution russe - le communisme ebranle le monde -இலக்கம் 206- சோவியத் புரட்சிக்கு எதிரான சிறப்பு இதழ்
6.L'HISTOIRE -les crimes du communisme -cent millions du morts? -இலக்கம் 247 கம்யூனிசத்துக்கு எதிரான சிறப்பு இதழ்
7.L'ECONOMIE DE L'URSS - PIERRE Carriere -1984
8.ஸ்டாலின் -எஸ்.இராமகிருஷ்ணன்
9.ஸ்டாலின் பிரச்சினை -பரிமாணம்
10.மாபெரும் விவாதம்
11.டிராக்ஸ்கி வாழ்க்கை வரலாறு - கதிர் ராமசாமி
12.ரஷ்யப் புரட்சி இலக்கிய சாட்சியம் -எஸ்.வி.ராஜதுரை
13.இரு முக்கிய முடிவுகள் -த.மா.அ.க.இ.பொ.க (மா.லெ) தமிழ்நாடு
14.சோவியத் யூனியனின் உடைவு -றெஜிசிறிவர்தனா
15.மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை -ஜார்ஜ் தாம்சன்
16.மார்க்சிய லெனிய மாவோ சிந்தனை நூல்கள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், வன்முறையும் யாருக்கு எதிராக கையாளப்படுகின்றது?

## இந்த உலகை ஆளும் ஜனநாயகவாதிகளுக்கு எதிராகவும், அதை பதுகாக்கும் புத்திஜீவிகளுக்கும் எதிராகவே




இந்த உலகத்தில் ஜனநாயகம் என்பது மூலதனத்தின் சுதந்திரம்தான். இதற்கு இசைவாகத் தான் கருத்துகள் முதல் அனைத்தும் உருவாகக்கப்படுகின்றன. இந்த ஜனநாயக உலகத்தின் வெவ்வேறு காலகட்ட சுதந்திரத்தின் உரிமைபற்றி, மூலதனம் முதல் பாகத்தில் மார்க்ஸ் அம்பலப்படுத்துவதைப் பார்ப்போம்.

"அமெரிக்காவில் தங்கத்தையும் வெள்ளியையும் கண்டு பிடித்தது, பழங்குடி மக்கள் ஏழ்மைப் படுத்தப்பட்டு சிறைப் படுத்தப்பட்டு, அச்சுரங்கங்களிலே புதைக்கப்பட்டது. கிழக்கு இந்தியப் பகுதிகளை அடிமைப்படுத்திக் கொள்ளை அடித்து, கருப்பர்களை வேட்டையாடும் கானகமாக ஆப்ரிக்கா மாற்றப்பட்டது.... 17வது நூற்றாண்டின் தலையாய காலனி ஆதிக்க நாடாக இருந்தது: துரோகம், லஞ்சம், படுகொலை, அற்பத்தனம் இவற்றின் அசாதாரணமான கதையாகும், ஜாவாவிற்கு அடிமைகளைப் பெறுவதற்காக, மனிதர்களை அவர்கள் திருடிய முறை குறிப்பிடத்தக்கது. மனிதத் திரடர்களுக்கு இதற்காகப் பயிற்சி அளிக்கப்பட்டது. திருடன், தரகன், விற்பனையாளன் ஆகியோர்., இந்த வியாபாரத்தில் முதன்மையான வியாபாரிகளாக இருந்தார்கள். திருடப்பட்ட இளைஞர்கள் அடிமைக் கப்பல்களுக்கு அனுப்பப்பட தயாராகும் வரை அவர்கள் செலிபெஸ் தீவில் இரகசியப் பாதாளச் சிறைகளில் தள்ளப்பட்டனர்... ஜாவாவின் பாஞ்ஜீவாக்கி மாநிலத்தில் 1750 இல் 80000 மக்கள் இருந்தனர். 1811 இல் 8000 மக்களே இருந்தனர். எவ்வளவு இனிய வாணிபம்?



...புராட்டெஸ்டென்ட் மதத்தின் கண்ணியமிக்க காவலர்களான நியூ இங்கிலாந்தின் புனிதர்கள், 1703 ல் தங்கள் சபையில் நிறைவேற்றிய சட்டங்களின்படி ஒரு சிவப்பு இந்தியனுக்கு 40 பவுன் விலை நிர்ணயித்தனர். 1720 ல் ஒவ்வொரு மண்டைத் தோலின் விலையும் 100 பவுன்னாக உயர்ந்தது. 1744 ல் மாசாசூசெட்ஸ்பே ஒரு குறிப்பிட்ட சிவப்பு இந்திய இனத்தை கலக்காரர்கள் என்று பிரகடனம் செய்த பின்பு விலைவாசி பின்வருமாறு இருந்தது. 12 வயது அல்லது அதற்கு மேற்பட்ட ஆணின் மண்டைத்தோல் 100 பவுன். ஆண்கைதி: 105 பவுன். பெண்கள் மற்றும் குழந்தை கைதிகள் 55 பவுன். பெண்கள் மற்றும் குழந்தைகளின் மண்டைத்தோல் 50 பவுன். .... வேட்டை நாய்களையும், மண்டைத்தோல் உரித்தலையும், 'கடவுளாலும் இயற்கையாலும் தனக்கு அளிக்கப்பட்ட சாதனங்கள்' என்று பிரிட்டிஷ் பார்லிமென்ட் பிரகடணம் செய்தது. இந்திய கஜானவை நிரப்ப 1866 ல் ஒரிஸ்ஸா மாநிலத்தில் மட்டும் பத்து லட்சத்திற்கும் அதிகமான இந்துக்கள் பட்டினியால் கொல்லப்பட்டனர்." இவை உலக வரலாற்றின் ஜனநாயக சுதந்திரத்தின் சில பக்கங்கள். இவைதான் இன்று பொதுவான வாழ்வு முறையாகும். மனித அடிமைத்தனம் வடிவங்களில் மாறியதற்கு அப்பால், அதன் விளைவுகள் மாறிவிடவில்லை. அதாவது முன்பு அடிமைத்தனமும் ஈவு இரக்கமற்ற படுகொலைகளும் ஆதிக்க நாட்டில் மட்டும் ஜனநாயகமாக சுதந்திரமாக இருந்தது, இன்று மனித அடிமைத்தனமும், ஈவு இரக்கமும் இன்றி ஏழ்மையாக்கி கொன்று போடும் நகரிகமும் உலக ஜனநாயகமாகியுள்ளது. அடிமைத்தனமும், மரணமும் மேலும் மேலும் எண்ணிக்கையால் அதிகரித்து கோரமாகி கொடூரமாகியுள்ளது. மூலதனத்தின் குவிப்பு மிகவும் நசுக்காக, மறைமுகமாக மக்களைச் சுரண்டி, நகரிகரிகப்படுத்தியுள்ளது. இதன் விளைவால் நாள் தோறும் ஆயிரக்கணக்கில் மக்கள் மடிகின்றனர். ஆனால் இதன் குற்றவாளிகள் ஜனநாயகமான நகரித்தால் அடையாளம் காணப்படுவதில்லை. அதை செய்பவனே மற்றவன் மேல் அதை சுமத்துவதுடன், அவனையே குற்றவாளியாக்கின்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏழைகளுக்கும் இடையிலான வித்தியாசம் 30க்கு ஒன்று என்று இருந்தது, 1990 இல் 60க்கு ஒன்றாகவும், 2000 இல் 74 க்கு ஒன்றாக அதிகரித்துள்ளது. 1993 இல் ஒரு நாளைக்கு ஒரு டொலர் வீதம் பெற்று வறுமையில் வாடியோர் 130 கோடியாக இருந்தது 1998 இல் 150 கோடியாக அதிகரித்துள்ளது 1960 இல் இந்த அடிமட்ட பிரிவைச் சேர்ந்த 20 சதவீத மக்கள் உலக வருமானத்தில் பெற்றது 2.3 சதவீதமட்டுமே. இது 1996 இல் 1.1ஆக குறைந்து போனது. 120 கோடி வறிய மக்கள் 1990 இல் 130 கோடி டொலரை கொண்ட ஏழ்மை, 1998 இல் 120 கோடி டொலராக குறைந்து வறுமை சமூகமயமாகி அதிகரித்துள்ளது. இந்த வறுமையில் சிக்கியுள்ளோரில் பெரும் பகுதி பெண்களும் ஆவர். இவர்கள் நாள் ஒன்றுக்கு 70 டொலரை உற்பத்தி செய்வதுடன், உலக உற்பத்தியில் 78 சதவீதத்தை பூர்த்தி செய்கின்றனர். ஆனால் உலக வருமானத்தில் 6 சதவீதத்தையே பெறுகின்றனர். இதிலும் நேரடியாக பெறுவதோ 3 சதவீதத்தையே. 55 கோடி மக்கள் இரவு பட்டினியுடன் படுக்கின்றனர். உலக சுகாதார அமைப்பின் அறிக்கைப்படி இன்று வருடம் 76 லட்சம் குழந்தைகள் பிறந்த முதல் கிழமைக்குள் இறக்கின்றனர். இதில் 40 வீதம் உணவு இன்மையால் இறக்கின்றனர். அதாவது பிறக்கும் 1000 குழந்தையில் 57 இறக்கின்றது. பிறக்கும் போதும் பின்புமாக ஒரு கோடி குழந்தைகள் இறக்கின்றனர். 50 லட்சம் குழந்தைகள் வலது குறைந்து வாழத் தொடங்குகின்றனர். 15 லட்சம் குழந்தைகள் தாய்பால் இன்மையால் வருடா வருடம் இறக்கின்றனர்.




யுனிசேவ் அறிக்கையின் படி ஒவ்வொரு நாளும் 1600 பெண்கள் குழந்தையை பெறும் போது இறக்கின்றனர். இது வருடம் 5,85,000 பேராக உள்ளது. இன்று குழந்தை பிறக்கும் போது 10 லட்சம் பெண்கள் இந்த ஏகாதிபத்திய அமைப்பால் வருடாவருடம் கொல்லப்படுகின்றனர். உலகில் 20 முதல் 50 சதவீதமான பெண்கள் பாலியல் வதைக்கு உட்படுத்தப்படுகின்றனர். உலகில் 22 லட்சம் பெண்கள் மாசு அசுத்தத்தால் வருடாவருடம் இறக்கின்றனர். ஆரம்பக் கல்வியை உலகில் ஆண்கள் 90 சதவீதம் பெற பெண்கள் 75 சதவீதமே பெறுகின்றனர். மேற்கு நாட்டில் உள்ள வாழ்நிலையை பெற்று வாழ முடியாது இறந்து போகும் ஒவ்வொரு மனிதனின் இறப்பும் ஜனநாயகப் படுகொலையாகும். இது ஆயுள் முதல் அனைத்துக்கும் பொருந்தும். இது எத்தனை கோடி!





இதற்கு காரணம் என்ன? வருட வருடம் கோடிக் கணக்கில் கொல்லப்படும் ஏழை மக்களின் ஜனநாயகம் பற்றி யார் பேசுகின்றார்கள். ஸ்ராலின் இவர்க்களைப் பற்றி பேசினர், போராடினர். இவர்களுக்கு எதிரான சுதந்திர ஜனநாயக சுரண்டல் அமைப்பை நிறுவ விரும்பியவர்களின் பரமவிரோதியாக இருந்தார், வாழ்ந்தார். இன்று கோடி கோடியாக மறைமுகமாக மூலதனக் குவிப்பில் கொன்று போடும், ஜனநாயகத்தின் கடும் எதிரிகள் நாம். இதை வேர் அறுப்பதில் தொடங்கி, இதை பாதுகாக்க விரும்புபவர்கள் மேல் சர்வாதிகாரத்தை ஏவுவது, வன்முறையைக் கையாள்வது, மரணதண்டனையை விதிப்பது வரை எந்தவிதமான பின் வாங்கலும், பாட்டாளி வர்க்க போராட்ட வரலாற்றில் வர்க்கப் போராட்டத்தை மூலதனத்திடம் தரைவார்ப்பதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்